23 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733



REALTY STUDIO
சென்னை, கொடைக்கானல் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் நிலம், மனை, வீடு, விற்க, வாங்குவதற்கான தொடர்புகளுக்கு
416.315.9397
realtystudio24@gmail.com

நதி 23 | பாலம் 23 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | DECEMBER 01, 2013

# போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தும் பிரித்தானிய பிரதமர்

இலங்கை அதிபர் மகிந்த இராஜபக்சா மார்ச் 2014 இற்கு இடையில் ஒரு சுதந்திரமான விசாரணையை ஆரம்பிக்காவிட்டால் பிரித்தானிய அரசு ஐக்கிய நாடுகள் சபையினூடாக ஒரு சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் என பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் இலங்கையில் இருந்து திரும்பிய பின்னர் லண்டனை தளமாக கொண்டு வெளிவரும் 'Asian Lite' பத்திரிகைக்கு அளித்த பிரத்தியேக செவ்வியில் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய பிரதமர் இலங்கையில் 2009 இல் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் இறுதி நாட்களில் பெருமளவு தமிழர்கள் கொல்லப்பட்டது தொடர்பாக ஒரு சுயாதீன விசாரணை நடைபெற வேண்டும் என்ற தனது கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளார் என 'Business Standard' என்னும் ஊடகம் நவம்பர் 28, 2013 இல் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் இக்கோரிக்கையை ஏற்கனவே மறுதலித்து தான் முன்னர் தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற மாதிரி உண்மையை கண்டறிய ஒரு விசாரணை குழு அமைப்போம் என கூறியது. ஆனால் இதுவரை எதுவுமே செய்யவில்லை.

பிரித்தானிய பிரதமர் அந்த பிரத்தியேக செவ்வியில் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் நாடு முழுவதுமே மனித உரிமை விடயத்தில் பெரும் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். அங்கு உண்மையான பேச்சு சுதந்திரம் ஏற்பட வேண்டும். பத்திரிகை சுதந்திரம் ஏற்பட வேண்டும். ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். மனித உரிமைக்காக குரல் கொடுப்போர் தாக்கப்படுவது நிற்பாட்டப்பட வேண்டும் என்றார். பிரித்தானிய பிரதமர் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சேர்ந்து ஒரு பிரகாசமான இலங்கையை வருங்காலத்தில் உருவாக்க உழைக்க வேண்டும் என்றார். இரண்டு இனங்களுக்கும் இடையே உண்மையான நல்லுறவு ஏற்படவேண்டும் என்றார்.

நான் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து ஒரு கிழமைக்கு மேல் சென்றுவிட்டது. அங்கு பார்த்த விடயங்கள் இன்னமும் என்னை பயமுறுத்துவதாகவும் (haunt), ஊக்குவிப்பதாகவும் (Inspire) இருக்கிறது. இலங்கையின் வடபகுதிக்கு நான் மேற்கொண்ட விஜயம் மிகவும் சுவாரசியமானது (fascinating). ஒருவர் பலவிதமான விளக்கங்களை (briefings) பலர் சொல்லக் கேட்கலாம். ஆனால் அவர் தானே சென்று அக்காட்சிகளை காண்பது ஒன்றுக்கும் நிகராகாது. தன்னை பலர் பொதுநலவாய அமைப்பின் தலைவர்களது மாநாட்டில் பங்குபற்ற வேண்டாம் எனக் கேட்டார்கள். நான் பங்குபற்றினால் அது இலங்கை அரசு வடக்கில் செய்யும் செயல்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பதாக அமையும் என்றார்கள். ஆனால் நான் அவர்களுக்கு செவிசாய்க்கவில்லை. நான் அங்கு சென்றபடியால்தான் அங்கு என்ன செய்ய வேண்டும் என்பதை எனது கண்களால் கண்டேன். அதை இப்போது வலியுறுத்துகிறேன் என்று பிரித்தானியப் பிரதமர் கூறினார்.



உள்நாட்டுக் கலவரங்கள் முடிவடைந்து இலங்கைக்கு இப்போது மிகவும் நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதை அவர்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பிரித்தானியாவின் பார்வையை உலகின் மீது திணிப்பதற்காக இதை நான் கூறவில்லை. இதை பொதுநலவாய நாடுகளின் விழுமியங்களை வலியுறுத்தும் முகமாக நான் கூறுகிறேன். எனக்கு நன்றாகத் தெரியும், 'Asian Lite' பத்திரிகையின் வாசகர்களுக்கு இலங்கையில் நடைபெறுவது அவர்களது சொந்த பிரச்சினை (deeply personal). இது ஒரு முகவரி அற்ற கொள்கை விளக்கமல்ல (faceless diplomacy). இது உங்களுடைய சொந்தக் குடும்பம், உறவினர்கள், எதிர்காலம் பற்றிய விடயம். இதனால் நிச்சயமாக என்னை நம்புங்கள். நான் என்ன சொல்கிறேனோ அதை என்னால் முடிந்தமட்டும் எனக்குரிய அதிகாரங்களை பாவித்து செய்வேன். இலங்கையில் இதுவரை நடந்தவற்றை விடுத்து இனி ஒரு நல்ல எதிர்காலத்தை இலங்கை மக்களுக்கு கொண்டு வருவேன் என நான் திடமாக கூறுகிறேன். (I am determined)

"இலங்கையில் இப்போது என்ன நடைபெற வேண்டும்?

முதலாவதாக இலங்கையில் நடைபெற்றது என கூறப்படும் போர்க்குற்றங்களுக்கு வெளிப்படையான நம்பகரமான விசாரணை வேண்டும். நடைபெற்ற பயங்கரவாத இயக்கங்களின் படுகொலை நிகழ்வுகளுக்கோ அல்லது அரச பயங்கரவாத நிகழ்வுகளுக்கோ மீண்டும் ஒருவரும் போக விரும்பவில்லை. நான் இலங்கை அதிபர் இராஜபக்சவை சந்தித்த போது இவ்வாறான ஒரு விசாரணையை

தொடர்ச்சி 02ஆம் பக்கம்





Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி

TOYOTA MARKVILLE
905.294.8100

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

துரித பணமாற்றுச் சேவை
• 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்


3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

# போர்க்குற்ற.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

வலியுறுத்தினேன் (I pressed for an investigations). இவ்வாறான ஒரு விசாரணை மார்ச் 2014 இற்கு இடையில் ஆரம்பிக்கா விட்டால் நாங்கள் சர்வதேச விசாரணையை ஐக்கிய நாடுகள் சபை மூலம் வலியுறுத்துவோம் என்று நான் அவருக்கு மிகவும் தெளிவாக கூறியுள்ளேன்.

மனித உரிமைக்காக குரல் கொடுப்போர் அச்சுறுத்தப்படுவது மற்றும் தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

மூன்றாவதாகவும் இறுதியாகவும் இலங்கையில் இரண்டு சமூகங்களுக்கும் இடையே உண்மையான நல்லுறவு ஏற்பட வேண்டும். இலங்கை ஒரு அழகான நாடு, அதற்கு மிகவும் நல்ல எதிர்காலம் இருக்கிறது."



இரண்டாவதாக முழு இலங்கையிலும் மனித உரிமை விடயத்தில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். அங்கு உண்மையான பேச்சு சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் ஏற்பட வேண்டும். ஊடகவியலாளர்கள் மற்றும்

இவ்வாறு பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் தனது பிரத்தியேக செவ்வியில் தெரிவித்தாக 'Business Standard' ஊடகம் நவம்பர் 28, 2013 இல் செய்தி வெளியிட்டுள்ளது.






# கனடாவில் மாவீரர் தின நிகழ்வுகள்

கனடாவில் பல்லாயிரம் மக்கள் அணி திரண்ட மாவீரர் தின நிகழ்வுகள் இடம் பெற்றன.



நான்கு நிகழ்வுகளாக நடைபெற்ற நிகழ்வில் கடும் பனிப் பொழிவுக்கும் காற்றுக்கும் மத்தியிலும் குழந்தைகள், பெரியவர்கள் என பல ஆயிரம் பேர் கலந்து கொண்டு தமது அக வணக்கத்தினை செலுத்தினர். இந்நிகழ்வினை கனடாவைச் சேர்ந்த தமிழர் நினைவெழுச்சி அகவம் எனும் அமைப்பினால் ஒழுங்குபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இறுதியில் நடைபெற்ற நான்காம் நிகழ்வில் மண்டபத்தில் இருக்கைகள் போதாத காரணத்தால் மக்கள் மண்டபத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலையும் இங்கு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.







# விடுதலைக்காக மூன்று பெரும் பரிமாணங்களில் செயலாற்ற உறுதிகொள்வோம்: - வி. உருத்திரகுமாரன்

விடுதலை, சுதந்திரம் என்ற உலகப் பெருவிழுமியங்களை தம் இதயத்தில் சுமந்து நின்று களமாடிக் காவியமாகி விட்ட நம் கார்த்திகைப்பூக்களின் நினைவு நாளில் விடுதலையினை வென்றெடுக்க மூன்று பெரும் பரிமாணங்களில் நாம் அனைவரும் செயலாற்ற உறுதி கொள்வோம் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தனது மாவீரர் நாள் செய்தியில் தெரிவித்துள்ளார். சிங்களத்தின் ஆக்கிரமிப்புக்குள்ளாகிச் சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழீழ தேசத்தின் வளங்கள் பெருமளவில் அழிக்கப்படுவதோடு தாயக மக்களுக்கு நீதி மறுக்கப்பட்டிருக் கிறது எனத் தெரிவித்துள்ள பிரதமர் வி. உருத்திரகுமாரன், நமது மக்களின் விடுதலையை வென்றெடுக்க நமது மாவீரர் களின் கனவை நனவாக்க, நாம் முவ்வகை பரிமாணங்களில் செயலாற்ற வேண்டியவர் களாக உள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

முதலாவது, ஈழத் தமிழர் மக்களின் தேசத் தகைமையும், தாயகமும், சுயநிர்ணயமும் அனைத்துலக அங்கீகாரம் பெற உழைத்தல்.

இரண்டாவது, முள்ளிவாய்க்காலில் சிங்களம் புரிந்த இனஅழிப்புக்கு நீதி கோரும் போராட்டங்களை நடத்துதல்.

மூன்றாவது, போரால் பாதிக்கப்பட்ட மக்களது வாழ்வாதாரங்களை மீளக் கட்டியெழுப்புதலும் தமிழர் நிலைப்பட்ட மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுத்தலும்.

இவை மூன்று பரிமாணங்களும் சமாந்திரமாக முன்னெடுக்கப்பட வேண்டியவை எனத் தெரிவித்துள்ள பிரதமர் வி.உருத்திரகுமாரன், இவற்றில் ஈழத் தமிழ் மக்கள், தமிழகத் தமிழ் மக்கள் உட்பட்ட 80 மில்லியன் மக்களதும் பங்கு பற்றல் அவசியமானது ஆகும் எனவும் தெரவித்துள்ளார்.



நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரனது தமிழீழ தேசிய நாளான மாவீரர் நாள் செய்தியின் முழுவடிவம் :

நம் சின்னஞ் சிறு தமிழீழ தேசம் தனக்கென்றொரு அரசினை அமைத்து

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

விளம்பரம்™
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.


Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலை-நகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc. ,
   5215 Finch Ave. E. #201,
   Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: www.vlambaram.com
   www.tamilvanakkam.com




# கனடிய வரலாற்றில் இனவாரி நடவடிக்கை

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

## இனவாரி நடவடிக்கையால் காவல்துறையின் விசாரணைகளில் நேரமும் பணமும் மீதமாவதில்லையா?

• இனவாரி நடவடிக்கை ஒரு திட்பமான, நம்பத்தகுந்த விசாரணை உத்தி என்னும் எண்ணம் நிலவுகிறது. உண்மையில் இந்த உத்தி, விசாரணை செய்யும் படிமுறைக்குத் தடங்கல் விளைவிப்பதே ஒழிய, உறுதுணை புரிவதில்லை. அந்த வகையில் இது பிரச்சனைகளை உண்டுபண்ணும் உத்தி ஆகும்.


• ஒரு குறிப்பிட்ட குழுமத்தில் கவனம் செலுத்தினால், ஒரு குற்றச் செயலுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிவதில் தாமதம் ஏற்படக்கூடும். 2002ல் Beltway Snipers 3 கிழமைகளாகத் தொடர்ந்து தாக்கி 10 பேரைக் கொன்றார்கள். அதற்கு காவல்துறையின் போக்கும் ஒரு காரணம். மறைந்திருந்து சுடுபவர் ஒரு வெள்ளையின ஆண் என்னும் இனவாரியான விபரத்தையே காவல்துறையினர் திரட்டியிருந்தார்கள். உண்மையில் அவர்களைக் கொன்றவர்கள் கறுப்பினத்தவர்களே.

• 1960 பிற்கூறில் விமானக் கடத்தல்கள் பெருகியபொழுது அமெரிக்கர்கள் விமான நிலையங்களில் இனவாரி நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். அது திட்பமான முறையல்ல என்பதால் அதனை அவர்கள் கைவிட்டார்கள். அதற்குப் பதிலாக உலோகத் துப்பறி கருவிகளையும் கதிர்ப் பொறிகளையும் அவர்கள் கையாண்டார்கள். மிகவும் அண்மைக் காலத்தில் ஐக்கிய அமெரிக்க சுங்கத் துறை (U.S. Customs Service) இனம், பால், இனத்துவ அடிப்படையில் ஓரஞ்சாய்வதை ஒழித்துக்கட்டி, தேடுதல்கள் நடத்துவதை 75 விழுக்காடு குறைக்க முடிந்தது. வெற்றியில் முடியும் தேடுதல் நடவடிக்கைகள் அதனால் குறைந்து போய்விடவில்லை.

• குறிப்பிட்ட சமூகங்கள்மீது புலனைச் செலுத்தினால், ஏனைய சமூகங்களில் இடம்பெறும் குற்றச் செயல்களையோ பயங்கரவாதச் செயல்களையோ பொருட்படுத்தாதிருப்பது எளிதாகிவிடும். 1999ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் மக்களும் காவல்துறையினரும் 1,272,282 தடவைகள் தொடர்பு கொண்டமை பற்றிய ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அங்கு காவல் துறையினர் பெரிதும் ஆபிரிக்க அமெரிக்கர்களையும், இலத்தீன் அமெரிக்கர்களையுமே நிறுத்தி, தேடுதல் நடத்தக்கூடும் என்பதை அது புலப்படுத்தியது. அதேவேளை, வெள்ளை இனத்தவர்களைவிட அரைவாசி குறைவாகவே ஆபிரிக்க அமெரிக்கர்களும் இலத்தீன் அமெரிக்கர்களும் கள்ளக்கடத்தற் பொருட்களை வைத்திருப்பதுண்டு என்பதையும் அது புலப்படுத்தியது.

## 9/11 பயங்கரவாதத் தாக்குதலின் விளைவாக இனவாரி நடவடிக்கை என்பது பாதுகாப்புக்கு அவசியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கை இல்லையா?

• 9/11 தாக்குதல் நிகழ்ந்த கையோடு புஷ்ஷின் அரசு, பின் லாடன் குடும்பத்தையும், சௌதி அரச குடும்பத்தையும் சேர்ந்த பெரும்புள்ளிகளைப் பாதுகாத்து, அவர்கள் அமெரிக்காவல் இருந்து வெளியேறுவதற்கு ஏற்பாடு செய்தது. அதேவேளை ஆயிரக் கணக்கான அறபு அமெரிக்கரையும், தெற்கு ஆசியரையும் முன்னெச்சரிக்கையாகவும் தான்தோன்றித்தனமாகவும் அது தடுப்புக்காவலில் வைத்தது. ஒசாமா பின் லாடனின் இனத்துவம் காரணமாக வட அமெரிக்க அறபுகளும், தெற்கு ஆசியரும் முறைகேடான வகையில் நுணுகி ஆராயப்பட்ட அதேவேளை, அவருடைய குடும்பத்தவர்கள் துய்த்த அதிகாரபலம், பணத் திமிர், அமெரிக்க அதிபருடன் பூண்ட ஒட்டுறவு காரணமாக அவர்கள் பாதுகாக்கப்பட்டார்கள். இனவாரி நடவடிக்கையில் உள்ள படுமோசடித்தனம் இத்தால் அம்பலப்படுகிறது.



• இனவாரி நடவடிக்கை முறைகளை இன்று அனைவரும் அறிந்திருக்கிறார்கள். குற்றவாளிகளும் பயங்கரவாதிகளும் தமது தோற்றத்தை மாற்றியோ, ஆட்சியாளரால் திரட்டப்படும் விபரத்துக்குப் பொருந்தாத ஆட்களை அமர்த்தியோ செயற்பட முடியும். ஒரு வெள்ளையின ஆஸ்திரேலியரான ஜாக் றோச் (Jack Roche), கறுப்பின பிரித்தானியராகிய றிச்சார்ட் றீட் (Richard Reid) போன்றவர்களை அல் கைதா அமர்த்தியதுண்டு. மேலும், கனடா வில் மாத்திரமன்றி உலகம் முழுவதும் முஸ்லீம், அறபு, ஆபரிக்க, தெற்கு ஆசிய சமூகத்தவர்கள் பெருந் தொகையில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் மாதிரிக் குழுமம் 100 கோடிக்கு மேற்பட்ட மக்களைக் கொண்டது. மட்டுப்பட்ட பொருள்வசதியைக் கொண்டு அத்தகைய ஒரு மாபெரும் குழுமத்துக்கு இலக்கு வைக்கப்படுகிறது. ஆதாரபூர்வமான தகவலை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு வேண்டிய பொருள்வசதியை அது உறிஞ்சித் தள்ளிவிடுகிறது.

## இனவாரி நடவடிக்கைக்கு இலக்காகுவோர் அப்பாவிகள் என்றால், அவர்கள் எதற்காகப் பயப்படுகிறார்கள்?

• இனவாரி நடவடிக்கையால், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் பொய்யான துப்புகளை அடியொற்றிச் செல்ல நேர்கிறது. சமூகங்களுள் ஓர் அச்ச உணர்வை அது ஏற்படுத்துகிறது. பயங்கரவாதிகள் என்று கருதப்படுவோரின் வாழ்வை அது சீரழிக்கிறது. அப்புறம் அவர்கள் அப்பாவிகள் என்பது தெளிவாகும்பொழுது, ஊடகங்கள் அதனைப் பொருட்படுத்துவது அரிது. ஆதலால் பயங்கரவாதிகள் என்னும் வடு அவர்களின் உள்ளத்திலிருந்து விடுபடுவதில்லை.

• பயங்கரவாதக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகுவோரைச் சார்ந்தவர்கள் பலர் பல்வேறு சூழ்நிலைகளில் அதன் தாக்கங்களுக்கு உட்படுகிறார்கள். அவர்களுடைய நடமாடும் சுதந்திரமும் (குறிப்பாக விமானப் பயண சுதந்திரமும்), அந்தரங்கமும் பாதிக்கப்படுகின்றன. வெறுமனே ஓர் அறபுவாகவோ முஸ்லீமாகவோ விளங்குவதால் ஐயுறவுக்கு உள்ளாகும் வழமையினால் அவர்களுக்கு உளத் தாக்கமும் அச்சமும் உண்டாகின்றன.

• தாம் வேண்டப்படாதவர்கள் என்னும் உணர்வையும், ஏமாற்றத்தையும் அறபு, முஸ்லீம் சமூகங்களுக்கு ஏற்படுத்தி, அவர்களை அரசின்மீதும் நீதி முறைமையின் மீதும் அவநம்பிக்கை கொள்ள வைப்பதாகவே இனவாரியாக விபரம் திரட்டுவது **தொடர்ச்சி 10ஆம் பக்கம்**

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing


- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# தூக்கம்



## சத்குரு வாசுதேவ்

### தூக்கம் என்பது ஒரு ஓய்வு:

தூக்கம் என்பது உங்களுக்குத் தேவைப்படும் ஒரு ஓய்வு. அந்த ஓய்வு இன்றி உங்களால் வாழ முடியாது. உங்கள் உடலைவிட மனதிற்கு நிச்சயமாக ஓய்வு தேவைப்படுகிறது. எனவேதான் உடலளவி லும் மனதளவிலும் ஓய்வு கிடைக்கும்படியாக இயற்கை தூக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தூக்கத்திலும் கூட மனம் தொடர்ந்து செயல்படுவதை தற்போது விஞ்ஞானத்தில் கண்டறிந்திருக்கிறார்கள். ஆனால் யோகா இதனை ஏற்கனவே அறிந்திருக்கிறது. நாம் புலன் உறுப்புகளை மட்டுமே தூக்கத்தில் ஈடுபடுத்துகிறோம். ஆனால் தூக்கத்தின்போது அனைத்து இயக்கங்களும் நின்றுவிட்டது போலத் தெரிகிறது. ஆனால் உண்மையில் அப்படியில்லை. உங்கள் இதயம் துடிக்கிறது. கல்லீரல் செயல்படுகிறது, மனம் இயங்குகிறது. இப்படி பல உறுப்புகள் செயல்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. ஆனால் ஐம்புலன்கள் தூக்கத்தில் தள்ளப்பட்டதால் அந்த இயக்கங்களை உங்களால் உணர முடியவில்லை.

### தூக்கத்தில் அடையாளங்கள் மறைகின்றன:

ஏதோவொரு நாள், ஒரு மணி நேரமோ, இரண்டு மணி நேரமோ அது எவ்வளவு நேரம் என்பது முக்கியமல்ல. மிக ஆழமாகத் தூங்கும்போது உங்கள் எல்லா அடையாளங்களும் மறைந்து போகின்றன. தூக்கத்தில் கனவு ஏற்படும்போதும் கூட உங்கள் அடையாளம் வெளிப்படுகிறது. நீங்கள் கனவையும் தாண்டி ஆழமான தூக்கத்திற்குச் செல்லும்போது நீங்கள் ஒன்றுமில்லாத் தன்மைக்குச் சென்று விடுகிறீர்கள். மறுநாள் காலை எழும்போது அது அற்புதமான உணர்வாக இருக்கும். முழுமையான விடுதலையுணர்வும், புத்துணர்ச்சியும் இருக்கும். ஆனால் இந்த அடையாளமற்ற நிலை முழுமையான விழிப்புணர்வற்ற நிலையில் நிகழ்கிறது. அதேநிலையை விழிப்புணர்வோடு அடையும் போது அது தியானமாக இருக்கிறது.

### தூங்குவதற்கான சரியான நேரம்:

எவ்வளவு நேரம் தூங்குகிறீர்கள் என்பது முக்கியமில்லை. ஒரு நாளில் 8 மணி நேரம் தூங்க வேண்டும் என்று அதிகளவில் பேசப்பட்டு வருவதை நான் அறிவேன். உடலுக்குத் தேவையானது தூக்கமல்ல. உடலுக்குத் தேவை ஓய்வும், தளர்வு நிலையும்தான். நாள் முழுவதும் உடலைத் தளர்வாக வைத்திருந்தால் இரவில் உங்களின் தூக்கம் கூட இயல்பாகவே குறைந்துவிடும். அதிக ஓய்வான வேலை, ஓய்வான நடை, தளர்வான உடற்பயிற்சி போன்றவையுடன் நீங்கள் இருக்கும்போது உங்கள் தூக்க நேரம் தானாகவே குறைந்திருக்கும். தற்போது மனிதர்கள் ஒவ்வொன்றையும் கடுமையாகவே செய்ய விரும்புகின்றனர். ஏதோ போருக்கு செல்வதைப் போல உடற்பயிற்சிகள் செய்கிறீர்கள். இது உங்களுக்கு நன்மையைவிட கெடுதலே அதிகம் செய்யும். நடப்பது, ஓடுவது போன்ற உடற்பயிற்சிகளை நீங்கள் எளிமையாகவும் மகிழ்ச்சியாகவும் செய்யலாமே.



### எவ்வளவு தூக்கம் தேவை?

அப்படியானால் என் உடலுக்கு எவ்வளவு தூக்கம் தேவை? அது நீங்கள் எவ்வளவு உடல் உழைப்பு செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. எவ்வளவு சாப்பிட வேண்டும், எவ்வளவு தூங்க வேண்டும் என்பதை நீங்கள் நிர்ணயிக்கத் தேவையில்லை. இவ்வளவு கலோரி உணவு உண்ண வேண்டுமென்றோ இத்தனை மணி நேரம் தூங்க வேண்டுமென்றோ நிர்ணயம் செய்து கொண்டு வாழ்வது வாழ்க்கையை முட்டாள்தனமாக வாழ்வதாகும். இன்று எவ்வளவு சாப்பிடலாம் எவ்வளவு நேரம் தூங்கலாம் என்பதை உங்கள் உடல் நிர்ணயம் செய்யட்டும். இன்று உங்களுடைய செயல் குறைவாக இருந்தால், குறைவாக உண்ணுங்கள். நாளை அதிகம் செயல் இருக்கும்போது அதிகம் உண்ணுங்கள். அதேநிலைதான் தூக்கத்திற்கும். தேவையான ஓய்வு உடலுக்கு கிடைத்து விட்டது என்றால் தூக்கத்திலிருந்து நீங்கள் தானாகவே வெளிவர வேண்டும். அது காலை 3 மணியாக இருந்தாலும் சரி, அல்லது காலை 8 மணியாக இருந்தாலும் சரி. போதுமான அளவுக்கு ஓய்வு பெற்றுவிட்டோம் என்று அறிந்தால் உடல் தானாகவே தூக்கத்திலிருந்து வெளிவர வேண்டும். நீங்கள் அந்த அளவிற்கு உடலை வைத்திருக்க வேண்டும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org

நீங்கள் படுக்கையைக் கல்லறையாகப் பயன்படுத்தும் முயற்சியில் இருந்தால் உடல் தூக்கத்திலிருந்து வெளிவருவதற்கு விரும்பாது. உங்கள் உடலும் மனமும் எப்போதும் விழித்திருப்பதற்கே ஏங்க வேண்டும். அந்த அளவிற்கு நீங்கள் உங்கள் உடலையும் மனதையும் வைத்திருக்க வேண்டும். வாழ்க்கையிலிருந்து தப்பிக்க வேண்டும் என்கிற ஏக்கம் இருக்கக்கூடாது. இவை எல்லாமே நீங்கள் எப்படி வாழ்க்கையை நடத்திச் செல்கிறீர்கள் என்பதில்தான் இருக்கிறது. ஏதோ ஒரு துக்கத்தில் இருக்கிறீர்கள். அப்போது வாழ்க்கையைத் தவிர்க்க நினைக்கிறீர்கள். அப்போது தூக்கம்தான் சரியான வழியாக உங்களுக்குத் தெரிகிறது. அந்நிலையில் நீங்கள் இயல்பாகவே அதிகம் உண்பீர்கள். அதிகம் தூங்குவீர்கள்.

### சாப்பிட்டவுடன் தூங்காதீர்கள்:

சாப்பிட்ட உணவு செரிமானம் ஆவதற்கு உங்கள் உடலில் வளர்சிதை மாற்றம் அதிகம் இருக்க வேண்டும். ஆனால் தூங்கச் செல்லும்போது வளர்சிதை மாற்றம் குறைந்து விடுகிறது. எனவே சாப்பிட்டவுடன் தூங்கச் சென்றால், குறைந்த வளர்சிதை மாற்றம் காரணமாக சாப்பிட்ட உணவில் அதிகப் பகுதி வீணாகக் கழிவாகச் சென்றுவிடுகிறது. சாப்பிட்ட 2 மணி நேரத்திற்குள் நீங்கள் தூங்கச் சென்றால், சுமார் 80 சதவீத உணவாவது செரிமானமாகாமல் கழிவாகச் சென்றுவிடும். சாப்பிட்ட பிறகு தேவையான நேரம் இடைவெளி எடுத்த பிறகே தூங்கச் செல்ல வேண்டும். சாப்பிட்டு விட்டு உடனே தூங்கினால் உடலுக்கு என்ன செய்வதென்று தெரியாது. ஒன்று உங்களைத் தூங்க விடாது அல்லது சாப்பிட்ட உணவு ஜீரணமாகாது. ஆனால் பலர் சாப்பிட்டவுடன் தூங்கச் செல்கின்றனர். இல்லாவிட்டால் அவர்களால் தூங்க முடியாது. நன்றாக சாப்பிட்டு உடலை மந்தப்படுத்தினால்தான் தூக்கம் வரும் என்ற நிலையில்தான் நீங்களும் தற்போது இருக்கிறீர்கள் என்றால், அதை என்னவென்று பார்ப்பது மிக அவசியம். நிச்சயமாக அது தூக்கத்தைப் பற்றியது அல்ல. அது ஒரு வகையான மனநிலை.

எனவே, எவ்வளவு தூக்கம் தேவை? உணவும் தூக்கமும் உங்கள் உடல் நிர்ணயிக்கட்டும். ஏனெனில் நீங்கள் சரியாக நிர்ணயம் செய்ய மாட்டீர்கள். எவ்வளவு சாப்பிட்டால் உங்கள் உடல் வசதியாக உணர்கிறதோ, எவ்வளவு தூங்கினால் உங்கள் உடல் வசதியாக உணர்கிறதோ, அப்படித்தான் செய்ய வேண்டும். ஏனெனில் இவை உடலைச் சார்ந்தவைகள், இல்லையா?




**யாழ். இந்துக்கல்லூரிச் சங்கம் - கனடா**
**வருடாந்தப் பொதுக்கூட்டம்**

**காலம்:** ஞாயிற்றுக்கிழமை, டிசம்பர் 08, 2013
**நேரம்:** காலை 10:00 மணி
**இடம்:** ஸ்காபரோ சிவிக் சென்ரர்
***(Council Chamber, Scarborough Civic Center)***
***150 Borough Dr., Scarborough, ON, M1P 4N7***

கதிர்: ***416.856.6900*** / கிருஷ்: ***416.930.9119***
***www.jaffnahinducanada.com***



# மோட்கேஜ் கிளினிக்



தயா (PK) கந்தையா BAS, ABR, AMP
Principal Broker / President
FSCO Lic # M 08001093
Cell : 416-716-8707

ஜெ.(Jey) இராசதுரை. MBA, BBA (Hon), AMP
Mortgage Development Manager / Agent
FSCO Lic # M 08001428
Cell : 416-624-4843

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

- லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேண்டுமா?
- கடன்களை ஒன்றுபடுத்தி எல்லா பேமேன்டையும் ஒரே பேமேண்டாக மாற்ற வேண்டுமா?
- ரீபைனான்ஸ் செய்ய வேண்டுமா?
- 2 வது மற்றும் 3வது மோட்கேஜ் தேவையா?
- பாங்க்ரப்சி செய்தோருக்கான மோட்கேஜ் தேவையா?
- உரிய நேரத்தில் மோட்கேஜ் தவணைப் பணத்தினை செலுத்தமுடியாது பவர் ஒப் சேலினை எதிர்நோக்குகிறீர்களா? உடனடித்தீர்வுக்கான ஆலோசனைகள் தேவையா?
- உங்கள் வீட்டினை வாடகைக்கு விட வேண்டுமா?
- அனைத்து ரியல் எஸ்டேட் சம்பந்தமான சேவைகளையும் குறைந்த செலவில் செய்ய வேண்டுமா?
- மற்றும் பல சேவைகள்

CENTUM™
Rapid Mortgages Inc.
LIC # 10156

rapid realty inc.®

**80 Nashdene Road, Suite # 211. Toronto, ON. M1V 5E4.**

416-644-3555 / 416-259-2002

# சச்சினின் கிரிக்கெட் பயண கடைசி நிமிடங்கள்

## விளையாட்டுத் தகவல்கள் 352

சர்வதேச போட்டிகளிலிருந்து இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் ஓய்வு பெற்று விட்டார். சச்சினின் வழியனுப்பு நிகழ்ச்சியைப் பார்க்க மைதானத்தில் 25 ஆயிரம் ரசிகர்கள் திரண்டிருந்தனர். இந்தியா வந்துள்ள மேற்கிந்திய தீவுகள் அணி இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இதில் முதல் டெஸ்டில் வெற்றி பெற்ற இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்சில் மேற்கிந்திய தீவுகள் அணி 182, இந்தியா 495 ஓட்டங்கள் எடுத்தன. தனது கடைசி டெஸ்டில் விளையாடிய சச்சின், முதல் இன்னிங்சில் 74 ஓட்டங்கள் விளாசினார். மூன்றாவது நாள் ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி 187 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. முடிவில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 126 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்திய அணி வெற்றி பெற்றதும், மைதானத்தில் இருந்த இந்திய வீரர்களை சச்சின் கட்டி அணைத்தார். பின் இருபுறமும் வீரர்கள் நின்று கொண்டு, சச்சினை நடுவில் வரச் செய்து விடை கொடுத்தனர். அப்போது கண்ணீர் விட்டு அழுதார். மேற்கிந்திய தீவுகளின் அணி வீரர்கள் அனைவரும் கைகொடுத்து வாழ்த்தினர். 16 வயதில் இந்திய அணியில் களமிறங்கிய சச்சின், 24 ஆண்டுகள் கிரிக்கெட்டில் சாதித்து, வெற்றியுடன் வெளியேறிய போது, மைதானமே எழுந்து நின்று விடை கொடுத்தது.


அணித்தலைவர் டோனி உள்ளிட்ட இந்திய அணியினர் இருபுறமும் வரிசையில் நின்று சச்சினுக்கு வழியனுப்பி மரியாதை (ஹானர் ஆ.்ப் கார்டு) செலுத்தினர். சச்சின் அதை மரியாதையுடன் ஏற்றுக்கொண்டார். அப்போது சச்சின் கண்களில் நீர்த்துளி எட்டிப் பார்த்தது. பொதுவாக உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் சச்சின், இம்முறை உணர்ச்சி வசப்பட்டு விட்டார். அணித்தலைவர் டோனியும், கோஹ்லியும் சச்சினை தங்கள் தோளில் சுமந்து மைதானத்தை வலம் வந்தனர். அதன்பின், இந்திய அணி வீரர்கள் மாறிமாறி சச்சினை சுமந்து மைதானத்தை சுற்றினர். சச்சின் தேசியக்கொடியை அசைத்தபடி இருந்தார்.



மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர்களும் பவுண்டரி எல்லையில் நின்று சச்சினுக்கு கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்தனர். இதுகுறித்து அவரது மனைவி அஞ்சலி கூறுகையில், சச்சின் இல்லாத கிரிக்கெட்டை என்னால் நினைத்துப் பார்க்க முடியும். ஆனால் கிரிக்கெட் இல்லாத சச்சினை நினைத்துப் பார்க்க முடியாது. சச்சின் தன் உணர்வுகளை வெளிக்காட்டாமல் கட்டுப்படுத்துவதில் வல்லவர். ஆட்டத்துக்கு முன்னதாகவோ அல்லது எதிர்பார்த்தபடி விளையாடவில்லை என்றோ ஒருபோதும் அவர் எரிச்சல் அடைந்ததைக் காட்டிக் கொண்டதில்லை. நான் உணர்ச்சிகளை அதிகம் காட்டிக்கொள்வதில்லை. ஆனால், கடந்த மாதம் ஓய்வு குறித்து சிந்தித்தபோது என் கண்களில் நீர் எட்டிப்பார்த்தது.

இன்று இல்லை எனில் நாளை அது நடந்தே தீரும் எனும்போது உணர்ச்சிவசப்பட்டு விடுகிறோம். 2-ம் நாள் ஆட்டத்தின்போது, அர்ஜுன் "போல் பாய்-ஆக" இருந்தது சச்சினுக்கு ஆச்சரியம் அளித்தது. முதலில் சச்சின் மும்பைக்குச் சொந்தம், 2-வது நாட்டுக்குச் சொந்தம், 3-வதாகத்தான் எனக்குச் சொந்தம் என்பது திருமணத்துக்கு முன்பே எனக்கு நன்கு தெரியும் என தெரிவித்துள்ளார். சச்சின்..சச்சின் என்ற ரசிகர்களின் வாழ்த்து எப்போதும் தமது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கும் என சச்சின் டெண்டுல்கர் உருக்கமாக பேசியுள்ளார். பின்னர் பிரிவு உபசார உரையை ஆற்றிய சச்சின், தனது 24 ஆண்டுகால கிரிக்கெட் பயணத்திற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

மேலும் இளம் வயதில் தமக்கு நண்பர்கள் இல்லை. ஆனால் கிரிக்கெட் விளையாடியதால் கடந்த 24 ஆண்டுகாலத்தில் புதிய நண்பர்கள் கிடைத்திருக்கின்றனர் என்றார். மேலும் தாம் கிரிக்கெட் விளையாடியதால் குழந்தைகளுடன் நேரத்தை செலவழிக்க முடியாமல் போனது என்றும், இனி அவர்களுடனேயே இருப்பேன் என்றும் சச்சின் கூறினார். சச்சின் தமது தந்தை மற்றும் பயிற்சியாளர் பற்றி பேசும் போது உணர்வயப்பட்ட நிலையில் பேசினார். தமது கிரிக்கெட் பயணத்தில் தந்தையின் பங்கு மகத்தானது, அவர் இந்த தருணத்தில் இல்லாதது வருத்தமளிக்கிறது என்றார். சச்சின்..சச்சின் என்ற ரசிகர்களின் வாழ்த்தொலி தமது மூச்சு நிற்கும் வரை எப்போதுமே ஒலித்துக்கொண்டே இருக்கும் என்றும் சச்சின் கூறினார். அத்துடன் ஊடகங்களுக்கும் தனது நன்றியை தெரிவித்துக் கொண்டு தனது 24 ஆண்டுகால கிரிக்கெட் பயணம் நிறைவடைந்துவிட்டது என்று தெரிவித்துள்ளார்.



**எஸ். கணேஷ்**

## உதைப்பந்தாட்டம் - 2014




2014 இல் உலக உதைப்பந்தாட்டப் போட்டியில் (FIFA) விளையாட இருக்கும் 32 நாடுகளும் தமது இடத்தை தக்க வைத்துள்ளன. அவை முறையே அல்ஜீரியா, ஆர்ஜெண்டீனா, அவுஸ்திரேலியா, பெல்ஜியம், பொஷ்னியா-ஹெர்கோவினா (Bosnia Herzogovna), பிரேசில், கமரூன், சில்லி, கொலம்பியா, கொஷ்ராக்கா, குரோசியா (Crocia), எக்குவடோர் (Ecuador), இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கானா (Ghana), கிறீஷ், கொன்டுரஸ், ஈரான், இத்தாலி, ஐவறிகோஷ்ட், (Ivory coast), ஜப்பான், மெக்சிகோ, நெதர்லாந்து, நைஜீரியா, போத்துக்கல், ரஷ்யா, தென்கொரியா, ஸ்பெயின், சுவிற்சலாந்து, உருகுவே மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகும். இப்போட்டிகள் 2014ஆம் ஆண்டு பிரேசிலில் நடைபெற உள்ளது.




மார்க்கம் நகர பிதா ஃப்ராங்க் ஸ்கார்ப்பத்தி, கவுன்சிலர் லோகன் கணபதியின் அன்பான அழைப்பு..


**புதிதாக கட்டப்படும் 7ஆம் வட்டாரத்திற்கான சன சமூக நிலையம், நூலகம் அங்குரார்ப்பண வைபவம்**

72 மில்லியன் டாலர் செலவில், நவீன தொழில் நுட்பத்துடன் கட்டப்படும் சன சமூக நிலையம் நீச்சல் குளம்,நூலகம், உடல் பயிற்சி அறை, மக்கள் கூடுவதற்கான இடங்கள் (சனசமூக நிலையத்திற்கு உள்ளேயும், வெளியேயும் ), கலாச்சார நிகழ்வுகளுக்கான இடம், முதியோர் மற்றும் இளையோருக்கான பிரத்யேக அறைகள் - மார்க்கத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு அதி நவீன வசதிகளுடன் ஓர் பிரம்மாண்டமான சனசமூக மையமாக அமையும் வரலாற்றுப் பெருமை மிக்க வண்ணி வீதியும் இங்கே தான் அமையவிருக்கிறது. இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க அங்குரார்ப்பண வைபவத்திற்கு உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும், நண்பர்களையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இந்த நிகழ்வு மிடில் ஃபீல்ட் மற்றும் 14 ஆம் வீதி சந்திப்பில் வரும் ஞாயிறு, மார்கழி 1 ஆம் திகதி 2 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் சில கலச்சார நிகழ்வுகளும் அத்துடன் சிற்றுண்டி உபசாரமும் வழங்கப்படும்.

SOUTHEAST COMMUNITY CENTRE & LIBRARY
Official Groundbreaking Ceremony
When: Sunday, December 1, 2:00pm – 4:00pm
Where: The site - Southeast corner of 14th Ave and Middlefield Rd
(Middlefield Rd. closed between 14th Ave. and Highglen Ave)
Reception with refreshments to follow at the Fire Hall



அன்புடன்,
லோகன் கணபதி
மார்க்கம் கவுன்சிலர்






AIR TRAVEL | INSURANCE | HOTEL | CRUISES | RESORTS

SKY LAWN TRAVEL

Dir:416-919-8558
Off:416-748-1588

Toronto
7595 Markham Rd, Unit 13
Markham,ON, L3S0B6, CA

Montreal
433, Chabanel W. Suite 111
Montreal QC, H2N2J3, CA

www.skylawntravel.com
Email: info@skylawntravel.com
canada.homes@hotmail.com

15



Ram Gaur

# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 403

மாற்றம் ஒன்று தான் மாறாதது என்பது யாவரும் அறிந்தது. பெரிய அளவிலான வீடுகளில் வாழ்ந்த நிலைமை மாறி சிறிய வீடு / மனைகளிற்கு மாறவேண்டிய கட்டாய நிலைமைக்கு மக்கள் தள்ளப்படுவதனை காணக்கூடியதாக உள்ளது. விலை அதிகரிப்பே இதற்கு காரணமாகலாம். இந்நிலைமை வன்கூவரில் ஏற்பட்டுள்ளது. மேற்கு வன்கூவரில் தனி வீடுகளின் சராசரி விலை 2.40 மில்லியனாக காணப்படுகின்றது. அனேகமான குடும்பங்களால் வீடு வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் புதிதாக கட்டப்படும் வீடுகள் அனேகமான தொடர்வீடுகள் அல்லது அடுக்குமாடி மனைகளாகவே காணப்படுகின்றன. இவ்வாறானவையே சராசரி கனடியனால் வாங்கக் கூடியதாக உள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை வன்கூவர் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட ஆதனத்தில் 79% ஆனவை அடுக்குமாடி மனைகளும், தொடர்வீடுகளுமே என்பது குறிப்பிடத்தக்கது. இதே நிலைமை சில வருடங்களில் ரொறொன்ரோவிலும் ஏற்படலாம் என்பதனை எதிர்வு கூறக்கூடியதாக உள்ளது. எனவே ரொறொன்ரோ பகுதியில் அகலமான நிலத்துடன் கூடிய தனி வீடுகளை தகுந்த இடத்தில் வாங்குவது எதிர்காலத்தில் பலன் கொடுக்க கூடியதாக இருக்கலாம். நிலம் ஒன்றை உருவாக்குவது இலகுவாக இருக்காது. நிர்மாணிப்பதற்குரிய நிலம் அருகி வருகின்றது.

2006 ஆம் ஆண்டிற்கும் 2011 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ரொறொன்ரோவின் சனத்தொகை 16.2% இனால் அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரணமாக இளையவர்கள் பட்டம் பெற்றவர்கள் நகரை நோக்கி வருவதேயாகும். அதாவது தொழில் புரியும் இடத்திற்கு அண்மையில் வாழ்வதனையே இவர்கள் விரும்புகின்றனர். அத்துடன் வேலை முடிந்த பின் உள்ள நேரத்திலும் வாழ்க்கை இருக்க வேண்டும் என்பதும் இவர்களில் அனேகரின் நிலைப்பாடாகும். அதாவது வேலை நடைதூரத்தில், ரெஸ்ரோரண்ட் (Restaurant), பார் (Bar), பொதுப்போக்குவரத்து (Public transit), கடைகள் போன்றவை அண்மையில் இருப்பதனையே எதிர்பார்க்கின்றனர்.

2011 ஆம் ஆண்டின் புள்ளிவிவரப்படி, சனத்தொகை அதிகரிப்பின் 70% ஆனவர்கள் Echo boomers (1972 ஆம் ஆண்டிற்கும் 1992 ஆம் ஆண்டிற்கும் இடையில் பிறந்தவர்கள் ஆகக் காணப்படுகின்றார்கள். இவர்களே ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் வாழ அதிக நாட்டம் கொள்கின்றனர்.

உதாரணமாக அண்மையில் ரொறொன்ரோ வின் மேற்கு பக்கத்தில் இருக்கும் ஓக்வில் (Oakville) பகுதியிலிருந்து ரொறொன்ரோ விற்கு காலை நேரத்தில் வாகனத்தில் வர இரண்டு மணி நேரத்தை விட அதிகம் எடுப்பது என்பது நேர நெருக்கடியாகவே கருதப்படுகின்றது. இவ்வாறே திரும்பி செல்வதற்கும் எடுப்பதாக தெரிய வருகின்றது. இந்நிலைமையை Echo Boomers விரும்புவதாக இல்லை. மற்றைய வயதினர்களும் விரும்பவில்லை.

இயல்பாகவே இருக்கும். இதில் இன்னுமொரு நிலைமை உருவாகுவதனையும் காணக்கூடியதாக உள்ளது. இவர்கள் இருக்கும் கட்டிடத்தில் சகல வசதிகளும் (All Amenities) இல்லாவிட்டாலும் அந்தச் சூழலில் சகல வசதிகள் இருந்தாலும், இவர்கள் வாழ்வதனை விரும்புகிறார்கள். இதனாலே சிறிய சிறிய 400 சதுரஅடி மனைகள் தோன்றுவதனையும் காணக் கூடியதாக உள்ளது. அனுபவமாகக் கொண்ட அனேக அடுக்குமாடி கட்டிடம் கட்டும் நிறுவனங்கள் தமது கட்டிடங்களிற்கு அண்மையில் சகல வசதிகளையும் கொண்டு வரக்கூடியதாக ஏற்பாடுகளை செய்கின்றார்கள். ரொறொன்ரோவின் வாழ்க்கை இந்த திசையிலேயே குறிப்பிட்ட



இதனால் ரொறொன்ரோவில் சகல வசதிகளும் கொண்ட பகுதியில் அமைக்கப்படும் அடுக்குமாடி மனைகளை நோக்கி புதியவர்கள் வருவது காலம் செல்லலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. இதனை மனதில் கொண்டு அதற்கேற்ப முன் முயற்சியில் ஈடுபட்டால் எதிர்காலம் பிரகாசிக்கும்.


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



Raja Mahendran, P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

## HOUSE FOR SALE
### KENNEDY &SHEPPARD



2 story house for sale. 6+1 Bedrooms 7 Washrooms, 3 garages, 2 kitchens. 7,200 Sq.ft. Huge backyard. 80 Feet frontage. Stone elevation. Hardwood /Granite/Marble floor. Quiet area. Asking price $2.2 million.

## HOUSE FOR RENT
### FINCH & MCCOWAN

3 bedrooms house for rent. One washroom, 1Parking. main floor only. Avail. anytime. Asking $1,325.

## Coin laundry For Sale Kennedy & Eglinton

A Highly populated. Surrended by apartment area. One Year new business. High quality washer & dryer. Money changing machine. Soap dispensor. Possible to have alteration person & laundry outlet. Very reasonable rent. Longe term lease possible.

## CONVENIENCE STORE FOR SALE
### MIDDLEFIELD & FINCH



Lotto, Tickets, Key cuts, Movie rental, (exclusive in the plaza) Convenience & Indian/Srilankan Groceries. Established Over 10 years. 200Sq.ft. Low Rent $3,500. Asking only 69,900

# பொதுநலவாய மாநாட்டின் நிகழ்ச்சி நிரலையே மாற்றிவிட்ட கமரூன்!

இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட மாநாடு முடிவடைந்து இரு வாரங்களாகின்ற போதும் அம்மாநாட்டின் சலசலப்பு இன்னமும் ஓயவில்லை. அதற்கு பிரதானமான காரணமாக பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் நடந்து கொண்ட விதமும், அவர் தெரிவித்த - தொடர்ந்து தெரிவித்து வரும் கருத்துக்களும் அமைந்து விட்டன. பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டன் கலந்து கொள்ளக்கூடாது, பிரிட்டன் அந்த மாநாட்டை பகிஸ்கரிக்க வேண்டும் என பிரிட்டன் பல குரல்கள் ஒலித்த போதிலும், கமரூன் அம்மாநாட்டில் கலந்துகொண்டார். அவர் கலந்து கொண்டதே இலங்கை அரசாங்கத் திற்கு பிரச்சினையாகப் போய்விட்டது. அவர் கலந்துகொள்ளமல் விட்டிருந்தால் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளாத விடயம் போல், கனடா, மொறிசியஸ் பிர-தமர்கள் கலந்து கொள்ளாதது போல் இதுவும் சாதாரணமாக இருந்து விட்டுப் போயிருக்கும். ஆனால், கமரூன் கலந்து கொண்டதும், அதனைத் தொடர்ந்து அவர் வெளியிட்டு வரும் கருத்துக்களும் இன்று சிக்கலான விவகாரமாக இலங்கை அரசிற்கு உருவெடுத்துள்ளது.

கமரூன் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வரும் முன்னரே இலங்கைத் தரப்பிற்கு தலைவலி தரும் செய்தியை வெளியிட்டார். தாம் இலங்கை அரசாங்கத்திற்கு கடுமையான அழுத்தம் கொடுக்கும் சங்கதிகளுடனேயே செல்வதாக அவர் கூறினார். அம்மாநாட்டில் கலந்து கொள்வதன் மூலமே இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். இதுவே இலங்கை அரசிற்கும் பிரிட்டிஸ் பிரதமருக்கும் முறுகல் நிலை ஆரம்பமாக பிள்ளையார் சுழியாக அமைந்து விட்டது. பிரித்தானிய பிரதமரிடம் கேட்பதற்கு தன்னிடமும் கேள்விகள் உள்ளதாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஒரு கட்டத்தில் கூறியிருந்தார். பிரித்தானிய பிரதமர் இலங்கை வந்ததும் இலங்கையின் மனித உரிமை மீறல் தொடர்பான பிரச்சினையையே பூதாகரமாக கிளப்பினார். அவர் இங்கு வந்தவுடன் அவரை அழைத்துச் செல்ல ஆயத்தமாக விருந்த பிரத்தியேக வாகனத்தை புறுக் கணித்து விட்டு அவரது வாகனத்திலேயே சென்றார். அவரை வரவேற்பதற்காக ஏற்பாடு செய்திருந்த நடன நிகழ்ச்சியைப் புறக் கணித்தார். மாநாட்டின் பிரதான கலந்துரை யாடலையும் புறக்கணித்துவிட்டு யாழ்ப்பாண த்திற்குச் சென்றார். யாழ்ப்பாணத்தில் அவர் காணாமல் போனவர்களின் உறவினர்களை சந்தித்தார். பலமுறை தாக்குதலுக்குள்ளான உதயன் பத்திரிகை நிறுவனத்தின் அலுவலகத்திற்குச் சென்று பார்வையிட்டார்.

யாழ்ப்பாண சந்திப்புக்கள் குறித்த ஒளிப்படங்களை தமது டுவிட்டர் தளத்தில் வெளியிட்டு உலகம் முழுவதிலும் பரப்பினார். கொழும்பில் தனிப்பட்ட முறையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் மேற் கொண்ட கலந்துரையாடலிலும் இறுக்கமான கருத்துக்களையே பகிர்ந்து கொண்டார். பிரிட்டன் திரும்பிய கமரூன் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, இப்போது இலங்கை ஒரு மாதத்திற்கு முன்னர் இருந்ததை பார்க்கிலும் மனித உரிமை விடயத்தில் நெருக்குதலில்



உள்ளது எனக் கூறினார். மாநாட்டின் இறுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவிடம் கூடுதலாக மனித உரிமை விடயங்கள் தொடர்பான கேள்வி எழுப்பியதன் மூலம் இது தெரிய வருகிறது எனவும் அவர் கூறியிருந்தார். அடுத்த மார்ச் மாதத்திற்கு முன்னர் மனித உரிமை விடயத்தில் முன்னேற்றம் காணப்படாவிட்டால் சர்வதேச விசாரணையை கோருவோம் என்றும் கமரூன் கூறியிருக்கின்றார். இந்த நிலையில், இலங்கை அரசுதரப்பினரும், அரசிற்கு ஆதரவான ஊடகங்களும் கமரூன் மீது வசை பாடத் தொடங்கிவிட்டன. பிரிட்டிஸ் ஆட்சியின்போது இலங்கை மீது அவர்கள் மேற்கொண்ட ஒடுக்குமுறைகள், பிரிட்டிஸ் ஆக்கிரமிப்பிற்கு எதிராக இலங்கையர்கள் மேற்கொண்ட போராட்டத்தை ஆயுதமுனை யில் அடக்கியொடுக்கியமை குறித்த செய்திகள், விவரணங்கள் என்பன அரசசார்பு ஊடகங்களில் அவ்வப்போது வெளியிடப்படு கின்றன. அது மட்டுமல்லாது, பலஸ்தீனம், ஈராக், லிபியா மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் பல தசாப்தங்களாக பல்லாயிரக் கணக்கானவர்கள் கொல்லப்படு கின்றமைக்கும், பலஸ்தீனத்தில் வருடாந்தம் ஆயிரக்கணக்கான வீடுகள் இஸ்ரேலியர்களால் புல்டோஸர்கள் மூலம் இடித்துத் தள்ளப்படுகின்றமைக்கும் பிரிட்டன் வழங்கி வரும் உதவிகள் வரை விமர்சிக்கப் பட்டு, சுட்டிக்காட்டப்பட்டு, பிரிட்டனுக்கு மனித உரிமைகள் குறித்து பேச என்ன தகுதி இருக்கின்றதெனவும் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

இவற்றையெல்லாம் கடந்து, ஊடக சுதந்திரத்தின் எல்லைகளை மீறி பிரித்தானிய பிரதமரை கோமாளி, எருமை, பட்டிக்காட்டான் என்றெல்லாம் கூட இலங்கை ஊடகங்கள் திட்டித் தீர்த்துள்ளன. இவ்வாறு திட்டியுள்ள கொழும்பு ஆங்கிலப்பத்திரிகை-யொன்று கமரூன் விடுத்த கோரிக்கை தொடர்பாக அவர் மன்னிப்பு கோரவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. குறித்த அந்தப் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கத்தில் 'இலங்கை மண்ணில் வந்திறங்கிய நேரத்திலிருந்து பிரித்தானிய பிரதமர் ஏகாதிபத்திய மடையனாக நடித்தார். அவரது அவமரியாதை தொட்டு உணரக் கூடியதாக இருந்தது. அவர் விதிவிலக்கான பட்டிக்காட்ட னாகக் காணப்பட்டார்' எனக் குறிப்பிட்டிருந் தது. போர்க் குற்றங்கள் குறித்து மார்ச் மாதத்திற்குள் விசாரணை நடத்த இலங்கை அரசு உத்தரவிட வேண்டும் இல்லையெனில் சர்வதேச விசாரணையை பிரிட்டன் வலியுறுத்தும் என்ற கமரூனின் கருத்திற்கு ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த மஹிந்த ராஜபக்ச, பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனின் இந்த கோரிக்கையை ஒருபோதும் ஏற்கமுடியாது என்றும், தங்களுக்கு யாரும் கட்டளையிட முடியாது என்றும் கூறினார்.

மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ள இலங்கைக்கு கால அவகாசம் வேண்டும். இந்த பணிகளை மேற்கொள்ள எங்களுக்கு கால அளவை நிர்ணயிக்க கூடாது. எங்கள் நாட்டிற்கு என்று சட்ட அமைப்பு மற்றும் அரசியலமைப்பு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மஹிந்த ராஜபக்சவின் சகோதரரும், இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தாபய ராஜபக்ச வழமை போல அவரது பாணியில் கருத்து வெளியிட்டார். விடுதலைப் புலிகளை திருப்திப்படுத்தவே சர்வதேச போர்க்குற்ற விசாரணையைக் கேட்கிறார் பிரித்தானிய பிர-தமர் என்று அவர் தெரிவித்துள்ளார். கமரூனின் செயற்பாடு, பிரிட்டனில் உள்ள உலகத் தமிழர் பேரவை மற்றும் பிரிட்டன் தமிழர் பேரவை ஆகியவற்றின் பின்னணியில் அமைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார். பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக் காக இலங்கை வருவதற்கு முன்னர் பிரித்தானிய பிரதமரிடம் குழுவினரை, அந்நாட்டில் உள்ள தமிழ் குழுக்கள் சந்தித்தாகவும், மேலும் பிரிட்டனில், கன்சர்வேட்டிவ் மற்றும் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் வெற்றியை கருத்தில் கொண்டே செயற்படுகின்றனர் எனவும், போர்க் குற்றம் தொடர்பில் கமரூனின் எச்சரிக்கை, இலங்கை இன்னும் பிரிட்டிஸ் ஆளுகைக்குள் இருப்பதை போன்ற நிலைமையை தோற்றுவித்திருக்கிறது எனவும்

**- விகிர்தன் -**


அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

போர்க் குற்றங்கள் தொடர்பாக எழுந்துள்ள புகார் குறித்து விசாரணை நடத்த நாடாளுமன்ற குழுவை அமைத்திருக்கிறோம். அந்தக் குழுவில், அனைத்து கட்சி உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர். அந்த விசாரணைக்கு கால அவகாசம் தேவைப்படுகிறது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தொடர்ந்து கூறி வருகின்றார். இவ்றையெல்லாம் புறந்தள்ளி, இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது நடந்த போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை நடத்தும் போலியான விசாரணைகளை ஏற்க முடியாது என திட்டவட்டமாக அறிவித்துள்ளார் பிரித்தானிய பிரதமர். இலங்கையின் வடபகுதிக்கு முதல் முறையாக பயணம் செய்ததன் நோக்கம் மற்றும், அங்குள்ள தமிழர் நிலை குறித்து பிரித்தானிய நாடாளுமன்றத்தில் அவர் விரிவாக விளக்கியுள்ளார். வட பகுதியில் நடந்த போரில் மிகப் பெரிய அளவில் மனித உரிமை மீறல்களும், போர்க் குற்றங்களும் நிகழ்ந்துள்ளன. இந்த போர்க் குற்றச் சாட்டுக்களில் இருந்து தப்பிச் செல்ல இலங்கைக்கு இடமளிக்கப் போவதில்லை. அதேபோல போர்க் குற்றங்கள் தொடர்பில் இலங்கை நடத்தும் போலியான விசாரணை-களை ஏற்றுக்கொள்ள முடியாது. சர்வதேச அளவில் சுயாதீன விசாரணை அவசியம். இவ்வாறு கமரூன் அழுத்தமாக குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555


Sell your home
faster
and more money
Audley / Rossland/ Salem
$448,800
4 Bedrooms, 3 W Rooms
9 Foot Ceilings On Main Floor
Upgraded Kitchen Cabinets
Meadowvale/Sheppard
$459,900
3+2 Bedrooms, 3 W Rooms
Kitchen Has Ceramic Floor Under Tile.
Dining Room Walkout To Large Deck
Markham/Ellesmere
$489,000
3+2 Bedrooms, 2 W Rooms
Newer Finished Basement
Gorgeous & Upgraded ($85000)
Markham & Ellesmere
$519,000
3+2 Bedrooms, 2 W Rooms
Great Home With Finished
Basement In 7 Oaks
Cornell Centre Blvd/Hwy 7
$559,000
4 Bedrooms, 3 W Rooms
Built By Madison Homes On
A Quiet Street
Taunton & Salem
$569,000
4+1 Bedrooms, 4 W Rooms
2 Car Garage, Access To Home From
Garage, Quiet Neighbourhood
Sheppard/Hwy 2
$569,900
4+2 Bedrooms, 4 W Rooms
Professionally Fin Bsmt
2 Rooms, Bdrm & Full Wshrm
Reeves Way / Ninth Line
$569,999
4 Bedrooms, 4 W Rooms
Fully Finished Basement With Bedroom,
Storage Room & Washroom
Church & Rossland
$609,900
4 Bedrooms, 3 W Rooms
Executive Home On 50Ft Lot In
Prestigious Area Of Pickering Village.
Oasis/Passmore
$629,900
4+1 Bedrooms, 4 W Rooms
9' Ceilings, Gleaming Hardwood
Flooring Through-Out The House.
Fr Tobin/ Fernforest
$659,000
5 Bedrooms, 4 W Rooms
New Backsplash New Range Hood
Pot Lights,Freshly Painted,
Markham/14th
$680,000
3+1 Bedrooms, 4 W Rooms
Professionally Finished Bsmt With
Pot Lights, Separate Entrance
16th Ave / Markham Rd
$688,000
4 Bedrooms, 3 W Rooms
Huge Kitchen With Desk, Island & Separate
Breakfast Area, Open Concept
Mccowan/14th Ave
$848,800
4 Bedrooms, 6 W Rooms
Entrance To Finished Basement
With 3 Bedrooms
Warden/16th
$1,189,000
4+1 Bedrooms, 5 W Rooms
Pressionaly Renovated Basement
W/Living Room, Bedroom And Washroom
When you list your home with Mike,you receive these Guarantees.
Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full color prints ads every week until it is sold
Our team of specialists for the same price as hiring a single agent
Your home sold in 30 days or we buy it
RE/MAX
#1
Elaguppillai Srinathan (Mike) B.Sc
Sales Representative/Builder
Direct 416 - 276-1225
Email: esrinathan@yahoo.com
KZG 647-200-5833
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770
I can also assist your Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# கனடிய...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

அமைகிறது. அனைவருக்கும் தேசிய பாதுகாப்புக் கிடைப்பதற்கு அடிப்படையாக, கனடாவில் வாழும் சமூகங்களிடையே இணைப்பையும் பிணைப்பையும் ஏற்படுத்துவதை விடுத்து, அவற்றிடையே காணப்படும் தொடர்பாடலையும் உறவையும் அது தகர்த்தெறிகிறது. வெள்ளை இனத்தவருக்கு ஒரு சட்டம், இனவாரி நடவடிக்கைக்கு இலக்காகுவோருக்கு வேறொரு சட்டம் என்பது தெளிவாகத் தெரியும் சூழ்நிலையில், ஒருவர் சட்ட ஆட்சியில் நம்பிக்கை வைத்து, காவல்துறையுடன் ஒத்துழைப்பது எங்ஙனம்?

• இனவாரி நடவடிக்கைக்கு இலக்காகும் இளையோரை, அது சமூகவிரோத நடத்தைக்கு இட்டுச்செல்கிறது என்பதை ஒன்ராறியோ மனித உரிமை ஆணையம் (Ontario Human Rights Commission) கண்டறிந்துள்ளது. தவறேதும் இழைக்காத இளையோர் தாம் குற்றவாளிகளாக நடத்தப்படுவதாகக் கருதினால், அவர்கள் சட்டத்தை மதித்து நடப்பதற்கு ஓர் உந்துதலும் ஏற்படாது. 'நீர் ஒரு மனிதப் பிறவியாகக் கணிக்கப்படுவதற்கும் மதிக்கப் படுவதற்கும் அருகதை குன்றியவர் என்று தெரிவித்து அவருடைய கண்ணியத்தை மீறுவதாகவே இனவாரி நடவடிக்கை அமைகிறது. மக்களின் கண்ணியத்தின்மீதும் தன்மானத்தின்மீதும் அது ஏற்படுத்தும் தாக்கத்தை, ஆணையத்தின்முன் வைக்கப் பட்ட ஒவ்வொரு கூற்றும் உறுதிப்படுத்தியது' என்பதை ஆணையம் கண்டுகொண்டது.

## தார்மீக அச்சம் தணிகிறதா?

9/11 நிகழ்வின் பின்னர் பாதுகாப்பு என்னும் பெயரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை களைக் குறித்து வினா எழுப்பும் குரல்கள் இன்று ஓங்கி ஒலிப்பதை நாம் கேட்கின் றோம். அவற்றுட் சில நாம் எதிர்பார்க்காத மூலைகளிலிருந்து கிளம்புகின்றன.

• கவஜா (Khawaja) என்பவருக்கு எதிரான வழக்கை விசாரித்த ஒன்ராறியோ மேல் நீதிமன்ற நீதியரசர் றதவோட் (Justice Rutherford of the Ontario Superior Court of Justice), ஒரு குற்றத்தைப் பயங்கரவாதச் செயல் என்று கொள்வதற்கு 'ஓர் அரசியல், சமய, சித்தாந்த நோக்கமோ இலக்கோ குறிக்கோளோ' இருக்க வேண்டும் என்னும் பயங்கரவாத வரையறையில் ஒரு கூறினை நிராகரித்தார். நீதியரசர் றதவோட் தமது தீர்ப்பில் விளக்கியவாறு:

அரசியல், சமய, சித்தாந்த உள்நோக்கம் என்னும் அடிப்படைக் கூறின்மீது புலனைச் செலுத்தும் முறையினால் பேச்சு, சமய, சிந்தனை, நம்பிக்கை, எடுத்துரைத்தல், கூட்டுச்சேர்தல் சுதந்திரமே, அதாவது மக்களாட்சி நெறி வாழ்வே அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறது என்பதுதான் இங்கு கரிசனைக் குரிய விடயம். இனவாரி நடவடிக்கைக்கு இலக்காகும் அரசியற் குழுமங்களை அல்லது சமயக் குழுமங்களைக் குறித்து ஓர் அச்சத்தையும் ஐயுறவையும் அது வளர்க்கும். அரசாங்க அதிகாரிகள் பல்வேறு துறைகளில் இன, மத, குழும வாரியாக நடவடிக்கை எடுக்க அது வழிவகுக்கும்.

பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகளில் கடும் உரிமை மீறலும் ஓரவஞ்சமும் இடம்பெற வாய்ப்புண்டு என்பது இத்தீர்ப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

• தேசிய பாதுகாப்பு நோக்கங்களுக்காக குறிப்பிட்ட சமூகங்களுக்கு எதிராக ஓரவஞ்சம் புரிய முடியாது என்பதை மேகர் அறார் தொடர்பான நிகழ்வுகள் பற்றிய தமது அறிக்கையில் (Report of the Events Relating to Maher Arar) நீதியரசர் ஓ கொனர் (Justice O'Connor) அவர்களும் அத்துணை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இனவாரி நடவடிக்கைக்கு இடங்கொடாத நடைமுறைகளைத் தேசிய பாதுகாப்பு முகமையகங்கள் உருவாக்கி, எழுதி வைத்திருப்பதை அவர் விதந்துரைத்துள்ளார். அவர் ஏற்றுக்கொள்ளும் விடயம் வருமாறு:

வருங்காலத்தில் நிலைமை மாறக்கூடும். தற்பொழுது பெரிதும் முஸ்லீம், அறபு சமூகங்களைக் கருத்தில் கொண்டே பயங்கரவாத எதிர்ப்பு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே இன, சமயவாரி நடவடிக்கை இடம்பெறும் ஆபத்து தற்பொழுது அதிகரித்துள்ளது. அதாவது ஒருவரின் இனமோ, சமயமோ, குழுமமோ அவரை விசாரணைக்கு உள்ளாக்கக்கூடும். எவருக்கும் ஓரவஞ்சம் புரியாது அனைவரை யும் சரிநிகராக நடத்திச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை உண்டு. அதேவேளை கனடா பலபண்பாட்டு நெறியைத் தழுவிய நாடாகவும் விளங்குகிறது. இனவாரி நடவடிக்கை, அவற்றுக்கெல்லாம் மாறானது. தேசிய பாதுகாப்பு விசாரணைகளுக்கு உகந்த, நம்பக்கூடிய, செவ்வையான, துல்லியமான விபரங்கள் தேவைப்படும். படிவார்ப்புகளை நம்பி இனவாரி நடவடிக்கை எடுப்பது அதற்கு மாறானது. இன, சமய, இனத்துவவாரி நடவடிக்கை நற்காவல் முறைமைக்கோ பாதுகாப்பு புலனாய்வுப் பணிக்கோ நேரெதிர்மாறானது.

• அடிப்படை உரிமைகள் மீறப்படுவதை, தேசிய பாதுகாப்பு எந்த விதத்திலும் நியாயப் படுத்தாது என்னும் செய்தி, 2007ல் சர்க்கவுயி (Charkaoui) என்பவருக்கும், அவருடன் கூடக் குற்றஞ்சாட்டப்பட்டவர் களுக்கும் எதிரான வழக்கில் கனடிய உச்ச நீதிமன்று அளித்த தீர்ப்பிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றின் ஒருமித்த தீர்ப்பில் காணப்படும் விடயம்:

பாதுகாப்புத் தொடர்பான அந்தரங்கமான தகவலைப் பாதுகாக்கும் அதேவேளை ஒருவரின் உரிமைகள் மீறப்படுவதைக் குறைக்கும் தீர்வுகளை வகுக்க முடியும் என்பது, மற்றைய மக்களாட்சி நாடுகளிலும், கனடாவில் வேறு பாதுகாப்பு நிலைவரங்களி லும் கைக்கொள்ளப்பட்ட அணுகு முறைகளிலிருந்து தெளிவாகிறது.



அலை மெதுவாக மாறத் தொடங்கியுள்ளது என்பதற்கு இவை சில எடுத்துக்காட்டுகள் மாத்திரமே. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் துறையினர் இனவாரி நடவடிக்கையிலும், வேறு ஓரவஞ்ச வழமைகளிலும் ஈடுபடுவதாலும், அதனால் மக்கள் மத்தியில் வடுப்படுவதாலும் உண்டாகும் விளைவுகளை முஸ்லீம், அறபு, ஆபிரிக்க, தென்னாசிய சமூகங்களும் பிறவும் அன்றாடம் எதிர் கொண்டு வருகின்றன. நாம் எழுந்த வரலாற்றையும், மக்களாட்சி நெறிநின்று விழைந்த சமுதாயத்தையும் நினைந்து இச்சின்னஞ்சிறு வெற்றிகளைக் கருத்தில் கொள்வதே இன்று எம்முன்னுள்ள பணியாகும். சிரியா நாட்டுச் சிறை ஒன்றில் ஓராண்டுக்கு மேலாகச் சித்திரவதைக்கு ஆட்பட்டு மீண்ட மேகர் அறார் (Maher Arar) முழங்கியவாறு: 'எமது நாட்டின் எதிர்காலம், கனடியக் குடிமக்களின் நலன்கள், எல்லாவற்றிலும் மேலாக, ஏனைய கனடியர்களைப் போலவே கனடாவில் வாழும் வெவ்வேறு இனத்துவக் குழுமங்களைச் சேர்ந்த குடிமக்களை நடத்தி மனித உரிமை-களைக் கட்டிக்காப்பதில் முன்னணியில் திகழும் ஒரு நாடு என்னும் கனடாவின் உலகப் புகழ் இங்கு பணயம் வைக்கப்பட்டுள்ளது.'

தமிழாக்கம்: மணி வேலுப்பிள்ளை

**MATH, PHYSICS & COMPUTER SCIENCE / PROGRAMMING STUDIES HOME TUTORING**



*Subjects*

- *Grade 11, 12: Any Math/Physics/Computer studies credit courses*
- *University (Any year): (Including but not limited to) Calculus, Linear Algebra, Statistics, Probability, Computer programming (Java/C++ etc) Discrete Mathematics, Data Structures, Algorithms.*
- *IB: Any Mathematics/Physics/Computer Science Diploma courses.*

**Contact: Bala Balamohan**

**416.551.2553**

- B.Sc. & M.Sc. degree in Mathematics from U of Toronto
- M.C.S & Ph.D. degrees in computer science from U of Ottawa
- More than 10 years experience as teaching assistant at U of Toronto & U of Ottawa
- Winner, Graduation prize, Dept. of Computer & Mathematical Science, U of Toronto, Scarborough (UTSC), 2005
- Member, UTSC'S first team for **Putnam Competition**

**வாடகைக்கு**

ஸ்காபரோ மற்றும் மார்க்கம் ஏரியாவில்

1,2 பெட்ரூம் பேஸ்மண்ட்
2, 3 பெட்ரூம் வீடுகள்
1,2, 3 பெட்ரூம் கொண்டோக்கள்

Kipling / Keeles இல் 2BR & 2WR கொண்டோ உடனடி விற்பனைக்கு.

மேலதிக தகவல்களுக்கு :
**Jey 416-816-9011**


# காலத்தோடு வளரும் கணினிகள் - 34

அன்பான வாசகர்களே!

கடந்த இதழிலும், அதற்கு முந்திய இதழிலும் மைக்கிரோ சொவ்ற் எக்சல் (Microsoft Excel) மென்பொருளைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். மைக்கிரோ சொவ்ற் எக்சல் மென்பொருளைத் திறந்து Home மெனுவிற்குப் போனதும் Home Tool Bar விரிதாளிற்கு மேலே தோன்றும். இதில் உள்ள தெரிவுகளைப் பற்றிக் கவனிப்போம். இங்கே இடது புற மூலையில் Clipboard பகுதியில் Cut, Copy, Paste போன்ற தெரிவுகள் காணப்படும். இதற்கு அடுத்ததாக வலது புறம் நோக்கிப் பார்த்தால் மைக்கிரோ சொவ்ற் வேட் மென்பொருளில் உள்ளவாறே எழுத்துருக்களில் (Fonts) மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தெரிவுகள் உள்ளது. அடுத்ததாக வலதுபுறமாக பந்தியொன்றின் (Paragraph) அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வேண்டிய தெரிவுகள் இருக்கும். வலது புறத்தில் Find, Replace, Select All முதலிய தெரிவுகள் இருக்கும். இவற்றின் பயன்பாடு பற்றி மைக்கிரோ சொவ்ற் வேட் மென்பொருளில் எடுத்துக் கூறிய விடயங்கள் அனைத்தும் எக்சல் மென்பொருளிற்கும் பொருந்தும்.

Home மெனுவில் வலது புறத்தில் உள்ள Tools Bar இல் Insert தெரிவு உள்ளது. இதனை கிளிக் செய்ததும் ஒன்றின் கீழ் ஒன்றாக Insert Cells, Insert Sheet Rows, Insert Sheet Columns, Insert Sheet ஆகிய தெரிவுகள் தோன்றும். இதில் Insert Sheet Rows தெரிவு மூலம் ஏதாவது இரண்டு வரிசைகளுக்கு இடையில் ஒரு வரிசையைப் புகுத்திக் கொள்ளவும், Insert Sheet Columns தெரிவு மூலம் ஏதாவது இரண்டு நிரல்களுக்கிடையில் ஒரு நிரலைப் புகுத்திக் கொள்ளவும் முடியும். ஒரு எக்சல் மென்பொருள் கோப்பில் பல விரிதாள்களைப் புகுத்திக் கொள்ள முடியும். இதனைச் செய்வதற்கு Insert Sheet தெரிவைப் பயன்படுத்தலாம். Insert Cells என்ற தெரி வின் மூலம் விரிதாளில் உள்ள ஒரு கலத்தை (செல் Cell) வலது புறமாக அல்லது கீழ்ப்புறமாக நகர்த்த முடியும்.

இப்பொழுது Insert மெனுவில் உள்ள தெரிவுகளைப் பற்றிப் பார்ப்போம். இடது புறத்தில் வெற்றுப் பக்கங்களைப் புகுத்தவும், முன் அட்டைப் பக்கத்தைப் புகுத்தவும், பக்கத்தை முடித்துக் கொள்வதற்கும் (Page Break) உரிய தெரிவுகள் இருக்கும். அடுத்ததாக காணப்படும் Insert Picture, Clip Art, Shapes, Smart Art தெரிவுகள் மைக்கிரோ சொவ்ற் இல் உள்ளது போலவே இருக்கும். இவ்வாறே Insert மெனுவில் உள்ள ஏனைய தெரிவுகளும் இருக்கும். Page Layout மெனுவில் margins, Orientation (Portrait or Landscape), Size, Themes, Background போன்ற தெரிவுகளுடன் வேறு சில தெரிவுகளும் இருக்கும். இங்கே உள்ள Print Titles, Print Area தெரிவுகள் முக்கியமானவை. மைக்கிரோ சொவ்ற் எக்சல் மென்பொருளில் உள்ள விரிதாள் மிகவும் பரந்தது. அதனால் அச்சுப்பதிவு (Printing) செய்ய வேண்டிய பகுதியைக் குறிப்பிட்டுக் கொள்ள Print Area தெரிவு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். குறிக்கப்பட்ட நிரல்களிலும், வரிசைகளிலும் உள்ள விடயங்களை தலைப்பு ஆக மீண்டும் மீண்டும் அச்சுப்பதிவு செய்ய Print Titles உதவியாக இருக்கும். இந்த மென் பொருளிலும் Review மெனுவில் Spelling Check செய்வதற்குரிய தெரிவுகள் இருக்கும். மேலே குறிப்பிட்ட தரவுகளைப் படித்து எக்சல் மென்பொருளைப் பாவித்து பழகிக் கொள்ளலாம்.




இப்பொழுது ஒரு பயிற்சியை எக்சல் மென்பொருளில் செய்து பார்ப்போம். எக்சல் மென்பொருளின் விரிதாளில் உள்ள நிரல்களின் அகலத்தையும், வரிசைகளின் உயரத்தையும் விரும்பியவாறு அதிகரித்துக் கொள்ளலாம். இந்தப் பயிற்சியில் நிரல்கள் D, E, F, G ஆகியவற்றின் அகலத்தை பெருப்பித்துக் கொள்வோம். இதனைச் செய்வதற்கு மவுஸ் பொயின்ரரை நிரல்களின் பெயர்கள் இடப்பட்ட வரிசையில் அடுத்தடுத்த நிரல்களின் சநதிப்பிற்கு எடுத்துச் செல்லும் பொழுது Cross Hairs ஆக மாறுவதைக் காணலாம். அப்பொழுது மவுஸ் இடது புற பட்டனை அழுத்தியவாறு இழுத்து நிரல்களின் அகலத்தைக் கூட்டிக் குறைத்துக் கொள்ளலாம். இதனைச் செய்து பார்க்கவும். D5, E5, F5, G5 ஆகியவற்றில் Item, Qty, Rate, Amount ஆகியவற்றைத் தட்டச்சு செய்யவும். நிரல் Dயில் Item க்கு கீழ் Shirt, Book, Pen ஆகியவற்றைத் தட்டச்சு செய்யவும். நிரல் E யில் Qty ற்குக் கீழ் 3, 1, 4 என்பவற்றைத் தட்டச்சு செய்யவும். நிரல் Eயில் Rate ற்குக் கீழ் 18,35,7 ஆகியவற்றைத் தட்டச்சு செய்யவும். இப்பொழுது செல் (Cell) G6 இல் மவுஸ் பொயின்ரரை நகர்த்தி +E6*F6 எனும் சூத்திரத்தைத் தட்டச்சு செய்யவும். E6 இல் உள்ள 3 என்ற இலக்கத்தை F6 இல் உள்ள 18 இலக்கத்தால் பெருக்கி வரும் விடை 54 G6 இல் வரும். இப்பொழுது G6 இல் உள்ள சூத்திரத்தை Copy Paste செய்தால் G7 இல் 35 உம், 28 உம் வரும். இவ்வாறாக பல கணித்தல் வேலைகளை எக்சல் மென்பொருளில் செய்து கொள்ளலாம்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரி யப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி.

வணக்கம்.

தொடரும்...




**- அகணி -**

authorakani@yahoo.com



## உரும்பிராய் பாடசாலைகள் பழைய மாணவர்கள் சங்கம் கனடா

எமது சங்கத்தினால் தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு வருடாவருடம் நடத்தப்படும் பேச்சுப்போட்டியும், சங்கீத பேட்டியும் நடைபெறவுள்ளது.

**காலம்:** டிசம்பர் 15மிம் திகதி ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** காலை 9:00 மணி
**இடம்:** ***Milliken Mills Community Centre***
***7600 Kennedy Rd, Unit 1, Markham, ON L3R 9S5***

*T. Varatharajahn: 416.805.7392 / T. Selvan: 647.333.0029*

## வரிகள் (காலை) வாராது காப்போம்

## *TAX RELATED SERVICES*
## *INCOME TAX & HST*

***Unfiled Returns From 2005***

- Filing Under Voluntary Disclosure Program (VDP)
- Tax Appeals
- SR & ED Investment Tax Credits
- Individual and Corporate Taxation

***> Company Incorporations***
***> Business Registration***
***> Business Plans***
***> Emergency Business Loans - upto $5 M***

Call:Siva-**416.901.0929** / Yoga-**416.492.7957**

*Email: siva@sivassolutions.com www.sivassolutions.ca*

*Sivas Solutions*

*708-419 Markham Rd toronto M1J 3E1*

# கணவனை இழந்த பெண்கள் - 90 ஆயிரம்

## தாயக மடல்

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 90,000 கணவனை இழந்த பெண்கள் வாழ்கின்றனர் என அண்மையில் புள்ளி விபரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. விழுது என்கிற அமைப்பு இதனை வெளியிட்டுள்ளது. இவர்கள் தங்களின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வாழ்ந்து வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. உலகில் இன்று இரண்டு பிரதான காரணிகளால் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். ஒன்று வறுமை மற்றது போர். மேலும், அவ்வப்போது ஏற்படும் இயற்கை அனர்த்தங்களாலும் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இவற்றினால் ஏற்படும் பாதிப்புகளை அனைத்துத் தரப்பினரும் எதிர்கொண்டாலும், பெண்களின் பாதிப்பு என்பது தனிப்பட்டதாக அமைகின்றது. போரினாலும், இயற்கை அனர்த்தங்களாலும் குடும்பத்தில் உழைப்பாளிகளை இழந்து தவிக்கும் குடும்பங்களின் நிலை மோசமானது. குறிப்பாக சொல்வதானால், கணவன்மாரை இழந்து வாழும் பெண்களின் நிலை வறுமை நிலையுடன், பாதுகாப்பற்றதா கவும் மாறிவிடுகின்றது. இலங்கையின் வடக்கு கிழக்கில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்ற போர் காரணமான ஆயிரக்கணக்கான பெண்கள் கணவனை இழந்து விதைவைகளாக்கப் பட்டுள்ளனர். பலர், கணவர் காணாமலாக்கப் பட்ட நிலையில் இரண்டும் கெட்டான் நிலையில் தவிக்கின்றனர்.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டம் ஒன்றிலேயே சுனாமி என்ற இயற்கை அனர்த்தமும் ஏற்பட்டது. சற்றும் எதிர்பாராத, கற்பனை செய்து கூட பார்க்காத இழப்புக்களை அது ஏற்படுத்திவிட்டது. ஒரு நாளில் - சில மணி நேரங்களில் பல்லாயிரக் கணக்கானோர் பலிகொள்ளப்பட்டனர். அவர்களில் அதிகமானோர் உழைக்கும் ஆண்கள். இதனாலும் பல குடும்பப் பெண்கள் வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட் டுள்ளனர். போரினால் தொடர்ச்சியாக இழப்புகள் ஏற்பட்டு வந்த போதிலும் இறுதிக்கட்டப் போரில், ஒரே தொடர்ச்சியில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப் பட்டனர். இதன் காரணமாக மேலும் பல்லாயி ரக்கணக்கான பெண்கள் தங்கள் கணவரை இழந்துள்ளனர். இதனால் தங்கள் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை அவர்கள் முற்றாக இழந்துள்ளனர். வறுமையிலும், வாழ்வில் பாதுகாப்பற்ற நிலையிலும் அவர்களின் வாழ்க்கை நகர்கிறது. பொதுவாக, பெண்கள் என்றாலே சமூகத்தில் பலவேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி வருகின்றமையை காண்கின்றோம்.

பாடசாலை மாணவிகளிலிருந்து பல்கலைக் கழக மாணவி வரை பாலியல் ரீதியான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி வருகின்றது. அவர்களை வழிநடத்த வேண்டியவர்களாலேயே இந்நிலை ஏற்படுத்தப்படுகின்றது.

பாடசாலையில் பிள்ளையை சேர்க்கச் சென்ற பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கேட்ட பாடசாலை அதிபர்கள் தொடர்பான செய்திக- ளைக் கூட நாம் அன்றாடம் பார்க்கின்றோம். தொழிற்சாலைகளில், நிறுவனங்களில், வேறு தொழில்புரியும் இடங்களிலும் பெண்கள் மேலதிகாரிகளின் பாலியல் தொல்லை களுக்கு முகம்கொடுக்க நேர்கிறது. வீடுகளில் தனித்திருக்கும் போதும், பேரூந்துகளில் பயணம் செய்யும் போதும், வீதிகளில் நடக்கும் போதும் கூட பெண்களுக்கு பலவித தொல்லைகள் ஏற்படுத்தப்படுகின்றன. இப்படியான



**- வன்னியிலிருந்து ஆதித்தன் -**

நிலையில், வடக்கு கிழக்கில் போரினாலும் இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகியுள்ள பெண்களின் நிலை எவ்வாறிருக்கும்? அதுவும் போரின் பின்னால் இராணுவச் சூழலில் வாழும் - இச்சூழ்நிலைக் குள் தங்கள் கருமங்களை ஆற்றும் பெண்களின் நிலை எவ்வாறிருக்கும் என்பதை யாரும் கற்பனை செய்து பார்க்கலாம். இறுதி யுத்தத்தின் பின்னர் தமிழ் பிரதேசங்களில் வாழும் பெண்களின் நிலை மிகவும் பாதுகாப்பற்றதாகவே மாறியுள்ளது. பொதுமக்களின் வாழ்விடங்களைச் சுற்றி படையினரின் பிரசன்னமிருப்பதால் இதன் பாதிப்பு வார்த்தைகளால் விபரிக்க முடியாத ஒன்றாகும்.

போரின் பின்னர் தங்கள் பகுதிகளில் மீளகுடியமர்ந்தவர்கள் பல்வேறு தேவைகளுக்கும் படையினரிடம் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில், சிவில் நிர்வாகத்தில் படையினரே அதிகம் தலையிடுகின்றனர். பல்வேறு பதிவு களை படைமுகாம்களுக்குச் சென்றே மேற் கொள்ள வேண்டிய நிரப்பந்தம் இருக்கிறது. இதன் காரணமாக பெண்களுக்கு பாதிப்பு ஏற்படுவதோடு, பல சீரழிவுகளும் சமூகத்தில் பரவ ஆரம்பிக்கின்றது.

கணவனை இழந்த பெண்கள், தடுப்பு முகாம்களில் உள்ளவர்களின் மனைவிமார் என இவர்கள் படையினராலும் புலனாய் வாளர்களாலும் பல்வேறு பிரச்சனைகளுக்கும் துன்பங்களுக்கும் ஆளாக்கப்படுகின்றர். உதவி என்ற பெயரில் உறவாட முற்படுகின்றமை, அச்சுறுத்தி அடிபணிய வைக்கும் நிலை என பல்வேறு வகையிலான துன்பங்கள் அவை. யாழ்ப்பாணம், புத்தளம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள கணவனை இழந்த பெண்களின் குடும்பங்களுக்கு தலைமை தாங்கும் பெண்களின் மாநாடு ஒன்று மட்டக்களப்பு கிறீன் கார்டன் ஹோட்டலில் கடந்த 22-11-2013 வெள்ளிக்கிழமை நடை- பெற்றுள்ளது. அதன்போது பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவிகளால் முன்வைக்கப்பட்ட பிரதானமான பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் இங்கே தாயக மடலில் உங்கள் பார்வைக்கு தொகுத்துத் தருகின்றேன். ‘எமது பிரதேசங்கள் இராணுவ மயப்படுத்தப்பட்டதனாலும், அங்கு இராணுவப் படைகளின் அதிகரித்த நடமாட்டத்தினாலும், எமது பாதுகாப்பு குறித்து நாம் அஞ்சுகிறோம். பௌதிக ரீதியான பாதுகாப்பின்மையால் எமது சுதந்திர நடமாட்டம் தடைப்படுகின்றது. இதனால் கல்வி தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதிலும் சுகாதார சேவைகள் போன்ற சேவைகளைப் பெற்றுக்கொள்வதிலும் நாம் தடைகளை எதிர்நோக்குகின்றோம்.

எமக்கு பாதுகாப்பான நிரந்தர வீட்டு வசதிகள் அளிக்கப்படாமை எமது பாதுகாப் பின்மையை இன்னும் அதிகரிக்கின்றது. இராணுவத்தினரின் பிரசன்னமானது விசேடமாக பொதுவிடங்களில் பாலியல் வன்முறைகளுக்கும் பாலியல் தொந்தரவு களுக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கு கின்றது. எம்மைப் பாதுகாக்க வேண்டிய கடமைகள் கொண்ட காவல் துறையினரும் எமக்கெதிரான வன்முறை அதிகரிப்பதற்கான காரணிகளாக இருக்கின்றனர். எமது பிரதேசங்களில் இராணுவத்தினரின் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும், எம்மைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவர்கள், உதாரண மாக காவல்துறையினர், தமது கடமைகளைச் சரிவர மேற்கொள்ள வேண்டும். எமக்கு இருக்கும் வினைத்திறன்கள் மட்டுப்படுத்தப் பட்டவையாக இருப்பதும் எமது பிரச்சினையை இன்னும் அதிகரிக்கின்றது. புதிய பயிற்சி முறைகள் எமக்குக் கிட்டாத காரணத்தினால் எங்கள் உழைக்கும் ஆற்றல் மட்டுப்படுத்தப்படுகின்றது. குடும்பங்களுக்குத் தலைமை தாங்கும் பெண்களாக இருந்து, நிரந்தர வருமானமின்றி வறுமையில் வாழும் எங்களுக்கு சாதாரண நிதிநிறுவனங்களில் இருந்து கடன் வசதிகளைப் பெறுவதும் கடினமாக இருக்கின்றது.

வாழ்வாதார முயற்சிகளுக்கான வாய்ப்புக்கள் குறைந்த நிலையில், கசிப்பு வடித்தல் போன்ற சட்டபூர்வமற்ற நடவடிக்கைகளிலும் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிப் பெண்களாகச் செல்வது போன்ற பாதுகாப் பற்ற எமது குடும்பங்களைப் பாதிக்கின்ற தொழில்களிலும் நாம் ஈடுபட நிர்ப்பந்திக்கப் படுகின்றோம். அரச நிறுவனங்களின் மூலமும் அரசு சாராத நிறுவனங்களின் மூலமும் தரப்படுகின்ற உதவித் திட்டங்கள் உள்ளூர் நிலைமைகளையும் பின்னணிகளையும் கருத்திற் கொள்வதாக பெண்களின் திறன்கள் தேவைகள் போன்றவற்றை கவனத்தில் கொள்வதாகவும் இருக்க வேண்டும். எமது சமூகத்தினை வலுப்படுத்துவதாக உள்ளூர் வளங்களையும் வினைத்திறன்களையும் பயன்படுத்தும் வகையில் எமது கிராமங்களில் முதலீடுகள் நடைபெற வேண்டும். சந்தைப்படுத்தக்கூடிய திறன்களை நாம் பெறும் வகையில் பயிற்சிகளும் அவற்றைச் செம்மையாக செயற்படுத்தக் கூடியவளங்கள் ஒதுக்கப்படுத லும் செயற்படுத்தப்பட வேண்டும். பிரதான வழிகளில் மட்டுமல்லாது உள்ளிடங்களிலும் பாதை அபிவிருத்தி, வீதி விளக்குகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அபிவிருத்தி போன்ற உட்கட்டுமான அபிவிருத்தியினை மேற்கொள்ள வேண்டும். நிலவுரிமையானது எமது வாழ்வாதாரத்திற்கும் பொருளாதாரப் பாதுகாப்பிற்கும் வருமானம் ஈட்டுதலுக்கும் அடிப்படையானது. காணி உறுதிகள் தொலைந்த காரணத்தினால் வீட்டுத்திட்டங் களைப் பெற்றுக்கொள்ளவோ, மலசலகூடங் கள், நீர் வசதிகளைப் பெற்றுக் கொள்ளவோ இயலாதவர்களாக இருக்கின்றோம்.

வீடு போன்ற உதவித் திட்டங்கள் பெரிய குடும்பங்களை முன்னுரிமைப்படுத்தி வழங்கப் படுவதால் தனித்து வாழும் பெண்களும் தங்கி வாழும் ஓரிரண்டு குடும்ப உறுப்பினருடன் வாழும் பெண்களும் இங்கு ஒதுக்கப்படுகின்றனர். வீட்டுத் திட்டங்கள் போன்ற சமூக உட்கட்டுமானத் திட்டங்கள் பயனாளிகளின் உழைப்பு ரீதியான பங்களிப்பினை வேண்டுவதனால் பெண் களாகிய நாங்கள் கூலிவைத்தே அவற்றைச் செய்து முடிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். இது எங்களது கடன் சுமையை அதிகரிக்கின்றது. மின்சார இணைப்பு போன்ற வசதிகள் அரசினால் செய்து கொடுக்கப்பட வேண்டியதாகும். அதற்கு தூண் போடவும் வயர் இழுக்கவும் பயனாளிகளை செய்வதற்கு நிர்ப்பந்திப்பதனால் அவற்றைச்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்


## LAW OFFICE
### STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4

Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

BrokerTeam INSURANCE SOLUTIONS INC.
DENNIE CHAN MBA
Associate Broker
On your side
•We represent over 10 insurance companies and offer the best premium
•House & Auto, Business, Condo
•Get a free quote today and see how you can save
Bus: 905.415.1188 Ext.120
Fax: 905.475.6448
Markham Branch
8787 Woodbine Ave, #218
Markham, ON L3R 9S2
dennie313@gmail.com
www.BrokerTeam.ca
Cell: 647.293.6980

# பொதுநலவாய...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

கமரூனின் யாழ்ப்பாண விஜயம் மற்றும் அவரது கருத்துக்களை வரவேற்பதாக பெரும்பாலான பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர்.



இந்நிலையில் அடுத்த மார்ச் மாதம் இலங்கை அரசாங்கம் மேலும் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. உண்மையில், இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாடு, இலங்கையின் கீர்த்தியையும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் புகழையும் சர்வதேச அளவில் உயர்த்திப் பிடிப்பதற்கான நிகழ்ச்சி நிரலாகவே அமைக்கப்பட்டிருந்தது. போர்க் குற்றங்கள் உள்ளிட்ட மனிதஉரிமை மீறல்கள் குறித்து நான்கு மாதங்களுக்குள் - அதாவது வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர், விசாரணை நடத்தத் தவறினால், சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்ற டேவிட் கமரூனின் எச்சரிக்கை, மாநாட்டின் குறித்த நிகழ்ச்சிநிரலையே தலைகீழாக மாற்றிவிட்டது என்பது தான் உண்மை.

# கணவனை...

செய்ய இயலாத தன்மையினால் நாம் தொடர்ந்தும் பாதுகாப்பற்ற சூழலில் வாழ வேண்டியதாக இருக்கின்றது. உதவித் திட்டங்கள் யாருக்கு வழங்கப்பட வேண்டும் என அரச நிறுவனங்களினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் வெளிப்படைத் தன்மையற்றவையாக இருப்பதால் எம்மைப் போல சமூகத்தின் பலவீனமான குழுக்கள் மேலும் ஒதுக்கப்படுகின்றன. அரசினால் வழங்கப்படும் மாதாந்த உதவித் திட்டங்கள் தற்போதைய விலைவாசி உயர்வுக்கு கொஞ்சம் கூட ஏற்றதாக இல்லை. நாம் காணி உறுதிகள் போன்ற தொலைந்து போன ஆவணங்களைப் பெறுவதற்குரிய குறித்த அரச உதவிகள் வழங்கப்பட வேண்டும். குடும்பங்களுக்குத் தலைமை தாங்கும் பெண்கள் தமது வாழ்வை மீண்டும் கட்டியெழுப்பவும் வாழ்க்கைக்குத் தேவையான வருமானம் பெறவுமான உதவித் திட்டங்கள் வழங்கப்பட வேண்டும்.

சமுர்த்தி, வறுமை முத்திரை போன்ற திட்டங்கள் வழங்கப்படும் போது அத் தீர்மானங்கள் வெளிப்படைத் தன்மையுடனும் பயனாளிகளுக்கு அதனை எப்படிப் பெற்றுக்கொள்வது என்பது பற்றிய முழு விபரமும் தெரியப்படுத்தும் விதத்திலும் செயற்படுத்தப்பட வேண்டும். தனித்து வாழும் பெண்களுக்கு வாழ்க்கைக்கான செலவுகளை ஈடு செய்யும் வகையிலான ஓய்வூதியத் திட்டம் வழங்கப்பட வேண்டும். மேலதிகமான உதவிகள் வழங்குவதற்கு இயலாமையாலும், யுத்தத்தினால் கல்வி பாதிக்கப்பட்டமையாலும் எமது பிள்ளைகள் பாடசாலை விட்டு இடை விலகுகின்றமை அதிகரித்துள்ளது. பாடசாலைக்குச் சென்றாலும் அவர்கள் அடைவுகள் குறைவாகக் காணப்படுகின்றன. எமது வறுமையும் பிள்ளைகள் பாடசாலை இடைவிலகுவதற்கான காரணமாகின்றது. பாடசாலைகள் கிரமமாக கட்டிட நிதிக்காகவும் வேறு பல தேவைகளுக்காகவும் பிள்ளைகளிடமிருந்து நிதி அறவிடுகின்றன. இந்த அறவீடு பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களிலிருந்தும் அறவிடப்படுகின்றன. இவற்றைக் கட்ட முடியாதவிடத்தில் எமது பிள்ளைகள் சோர்வுற்று பாடசாலை செல்வதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். பெண் தலைமைக் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்விக்கான உதவித் தொகை வழங்கப்பட வேண்டும். யுத்தத்தினால் கல்வி இடைநிறுத்தப்பட்ட பிள்ளைகளுக்கான விசேட வகுப்புக்கள் நடத்தப்பட வேண்டும். எமது பிள்ளைகளுக்கான உளவியல் தேவைகள் குறித்து ஆற்றுப்படுத்தல் திட்டங்கள் நடக்க வேண்டும்.

யுத்தத்தினால் ஏற்பட்ட உளப்பாதிப்பும் வறுமையினால் பொருத்தமான சுகாதார சேவைகளை அணுக முடியாத தன்மையினாலும், யுத்தகாலத்தில் தோன்றிய பல நோய்கள் இன்றும் தொடரும் தன்மையினாலும் எங்களது முழு ஆற்றலையும் உபயோகித்து உழைக்க முடியாமல் இருக்கின்றோம்.

எங்கள் பிள்ளைகள் குறைவளர்ச்சியுடன் இருப்பதாக பாடசாலையில் அறிவிக்கின்றார்கள். எங்களுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டாலும் நாம் வைத்திய வசதிகளை நாடுவதில்லை. ஏனெனில், வைத்தியசாலைக்குச் செல்வதாலும் அங்கு பல மணிநேரம் செலவிடுவதாலும் எங்களது ஒருநாள் கூலியினை இழக்கின்றோம். எமக்கு வறுமை முத்திரை மாதமொன்றுக்கு ரூ.250 தரப்படுகின்றது. இதை வைத்துக்கொண்டு மூன்று வேளை சாப்பிட முடியாமல் இருக்கின்றோம். சுகாதார சேவைகள் எங்களை வந்தடைய வேண்டும். குறிப்பாக, மீளுற்பத்திக்கான சுகாதார சேவைகள் நாம் பொருத்தமான தெரிவுகள் மேற்கொள்ளும் வகையில் தகுந்த தகவல்களுடன் வெளிப்படையான முறையில் வழங்கப்பட வேண்டும். தமது கணவரை இழந்த பெண்களும் கணவரிடமிருந்த பிரிந்து வாழும் பெண்களும் சமூகத்தினால் ஒதுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படு கின்றன. சில சமயங்களில் எமது ஆடைகளும் நடத்தைகளும் கூட விமர்சிக்கப்படுகின்றன. மீண்டும் குடும்ப பந்தத்தில் இணைய விரும்பும் பெண்கள் சமூகத்தின் அவச்சொல் குறித்துப் பயப்படும் நிலை இருக்கின்றது. மீண்டும் திருமணம் முடிக்கும் பெண்களும் தமது பிள்ளைகளைத் தமது வயோதிப பெற்றோர்களின் கவனிப்பில் விட்டுச் செல்ல நேருவதால் அப்பிள்ளைகளுக்கான கவனிப்பும் குறைகின்றது.



சமூகத்தில் தனியாக வாழும் பெண்களின் உரிமைகள் தொடர்பாகவும் அவர்களின் சமத்துவம் சுய கௌரவம் தொடர்பாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக ஆண்கள் மத்தியில் பால்நிலை உறவுகளைப் பற்றிய மனப்பாங்கு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். காணாமற் போனோர் பற்றியும் கடத்தப்பட்டவர் பற்றியும் நீண்ட காலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளோர் பற்றியும் கவலைகொள்கின்றோம். காணாமற்போன எமது மகன்மார், சகோதரர்கள், கணவன்மார்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் ஆற்றல் எமக்கு இல்லை. தடுப்பில் இருப்பவர்களுக்குத் தேவையான சட்ட ஆலோசனை பெறுவதற்கோ அவர்களின் வழக்கைத் தொடரவோ எமக்கு வசதிகள் இல்லை. கணவரின் இறப்புக்கு வழங்கப்படும் நட்டஈடு ஒழுங்காக வழங்கப்படுதல் இல்லை என்பதுடன் அது போதுமானதாக இல்லை. எமது குடும்பத்தைச் சேர்ந்த காணாமற்போனோரைப் பற்றிய தகவல்களை அரசு எமக்குத் தர வேண்டும். தடுப்புக் காவலில் இருப்போர் விடுதலையாக வேண்டும். அதற்கான சட்ட உதவியை வழங்குவதோடு வழக்குகளின் முன்னேற்ற விபரங்கள் குடும்பங்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். காணாமற் போனோர் தொடர்பாக புலன் விசாரணை செய்வதற்கு ஆண் அலுவலர்கள் எமது வீடு தேடி வருவது பாலியல் தொந்தரவுகளுக்கு இட்டுச்செல்லுகின்றது. இது சமூகத்தின் பழிச்சொல்லுக்கும் எம்மை ஆளாக்குகின்றது. தனியே வாழும் பெண்களுடன் தொடர்புகளைப் பேணுவதற்கு பெண் காவல் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். எமக்கு வழங்கப்பட வேண்டிய நட்ட ஈடுகளின் தன்மையும் அவற்றைப் பெற்றக்கொள்ளும் முறையும் எமக்குத் தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும். இழந்த உயிரை ஈடு செய்யமுடியாவிடினும், வழங்கப்படும் நட்டஈடு ஓரளவாவது உயிரிழப்பினால் குடும்பம் இழந்தவற்றின் பெறுமதியாக இருக்க வேண்டும். காணாமற்போனோரின் குடும்பத்தவர்களுக்கும் அவர்களுக்கு மரணச் சான்றிதழ் பத்திரம் இல்லாதபோதும் நட்டஈடு வழங்கப்பட வேண்டும்’

# மின்ஒளி பிரகாசித்தபடி நிற்கும் அவசர பிரிவு வாகனங்களை அணுகும் போது என்ன செய்யவேண்டும்?

## Move - over law for emergency vehicle

### Slow down or move over

அப்பாவித்தனமாக வீதியில் வாகனம் ஓட்டி சென்ற அந்த மனிதனுக்கு இப்படியொரு அதிர்ச்சியான தண்டனை தமக்கு நிகழும் என்பது அவர் நினைத்து பார்க்கவேயில்லை.

பொலீஸ் வாகனம் ஒன்று துரத்தி வந்து சைகை ஒளி எச்சரிக்கையினை காட்டி இவரது வாகனத்தினை நிறுத்தியது. மிகப்பெரிய தொகையில் தண்டனை ரிக்கற்! 'வாகனத்தினை மெதுவாக செலுத்தி ஜாக்கிரதையாக கடந்து செல்லத் தவறியது' (Fails to slow & carefully pass a stopped emergency vehicle)

அதேவீதியில் இன்னொருவரை நிறுத்தி வேறு ஒரு குற்றசாட்டில் பாரிய தொகை தண்டனை ரிக்கற்! 'இடதுபக்க ஒழுங்கைக்கு மாறி பாதுகாப்பாக வாகனம் செலுத்த தவறியது' (Fails to move left lane when passing a stopped emergency vehicle)

இப்படித்தான் குற்றச்சாட்டு சட்டபிரிவினை குறிப்பிட்டு தண்டனை ரிக்கற்றில் எழுதப் பட்டிருந்தது. தண்டனை ரிக்கற் வாங்கிய இருவருக்கும் எதுவுமே நம்ப முடியவில்லை. இதேமாதிரி அதே வீதியில் ஏராளமான வாகனங்கள் அந்தக்கண நேரத்தில் சென்று கொண்டிருக்கும் போது தங்களின் வாகனம் மட்டும் பொலிசாரால் நிறுத்தப்பட்டது ஏன்? என்பதே அவர்களின் கேள்வி?

## கனடிய தகவல் தொடர் 208




(கும்பலில் பலர் ஒரே மாதிரியான தப்பினை செய்யும்போது எழுந்தமாதிரியாக ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் ஒவ்வொருவராக நிறுத்தி தண்டனை ரிக்கற் கொடுக்க முடியுமா?)

ஏனெனில் இதே மாதிரியான தப்பில் நம்மவர்கள் பலரும் தண்டனை ரிக்கற் வாங்கியிருப்பார்கள்.

சில விடுமுறை தினங்களில் குறிப்பிடப்பட்ட இந்த தப்புகுரியவர்களை பிடிப்பதற்காக பொலிஸ் பிரிவினர் களத்தில் நின்றதாகவும், அதேதினம் இத்தனை பேர் பிடிபட்டு தண்டிக்கப்பட்டார்கள் என்ற செய்தியும் கனடிய தொலைக்காட்சிகள், ஊடகங்களில் நாம் பல தடவைகளில் அவதானித்திருப்போம்.

### இங்கு என்ன தப்பு நடந்துள்ளது?

ஒன்ராரியோ மாகாண வீதி ஒழுங்கு சட்டத்தினை 159 ஆம் பிரிவு (Ontario Traffic law sec. 159) இங்கு குற்றச்சாட்டு தொடர்பாக பின்வருமாறு வரையறை செய்கின்றது.

உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பலர் தங்களின் அவசர பிரிவு உத்தியோக பூர்வமான வாகனத்துடன் வாகனத்தின் மின் சைகை ஒளிகள் யாவும் பிரகாசித்தபடி வீதியோரமாக கடமையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது அப்பாதையால் செல்பவர்கள் மெதுவாக, கவனமாக அவர்களை கடந்து செல்ல வேண்டும். (Slow down & proceed with caution when passing an emergency vehicle parked on the shoulder with its lights flashing)
அல்லது

பல ஒழுங்கைகள் இருந்தால் இடது பக்கத்திலிருக்கும் அடுத்த ஒழுங்கைக்கு மாறி செல்ல வேண்டும். (On multilane highways, motorists are also requires to move over and leave a lane between their vehicles & the emergency vehicles, If it can be done safety) இங்கு குற்றம் சாட்டப்பட்ட இருவரும் இவ்விரு தவறுகளையும் செய்துள்ளனர்.


### இப்படியான குற்றங்களில் தண்டனை என்பது எப்படியிருக்கும்?

- தண்டனை ரிக்கற் $400 டொலரிருந்து $2,000 வரை விதிக்கப்படலாம்.
- மூன்று புள்ளி மதிப்பீட்டு இழப்புகளை எதிர் கொள்ள வேண்டும். (Three demerit points)
- இதே மாதிரியான தவறில் அடுத்த ஐந்து வருடத்தினுள் மீண்டும் அகப்பட்டால் தண்டனைப் பணம் $1,000-$4,000 டொலர் வரை விதிக்கப்படும். மீண்டும் மூன்று புள்ளி மதிப்பீட்டு இழப்புகள். இருவருடங்கள் சாரதி அனுமதி பத்திரம் ரத்து செய்யப்படும். ஆறு மாதங்கள் சிறை தண்டனையும் வழங்கப்படலாம். (சிறை தண்டனை வழங்கும் அளவுக்கு இதனை ஒரு கிரிமினல் குற்றமாக கனடிய சட்டமியற்றும் துறைகள், நீதித்துறைகள் உருவாக்கியுள்ளது)
- குற்றங்கள் பதிவில் இருக்கும் போது வாகன காப்புறுதி விலைகளை கடுமையாக பாதிக்கும்.

வாகனங்களை வீதி ஓரமாக நிறுத்தி புலன் விசாரணைகளை பொலிஸ் உத்தியோகத்தர் மேற்கொள்ளும் போது, ஆசன பட்டிகள் எதுவும் அகற்றப்படாத நிலையில் சாரதி தமது ஆசனத்தினை விட்டு இறங்காது உட்கார்ந்து இருத்தல் வேண்டும் என்பதும், பொலிஸ் உத்தியோகத்தர் தமது வாகனத் தினை விட்டு இறங்கி வந்து கார் கண்ணாடி கதவினூடாக வீதியோரமாக வெளியே நின்றபடி புலன் விசாரணைகளை தொடர்வ தும் கனடாவின் மரபு ரீதியான முறை.

வீதியோரத்தில் வெளியே நின்று புலன் விசாரணைகளை தொடரும் பொலிஸ் உத்தியோகத்தர் பலர் அந்த இடத்தில் கடந்து செல்லும் வாகனங்களினால் விபத்துகள், உயிர் இழப்புகளை கனடாவில் பல இடங்களிலும் எதிர் கொண்டமை காரணமாகவே இப்புதிய சட்டத்தினை உருவாக்கி அதனை மீறுபவர்களை துரத்தி பிடித்து தண்டிக்கின்றனர்.

உதாரணத்திற்கு கடந்த வருடங்களில் நடந்த சில விபத்துகள் சம்பவங்கள் பின்வருமாறு!



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# MATH WORLD

## Final Exam Review

**Starts**
**Dec - 2013**

**infor: 416.666.5515**

## "G12" Advanced Function & Calculus and Vector

Bonus preparation for upcoming math tests to score averages of 90%.
**Work with us and see your improvements in one week**
We are proud of preparing G11 and G12 students at the high level of mathematic.
**Advance Functions is the most wanted subject for the best programs for the best universities**
We are in this field for more than 23 years
See you at the top level

NEGI SAMSON LLP
15 Wertheim Court, Suite 206,
Park Place Corporate Centre,
Richmond Hill, ON L4B 3R7
Phone: 289-597-0606

I would like to introduce myself as Raphael Samson; I am a practicing lawyer and partner of Negi Samson LLP.
Sharma has a wonderful rapport with people of all ages especially students, and the art of teaching and simplifying the Ontario Math Curriculum and making it easy and interesting at the same time.
He understands each student's level and works to improve them equally. I have enrolled my children in the 4term in advance" and recommend this brilliant program of math studies to everyone!
I recommend MrSharma to all without reservation.

Yours Truly,
Negi Samson LLP

Binaya Nepal
Mississauga,
905 766 4840
My Daughter was enrolled to Sharma's math class this year when she was notified by her grade11 math teacher that math was just net the subject for her.
I was rather appalled and took her to Sharma and result were phenomenal.
She finished Calculus and Vecter with a high score and ranked in the top 3 in her class and accepted to all her university programs.
Thank You Sharma.
Yours truly,
B Nepal
Licensing Process Lawyer Candidate.

# TBC Toronto Business College



DECEMBER 9th

**Personal Support Worker(PSW)**

26 Weeks (NACC Diploma)

**FREE TRAINING**

யார் தகுதி உடையவர்கள் ?

- ★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- ★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
- ★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள்.

Tuition Fees,Books,Living Expenses
Day care & Transportation up to $28000

**OTHER DIPLOMA PROGRAMS**

- ACCOUNTING & PAYROLL ADMINISTRATOR
- BUSINESS ADMINIISTRATION
- COMPUTERIZED ACCOUNTING
- MEDICAL OFFICE ADMINISTRATOR

வீட்டில் வீணாக்கும் நேரத்தை பணமாக்க அரிய சந்தர்ப்பம்
Daytrading of Stocks & Derivatives (Options, Futures etc.)
November 13,2013, 7:00 PM

Career Colleges Ontario

**416-291-5155**

4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# மின்ஒளி...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

• துப்பாக்கி முனையில் கொள்ளை அடித்தவர்கள் என்ற சந்தேகத்தில் யூன் 07, 2000 ஆம் ஆண்டு, வின்ஸர் நகரில் 401 நெடுஞ்சாலை ஓரமாக வாகனம் ஒன்றினை நிறுத்தி மூன்று பொலிசார் புலனாய்வு செய்து கொண்டிருந்த நேரம் வேகமாக வந்த ரக் வண்டி ஒன்று மோதியதில் நின்ற பொலிஸ் காயமுற்றதுடன் சார்ஜண்ட் மார்க் ஈவ் (Sergeant marg eve) என்பவர் பலியானார்.

• வேகமாக வந்த வாகனம் ஒன்றினை நிறுத்தி தண்டனை ரிக்கற் வழங்கி கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரை யும் அவரது வாகனத்தையும் வேகமாக வந்த வாகனம் ஒன்று மோதியதில் சீனியர் கான்ஸ்டபிள் திரு. ஜேம்ஸ் மக்வேடன் (Senior Constable James Mcfaiden) என்ற பொலிஸ் உத்தியோகத்தர் பலியானார். இந்த விபத்து டிசம்பர் 31, 1999 இல் தென்மேற்கு ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள 'ஹாதம் - ஹென்ர்' (Chatham Kent) என்னும் சிறு நகரத்தில் நடந்தது.

• வீதியோரமாக ஒரு வாகனத்தினை நிறுத்தி புலன் விசாரணை செய்து கொண்டிருந்த நேரம் றக் ஒன்று மோதியதில் சீனியர் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. மைக்கல் குலா (Senior constable Michael Gula) தூக்கி எறியப்பட்டு பலியானார். இந்த விபத்து நயகாரா வீழ்ச்சியின் வடபகுதியில் குயின் எலிசபெத் நெடுஞ்சாலையில் ஏப்ரல் 02, 1996 ஆம் ஆண்டு நடந்தது.

• சென். ஹதரின் (St. Catharines) நகரில் குயின் எலிஸ்பெத் நெடுஞ்சாலையில் உள்ள 'ஹார்டன் சிற்றி ஸ்கைவே' (The Garden City Skyway) என்னும் மிகப் பெரும் பாலத்தில் கடந்த ஜனவரி 04, 1989 இல் இயங்க முடியாது நின்று வான் ஒன்றுக்கு அருகில் பொலிஸ் வாகனத்தினை நிறுத்தி விட்டு உதவி செய்யும் நிலையில் நின்ற பொலிஸ் உத்தியோகத்தகர்களின் வாகனத்துடன் மோதியதில் இரு பொலிஸ் மற்றும் 36 வயது நிரம்பிய இன்னொரு நபர் பலியானார்.




மேற்குறிப்பிட்டவை உதாரணத்திற்கு சில சம்பவங்கள் மட்டுமே! இப்படி ஏராளமான விபத்து சம்பவங்கள் கனடாவில் தொடர்ந்தன. இதனால் 2003 ஆம் ஆண்டிலிருந்து ஒன்ராரியோ மற்றும் சாஸ்காச்சுவான் மாகாணத்தில் இச்சட்டம் நடைமுறைக்கு வந்தது. தொடர்ந்து 2005 இல் அல்போட்டா மாகாணத்திலும் 2012 இல் இருந்து கியூபெக் மாகாணத்திலும் இந்த சட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒன்ராரியோ மாகாணத்தில் இந்தச் சட்டம் பற்றித்தெரியாமல் எம்மவர்கள் பலரும் இத்தண்டனைக்குள்ளாகிறார்கள்.
அவசர பிரிவு வாகனங்கள் என்பது எவை என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?

1. பொலீஸ் வாகனம் (Police)
2. அம்புலன்ஸ் வாகனம் (Ambulance)
3. தீயணைப்பு படை வாகனம் (Fire)
4. போக்குவரத்து அமைச்சின் வாகனம் (Ministry of Transportation vehicle)
5. சூழல், சுற்றாடல் அமைச்சின் வாகனம் (Ministry of te environment vehicle)
6. இயற்கை வள அமைச்சக வாகனம் (Ministry of natural resources vehicle)
7. அவசர மின்சக்தி திணைக்கள வாகனங் கள் (Public utility emergency vehicle)


# COMMERCIAL UNIT FOR Lease /SALE

Main floor / Second floor commercial space for Lease / sale. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough.

**Pl. Call: 416.315.9397**


# சார்பியல் - 35

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

அயன்ஸ்ரைனுக்கு முன்னராகவும் ஒருவர் ஒளியின் பாதை வளைவு பற்றிக் கூறியிருந்தார். ஜெர்மனியின் வானவியலாள ரான யோகான் ஜோர்ஜ் வொன் சொல்டினர் (Johann Georg Von Soldner) என்பவர் 1801ம் ஆண்டில் இதனைக் கூறியிருந்தார். நியூட்டன் ஒளியைத் துகள்களாகச் செல்கின்றது எனக்குறிப்பிட்டு இருந்தா ரல்லவா. அதன் அடிப்படையில், ஒளியை சடமாகக் கருதி, கதிரவனின் மிகப் பெரிய திணிவின் காரணமாக, ஏற்படுத்தப்படும் ஈர்ப்பு விசையினால் ஒளி இழுக்கப்பட்டுத்தான் பாதையில் நின்றும் விலகும் எனக் கூறியிருந்தார். அத்துடன் அந்த விலகற் கோணத்தினையும் 0.84 ஆக்செக்கன் (Arcsecond) கணித்துக் கூறினார். ஆச்சரியப்படக் கூடிய விடயம் என்ன வெனில், அவர் கணித்த விலகலும் கிட்டத்தட்ட அயன்ஸ்ரைன் முதன் முதலில் கணித்த ஒளியின் விலகற் கோணமான 0.875 ஆக்செக்கனுக்குச் கிட்டத்தட்டச் சமனாக இருந்தது. ஒளியின் உண்மையான விலகற் கோணம் 1.75 ஆக்செக்கன் என்பது பின்னர் அயன்ஸ்ரைனால் திருத்தமாகக் கணித்துக் கொடுக்கப்பட்டது.

நியூட்டனின் ஒளியின் துகள் கொள்கையை கருதியே தனது முடிவினைப் சொல்டினர் பெற்றிருந்தார். அயன்ஸ்ரைன் வித்தியாசமான கோணத்தில் அதனைப் பார்த்தார். ஒளியானது சக்தி என்பதால், கதிரவனுக்கு (பாரமான பொருட்களுக்கு) கிட்டவான பாதை யில் வருகையில் தனது சக்தியில் ஒரு பகுதியை இழக்கிறது. சக்தியில் ஒரு பகுதியை இழக்க, ஒளியானது செந்நகரல் (Red shift) விளைவுக்கு உட்படுகிறது. அதனால் ஒளி யின் அதிர்வெண்ணின் பெறுமானம், இழந்த சக்தியின் அளவிற்கு ஒப்பக் குறைவடையும். அதன் காரணமாக ஒளியானது தனது பாதை யில் நின்றும் விலகல் அடையும். அதாவது வெளிநேரப் பரிமாணத்தின் வளைவில் இயல்பாகப் பயணப்படும்.

அயன்ஸ்ரைன், ஒளியை இருமை இயல்பு காட்டும் ஒன்றாக பிளாங்கின் குவாண்ரம் கொள்கையிற் காட்டியிருந்தார். அதன்படி, ஒளியானது துணிக்கைகளாகவும் அலை யாகவும் தன்னிலைக்கு ஒப்ப தன்னைக் காட்டிக் கொள்ளும் எனக் கூறியிருந்தார். ஒளியின் துணிக்கையை (துகள் எனவும் கூறலாம்) போட்டோன் (photon) என்பார்கள். போட்டோன் திணிவில்லாத சக்தியைக் காவும் துணிக்கை. அது சடங்கள் கொண்டுள்ள 'உந்தம்' என்கிற இயல்பினைக் கொண்டிருப்பதால், அது துணிக்கையாகவும் தன்னை இனம் காட்டிக் கொள்ளுகிறது. இந்த 'சக்தி-உந்த' இயல்பினை மையப்படுத்தியே அயன்ஸ்ரைன் ஒளியின் பாதை விலகலைக் குறிப்பிட்டு, கதிரவனுக்கு அருகிலான விலகற் கோணத்தையும் கணித்திருந்தார்.




இங்கு நான் குறிப்பிட்டுள்ள இன்னொரு சங்கதி, செந்நகரல். ஒலியின் இயல்பினைக் கொண்டு தொப்பிளர் என்பவர் தொப்பிளர் விளைவு என்கிற அருமையான தோற்றப்பாடு ஒன்றினை ஒலியில் காட்டியிருந்தார். தொப்பிளர் விளைவானது அதிர்வெண்ணின் அடிப்படையில் ஏற்படுகின்ற தோற்றப்பாடு என்பதால், ஒளியும் அதிர்வெண்களைக் கொண்ட ஒன்று என்பதால், அதனிலும் இந்த தொப்பிளர் விளைவினை இயற்பியல் வாதிகள் கண்டார்கள். அதன்படி, செந்நகரல், நீலநகரல் என்கிற இரண்டு உபயோகமான விடயங்களைக் கண்டறிந்து அவற்றினை தமது ஆய்வுகளுக்குப் பாவிக்கத் தொடங்கினார்கள். பேரண்டத்தின் பல புதிர்களை அவிழ்க்கிற தோற்றப்பாடாக இந்த தொப்பிளர் விளைவு இன்று காணப்படுகிறது. அதனை இங்கு முழுமையாகக் தெளிவுபடுத்த முடியாது விடினும் ஒரு விளக்கத்தினை தருகிறேன். புகையிரத நிலையத்தில் நீங்கள் நிற்கின்றீர்கள் எனக் கொள்ளுங்கள். புகைவண்டி வருகிறது. அப்பொழுது அதன் விசில் சத்தம் தொடர்ந்து ஒலிக்கிறது. அந்த விசிற் சத்தத்தினை உண்டாக்கிய எஞ்சின், உங்களையும் கடந்து செல்கின்றது. அந்த நேரத்தில், புகைவண்டி ஏற்படுத்திக் கொண்டிருந்த விசிற் சத்தத்தில் மாற்றங்களை உணருவீர்கள் அல்லவா. உங்களை அண்மிக்கும் போது சுருதி கூடிக் கொண்டு வரும். உங்களைக் கடந்து செல்லும் போது சுருதி குறைந்து கொண்டே செல்லும். அதுதான் தொப்பிளர் விளைவாகும். அதற்கான காரணத்தினை இங்கு தெளிவுபுடுத்தவில்லை. ஒலியியல் படித்தவர்களுக்கு முழுமையான காரணம் தெரியும். எங்களைப் பொறுத்த வரையில் இம்மட்டும் போதுமென நினைக்கின்றேன். இல்லை தேவையெனக் ஆர்வப்பட்டீர் களாயின், வாழ்த்துக்கள், ஒலியியல்

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 18ஆம் பக்கம்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

Seeking freedom from DEBT?
We offer Total Debt Free Solutions
Instant relief with one easy monthly payment. SAVE thousands of dollars.

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
- We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
- We shield you from your creditors and offer you a guaranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
- We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பதிற்கு உரிய வழிமுறை செய்தல்
- We arrange a sensible Repayment Plan minimizing potential losses and avoiding bankruptcy

K.T. Keeran
Credit consultant
Debt Free Credit Solution Inc.
PHONE: 416.434.1522
MOBILE: 416.834.7227
FAX: 1.877.800.7899



Web: http://www.paycontrolled.ca
Email: keeran@paycontrolled.ca
ADDRESS:
SUITE #303, MILNER BUSINESS COURT,
TORONTO ONTARIO M1B 3C6




SOLVE YOUR DEBT WORRIES WITH DIGNITY.
CONTACT DEBT FREE CREDIT SOLUTION FOR A FREE INITIAL CONSULTATION



A-Career for Success

**Automation Technology**
- Emerson (Control techniques) ladder logic, with CTnet communication and Modbus TCP/IP
- Allen Bradley RSLogix 5000 Ladder logic, With Ethernet IP communication
- HMI development, utilizing Modbus TCP/IP and Ethernet IP communication

Training with Real World Componant (Motors, Sensors, VFT, Encoder, PLC, Beckhoff, Conveyor, Analog I/O, Safety Switch)

**Diploma Courses**
- Office Administration - 24 weeks
- Accounting and payroll - 24 weeks
- Computerized Accounting - 42 weeks

**Special Certificate Programs CAD/CAM Technology with CNC SETUP**
- Auto CAD
- SolidWorks
- MasterCAM X6
- MicroStation
- Blue Print Reading

**Multimedia & Graphic Design**
- Basic Film Making & Camera
- Web Design
- Video Editing
- PhotoShop
- Illustrator
- QuarkXpress

**Steel Detailing using TEKLA**

**Bank Teller Course**
**Cashier Course**

**Computer Technology**
- PC technician (A+)
- Programs - C++, Visual Basic, Java
- SQL Database
- Web Development - HTML, CSS, JAVASCRIPT
- LINUX systems

**Accounting Softwares**
- Quick Books
- Simply Accounting
- Accpac
- MS Office

2006க்குப்பின் EI அல்லது Maternity எடுத்தவர்கள் இதை இலவசமாகக் கற்பதற்கு தகுதி உடையவராகலாம்
நீங்கள் 42 வாரத்துக்கு 1. Living expenses, 2. Daycare fees 3. Transport expenses பெறுவதற்கு தகுதியுடையவராகலாம்

**COVERS TUITION AND LIVING EXPENSES UP TO $28,000**

beta College
of Business & Technology

Tel: 416.449-BETA(2382)
www.betacollege.ca
info@betacollege.ca
1085 Bellamy Road, Unit 208, (Bellamy & Ellesmere), Scarborough, ON, M1H 3C7

# சார்பியல்

17ஆம் பக்கத்தொடர்ச்சி

தெளிவுறலாம் என வழிகாட்டுகிறேன்.

மார்கழியின் சாயல்கள் இப்போதே தென்படத் தொடங்கியிருக்கும். நத்தாரும் தொடர்ந்து ஆங்கில வருடப்பிறப்பும், அதன் பின்னராக தைப்பொங்கலும் வருவது கண்களில் தெரிகின்றன. சார்புக் கொள்கையுடன் அவற்றிக்கும் தயாராகுவோம்.

# விடுதலைக்காக...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆனந்தமாய் வாழ வேண்டும் என்ற கனவுடன் நம் மண்ணில் விதையாய் வீழ்ந்த நம் வீரர்களை உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் தம் நெஞ்சில் இருத்தி வணங்கும் புனித நாள். இந்நாளில் நம் மாவீரர்களுக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சிரம் தாழ்த்தி தனது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாவீரர்கள் மகத்தானவர்கள். வீரம் விளைந்தவர்கள். சுயம் களைந்தவர்கள். சுதந்திரவேட்கை மிகுந்தவர்கள். வரலாற்றை முன்னோக்கி நகர்த்தியவர்கள். தாம் கடப்பது நெருப்பாறு என்பதனை நன்கு தெரிந்திருந்தும் நமது மக்களுக்குச் சுதந்திரமான பாதுகாப்பான சுபீட்சமான வாழ்வை ஏந்திவரும் பெருவிருப்புடன் களமாடியவர்கள். மாவீரர்கள் நடத்திய போர் ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட போர் அல்ல. நிலத்தாசை கொண்டோ இராணுவ, பொருளாதார, வர்த்தக நலன்கள் கொண்டோ வழி நடத்தப்பட்ட போரும் அல்ல. ஆயுதம் மீதோ அல்லது வன்முறை மீதோ காதல் கொண்டு எழுந்த போரும் அல்ல. மாவீரர்கள் நடத்திய போர் நமது தேசத்தின் இருப்புக்கான போர். நம் மக்களின் உயிர்ப்புக்கான போர். நம் தேசத்தின்மீது வரலாறு சுமத்திய போர். சிங்கள பேரினவாதப் பூதத்திடம் இருந்து நமது மக்களையும் மண்ணையும் பாதுகாப்பதற்கான போர். நமது தேசத்துக்கு அனைத்துலக சட்டம் வழங்கும் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போர்.



தேசியத் தலைவர் சுட்டிக் காட்டியது போல சிங்கள ஆட்சியாளர்கள் உண்மையான பௌத்தர்களாக இருந்திருந்தால் மாவீரர்கள் ஆயுதம்தாங்கிக் குருதி சிந்திப் போராடும் வரலாற்றுத்தேவை நமது தேசத்துக்கு ஏற்பட்டிருக்காது. அனைத்துலக சட்டம் உறுதி செய்யும் உரிமையை அரசுகளுக்கு மட்டுமல்ல மக்களுக்கும் வழங்கும் உலக ஒழுங்கு ஒன்று இருந்திருக்குமானால் தமது இன்னுயிர்களை ஈந்து மாவீரர்கள் களமாடவேண்டிய அவசியம் இருந்திருக்காது. இலங்கைத்தீவின் மீதும் உலக அரங்கின் மீதும் அதிகாரம் செலுத்தியவர்கள் நீதிக்குத் தலைவணங்குபவர்களாக இருந்திருந்தால் மாவீரர்கள் போர்முரசு கொட்ட வேண்டிய நிலை உருவாகியிருக்க மாட்டாது. உண்மை என்பது அது உண்மை என்ற காரணத்துக்காக மட்டும் வெற்றி பெற்று விடுவதில்லை. நீதி என்பது அது நீதி என்ற காரணத்துக்காக மட்டும் வெற்றி பெற்று விடுவதில்லை. உண்மையையும் நீதியையும் போராடி வெற்றி பெற வைக்க வேண்டும் என்பார்கள்.

நம் மாவீரர்களும் உண்மை வெற்றி பெறவேண்டும் என்பதற்காக நீதி வெற்றி பெற வேண்டும் என்பதற்காகப் போராடினார்கள். ஈகம் என்ற சொல்லுக்கு அகராதியில் புதிய அர்த்தம் கொடுக்கும் வகையில் தம்முயிரைக் கொடுத்துப் போராடினார்கள். மாவீரர்களின் போராட்டம் நம் மண்ணில் நமக்கென ஒரு நிழல் அரசினை உருவாக்கியது. நம் சிறிய தேசம் மீது உலகின் கவனத்தைத் திருப்பியது. ஈழத் தமிழ் தேசத்தின் தேசிய பிரச்சினையை அனைத்துலக பரிமாணம் கொண்டதொன்றாக மாற்றியது. மாவீரர்கள் இன்று நமது தேசத்தின் விடுதலை வேட்கையின் குறியீடாக உள்ளார்கள். நம்மை இலட்சியம் நோக்கி வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நமது இதயக்கோவில் களில் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். நமது தேசத்தின் பெருமைக்குக் காரணமாக அமைந்திருக்கிறார்கள்.

நம் மாவீரர் புகழ் தமிழர் வாழும் தரணி-யெங்கும் என்றும் நிலைத்திருக்கும். அன்பான மக்களே!

நாம் சென்றடைய வேண்டிய இலக்கு எது என்பது நமக்குத் தெளிவாக தெரியும் அதேவேளை அவ் இலக்கு மிகவும் கடின-மானதொன்று என்பதனையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இது கடினமான இலக்காக இருந்தாலும் இதுவே வரலாறு நமக்குத் தந்துள்ள தெரிவாக உள்ளது.
ஈழத் தமிழ் மக்கள் தமக்கென ஓர் அரசை அமைக்கத் தவறுவார்களானால் சிங்களத்தின் இனஅழிப்புக்குள்ளாவதைத் தவிர வேறு வழியேதும் எஞ்சப்போவதில்லை. ஒரு பெரிய மலையுச்சி நோக்கி ஏறும் போது திக்கைச் சரியாகக் கணக்கிட்டு ஒவ்வாரு காலடியாக முன்வைத்துச் செல்வது போல நாமும் எமது பயணத்தில் ஒவ்வொரு காலடியாக முன்னேறுவோம். இதற்குரிய ஆத்மபலத்தை நம் மாவீரர்கள் நம் எல்லோருக்கும் வழங்குவார்கள் என்பது திண்ணம்.

வாழ்க மாவீரர் புகழ்!
மலர்க தமிழீழத் தனியரசு!!
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என
பிரதமர் வி. உருத்திரகுமாரனது மாவீரர் நாள் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காப்புறுதியின் பயனைக் காலம் சொல்லும்

# மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதி!

## (Non Medical Insurance - Up to age 85)



உங்கள் காப்புறுதி நிராகரிக்கப்பட்டு விட்டதா?
கவலையை விடுங்கள்; இன்றே அழையுங்கள்...

printfast.ca



**Chandran Rasalingam** CHS
President / Financial Advisor
Bus: 416 321 6000 Ext. 400
Direct: 416 909 0400

www.inforcelife.com
10 Milner Business Court, Suite 707
Scarborough ON M1B 3C6

Insurance Solutions for
LIFE | HEALTH | GROUP
Investment

INFORCE LIFe
Financial Services Inc.

Desjardins · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · EXCELLENCE LIFE INSURANCE COMPANY · La Capitale · Assumption Life

**சிறந்த ஆலோசனை! தெளிவான விளக்கம்!**

# குணாவின் தாயக சேவை





கிளிநொச்சியை சேர்ந்த 4 மாணவர்களுக்கும் மல்லாவியை சேர்ந்த ஒரு மாணவிக்கும் குணா அவர்களால் துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன.



பல்கலைக்கழக மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக $500ஐ குணா அவர்களிடம் இருந்து திரு. கிருஷ்ணர் யோகலிங்கம் அவர்கள் பெற்றுக்கொண்டார்.



சிறுவர்களின் உணவுக்கான நிதி $1,500ஐ குணா அவர்கள் கொடுத்தபோது



ஒட்டிசுட்டான் முல்லைத்தீவைச் சேர்ந்த முள்ளந்தண்டு பாதிப்படைந்து நடக்க முடியாமல் இருக்கும் இவர்களின் குடும்பங்களுக்கு சினைப்பசுக்கள் குணா அவர்களினால் வழங்கப்பட்டன.



கிளிநொச்சியை சேர்ந்த வசந்தராணி என்பவருக்கு தையல் இயந்திரம் குணா அவர்களால் அன்பளிப்பு செய்யப்பட்டபோது






## “வாழவைப்போம்” அமைப்பிலிருந்து கிருஷ்ணர்



திரு. குணா அவர்களையும் அவரின் தேச மக்களுக்கான பங்களிப்பையும் நான் நீண்ட காலமாக அறிவேன். இருக்க வீடின்றி உண்ண வழியின்றி உள்ள நமது இடம் பெயர்ந்த மக்களுக்கு அவர் தனிப்பட்ட ரீதியில் எப்போதுமே உதவி வருகின்றார். போரினால் பாதிக்கப்பட்டு புலம் பெயர் உறவுகளின் உதவிக்கரங்களுக்கு ஏங்கிக் கொண்டிருக்கும் வழியற்ற மக்களை இனங்கண்டு தேர்ந்தெடுக்க அவர் எமது ‘வாழவைப்போம்’ அமைப்பின் உதவியை நாடி அவர்களுக்கான உதவியை நேரடியாக அனுப்பி வைப்பார்.

சமீபத்தில் கூட போரில் முள்ளந்தண்டில் பாதிக்கப்பட்ட தவச்செல்வன் எனும் வவுனியாவைச் சேர்ந்த ஒரு உறவு தனது மனைவியுடனும் மூன்று பிள்ளைகளுடனும் மழை ஒழுகுகின்ற ஓர் ஓலைக்குடிசையில் துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர். இவர்களின் கதையை “வாழவைப்போம்” அமைப்பிடம் கேட்டுத் தெரிந்துகொண்டதும் குணா அவர்கள் ஓரளவு பாதுகாப்பான வீட்டை ரூபா 75,000 செலவில் கட்டிக் கொடுத்து அந்தக் குடும்பத்தை நிம்மதியாக வாழ வைத்துள்ளார்.

எமது மக்களுக்கு உதவி செய்வதற்காக குணா அவர்கள் யாரிடமும் பணம் பெற்றுக்கொள்வதில்லை. தனது சொந்த வருமானத்திலேயே இவற்றையெல்லாம் செய்கின்றார். அவரது சேவையை அறிந்து பலர் அவரிடம் நிதியுதவியை வழங்க முன்வந்தபோதெல்லாம் அவர்களை “வாழவைப்போம்” அமைப்பிடம் வழிகாட்டி அனுப்பி வைப்பார். திரு. குணா அவர்கள் தற்பொழுது வீடு விற்பனைத் துறையில் கிடைக்கும் தனது வருமானத்தை எமது மக்களுக்கு மேலும் பெரிய அளவில் உதவி செய்ய விரும்புவதை நான் அறிவேன்.

நீங்கள் உங்கள் வீட்டை குணா மூலம் விற்கும் போதோ அல்லது வாங்கும் போதோ எமது தேசத்தில் போரினாலும், வறுமையினாலும், நோயினாலும் வருந்திக் கொண்டிருக்கும் மக்களுக்கு மறைமுகமாக உதவி செய்வீர்கள். அந்தக் குடும்பங்களின் நல்லாசியும், வாழ்த்துக்களும் உங்கள் குடும்பங்களுக்கு கிடைக்கும்.

இந்தக் குருவிக்கு கூடு எவ்வளவு அவசியமோ அதேபோல எமது மக்கள் வாழ ஒரு வீடு அவசியமே.

நீங்கள் பல வீடுகளைப் பார்த்திருக்கலாம். ஆனால் நான் உங்கள் குடும்பத்திற்குப் பொருத்தமான இல்லத்தைக் காண்பிப்பேன்.

நான் கனடாவில் கட்டடக் கலையைக் கற்றதன் மூலம் பெற்ற அறிவினால் வீட்டின் சகல நுட்பங்களையும் ஆராய்ந்து நல்லதொரு வீட்டை உங்களுக்காகத் தெரிந்து எடுக்கவும், உங்கள் வீட்டிலுள்ள சிறப்பு அம்சங்களை வெளிக்கொணர்ந்து நல்ல விலைக்கு விற்றுத் தரவும் என்னால் முடியும் என நம்புகிறேன்.

HomeLife
Galaxy Real Estate Ltd., BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED



# Kuna Kunathasan

Sales Representative

**DIR : 416-994-3953**

BUS: 416-284-5555

FAX: 416-284-5727

**kuna.kunathasan@hotmail.com**

880 Ellesmere Road, Suite 204, Toronto, ON.
M1P 2W6

# NEWTON

newton

A NEW PROJECT BY
Concord Adex
FRONT & BATHURST



SQ

A NEW PROJECT
BY TRIDEL
SPADINA & QUEEN



**Special Price for HomeLife GTA Clients**

HomeLife/GTA Realty Inc. Brokerage*

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969

*Independently Owned & Operated


REAL TEAM
Thinking of selling? Think SOLD
Buy. Sell. Invest
Ravi R Raveendran
Real Estate Broker
416.817.8479
Toronto
$ 349,900
Great location
Golden opportunity
Ideal for retail or office
Lots of parking
Markham
$ 539,000
3 Bedrooms
Finished Basement
Double Door Entrance
Close To Ttc,Yrt, Schools
Toronto
SOLD
$ 499,900
Detached,3 Bedrooms
Well maintained
Finished basement
Close to all amenities
Toronto
$ 299,900
3 Bedroom Condo
Close to town centre
24 hrs security
Close to everything
Markham
$ 829,900
Detached,4 Bedrooms
close to all Amenities
Fully Updated home
Call for more Details
Toronto
$ 236,000
Luxury Condominium
One Bedroom
Kennedy and 401
Call for more Details
Toronto
$ 74,900
Well Established
Convenient/ Grocery
Close to all amenities
Call for more details
Markham
SOLD
$ 759,900
Detached,5 Bedrooms
Close to all amenities
Don't miss this
Great buy
Seelan Siva Aiyadurai
Real Estate Broker
416.451.0271
Sasi Chelvaratnam
Sales Representative
416.725.1125
Markham
$ 649,900
4+2 Bedrooms
Basement Apartment
Renovated house
Great location
Whitby
SOLD
$ 312,000
Detached,3 bedrooms
close to all amenities
Good Starter home
Great neighbourhood
Toronto
$ 154,900
Condominium
2 Bedrooms
Nice and clean
Great building for price
Downtown-Toronto
$ 299,000
Luxury condominium
1plus Den
600 sq ft
Best price for the area
Brantford
$ 2,498,000+stock
Esso On The Run
30 Minutes from GTA
Recently renovated
Excellent cash business
Richmond Hill
$ 749,900
Detached, Side Split
Upper Richmond Hill
Walk to Yonge Street
Premium size lot
Stouffville
$ 429,900
Semi detached house
Approx 3 years old
3 Bedrooms
Lots of upgrades
Ajax
$ 569,000
Detached,4 Bedrooms
Corner House
Quiet neighbourhood
Close to all amenities
Jayanthi Sritharan
Real Estate Broker
416.918.5872
Toronto
$ 629,900
Detached,4 Bedrooms
18 months old
Lots of upgrades
Backing onto woods
Simcoe
$ 1,199,900
Esso Gas station
45 minutes from Gta
Heavy traffic area
Great investment
Toronto
$ 498,000
3+1 Bedrooms
Finished Walk-out Bsmt
McCowan & Finch
Close To Amenities
Toronto
SOLD
$ 417,900
Detached,3+1 bedrooms
Finished basement
Bright and sunny
Beautiful landscaping
Justin William
Real Estate Broker
416.803.7344
HOMELIFE
HOMELIFE/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave East, suite 203, Toronto, ON. Tel: 416-321-6969
This is not intended to solicit the buyers or sellers under contract
Each office independently owned and operated

# இதயப் பிரச்சினைகளுக்கு யோகாவில் தீர்வு

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

உலகில் தோன்றிய உயிரினங்களிலேயே மிகவும் சிறப்பானதாக பலராலும் கருதப் பட்டு, போற்றப்பட்டு வரும் ஓர் உன்னதமான உயிரினம் மனித இனமே. இந்த மனித இனத்தின் உடலையும், உயிரையும் பாதுகாத்து அவற்றைச் செம்மைப்படுத்தி வைத்திருக்கும் உறுப்புகளில் குறிப்பிடத்தக்க 5 இராஜ உறுப்புக்களான மூளை, இருதயம், நுரையீரல், சிறுநீரகம், கல்லீரல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள் முதன்மையானது இருதயமே.

மனித உடலில் இதயமானது ஒரு இயந்திரமாக செயல்படுகிறது. இந்த இயந்திரம் செயல்பாட்டில் இருந்தால் தான் மனிதன் செயல்படாமல் இருந்துவிட்டால் பிணம் என்பார்கள். இதயம் மனிதரின் பிறப்பிலிருந்து இறப்பு வரை தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது. இரத்தத்தை உடல் முழுவதற்கும் அழுத்தி அனுப்புவது தான் அதன் வேலை. இதயத்தின் எடை சுமார் 300 கிறாம். நமது கைக்குள் அடக்கிக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. இதயத்திலிருந்து இரத்தத்தை எல்லா இடங்களுக்கும் எடுத்துச் செல்லும் பல்வேறு குழாய்கள் இருக்கின்றன. இவற்றுக்கு பல இடங்களில் அடைப்பான்கள் (Valves) உள்ளன.

இதயம் தனது வேலையைச் சரிவரச் செய்யாவிடின் நோய்கள் உருவாகும். அந்த வகையில் மாரடைப்பு, இரத்த அழுத்தம், மூச்சு வாங்குதல், நரம்புத் தளர்ச்சி, இரத்த சோகை, சுவாசப் பிரச்சினைகள் போன்ற நோய்கள் ஏற்படலாம். இதயப் பிரச்சினை உள்ளவர்கள் எந்த வேலையையும் மிகவும் நிதானமாகவே செய்ய வேண்டும். வெளியில் அலைந்து திரிவதை முடிந்த வரை தவிர்க்க வேண்டும். குறிப்பாக இரத்த அழுத்தம் (Blood Pressure) எவ்வாறு ஏற்படுகிறது என்றால் பரம்பரை யாலும் உணவில் உப்பு அதிகம் சேர்வதாலும், உடல் பருமல், அதிக கொழுப்பு சேருதல், ஹோர்மோன் (Harmons) இயக்கம் குறைவு போன்ற காரணங்களால் ஏற்படுகிறது. இதயத்தில் பல நோய்கள் ஏற்பட முக்கிய காரணம் இரத்தம் சரியாகச் செல்லாததே. இக்குறைபாட்டைத் தீர்க்க இலகுவான வழிமுறை தினமும் யோகாசனம் மற்றும் மூச்சுப் பயிற்சி செய்வதால் உடலிலுள்ள 72 ஆயிரம் நாடி நரம்புகளுக்கும் சீரான முறையில் இரத்தம் செல்லும். இதனால் அனைத்து உறுப்புகளும் சரிவர இயங்கும்.

மனித உடலில் இடது பக்கத்தில் இதயம் இருப்பதால் இதயப் பிரச்சினை (Heart problem) உள்ளவர்கள் இடது பக்கமாக பாரத்தைத் தூக்குவது நல்லதல்ல.

மது அருந்துவதாலும், புகை பிடிப்பதாலும் இதயத்திற்கு பாதிப்பு உண்டாகும். அத்துடன் உடலுக்கு ஒத்துக் கொள்ளாத உணவினாலும் வரும். எனவே உணவு முறைகளில் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். அதிக அளவில் பழங்கள் காய்கறிகளை உணவாக உட்கொள்ள வேண்டும்.

### இதயத்தை இதமாக்கும் யோகா

யோகாசனம் செய்வதால் உடல் ஆரோக்கியம் அடைகிறது. பல நோய்களை மருந்தின்றி குணப்படுத்துகின்றது. அத்துடன் நோய் வருமுன் காப்போனாக இருக்கின்றது. பொதுவாக இதயத்திற்கு ஒரு சில யோகாசனங்களும் பிராணாயாமமும் செய்தல் வேண்டும். இதனால் வயதை விட இதயத்தின் வயது குறைந்து செல்லும்.

## விபரீதகரணி




விரிப்பில் மல்லாந்து படுக்க வேண்டும். பின் இருகால்களையும் செங்குத்தாக உயர்த்த வேண்டும். பின்பு இரு கைகளினால் இடுப்புப் பகுதியை மேல் உயர்த்த வேண்டும். அத்துடன் கைகளால் உடல் எடையைத் தாங்க வேண்டும். கால் விரல்கள் கண்களுக்கு நேராக இருக்கும் நிலையில் குறைந்தது 200 எண்ணிக்கை வரையில் இருக்கலாம். பின் கால்களை இறக்கி ஓரிரு நிமிடங்கள் படுத்திருக்கவும்.

## ஹலாசனம்


விபரீதகரணி நிலையில் இருந்து கொண்டு மெதுவாக இரண்டு கால்களையும் தலைப்பக்கமாக பின்புறம் கீழே இறக்க வேண்டும். கால்கள் நேராக இருக்க வேண்டும். இரண்டு கைகளும் மடக்கியோ நீட்டியோ வைத்திருக்கலாம். இந்த நிலையில் முடிந்தவரை இருந்தால் போதுமானது.

## தநூராசனம்



விரிப்பில் குப்புறப்படுத்துக் கொண்டு இரு கால்களையும் மடக்கி இரு கைகளினால் கணுக்கால் இரண்டையும் பிடித்து மேலே உயர்த்த வேண்டும் .பின் வலது இடது புறமாக உடலை சில தடவைகள் திருப்ப வேண்டும் பின்பு கால்களை விட்டுவிட வேண்டும்.

## மகாமுத்ரா



வஜ்ஜிராசனத்தில் அமர்ந்து கொண்டு கைகள் இரண்டையும் முதுகின் பின்புறமாக சேர்த்து வைத்துக் கொண்டு மெதுவாக முன்புறமாக குனியவேண்டும். இந்த நிலையில் 20 எண்ணிக்கை வரை மூன்று தடவைகள் செய்யவும்.

## பிரணாயாமம் - நாடி சுத்தி



சுகாசனத்திலோ அல்லது வஜ்ராசனத்திலோ அமர்ந்து கொள்ள வேண்டும். மெதுவாக மூச்சை இழுத்துவிட வேண்டும். வலது நாசியை கைவிரலால் மூடியபடி இடது நாசி வழியாக மூச்சை மெதுவாக உள்ளிழுத்து பின் இடது நாசியை மூடியபடி வலது நாசிவழியாக அதனை வெளிவிடவேண்டும். பின் அதே வலது நாசி மூலம் மூச்சை உள்ளிழுத்து இடது நாசித்தூவாரம் வழியாக வெளிவிடவேண்டும். இதனைத் தினமும் குறைந்தது காலை, மாலை 10 தடவைகள் செய்ய வேண்டும்.

நமது உடம்புக்குள் கண்களுக்குத் தெரியாத 6 சக்கரங்கள் உள்ளன. இவற்றைச் செம்மைப்படுத்தும் மேற்கூறப்பட்ட பயிற்சிகள் இதயத்தை இதமாக்குகின்றன. இதற்கு முதலில் நம்பிக்கை வேண்டும். இன்று அநேகமான மக்கள் நம்பிக்கை இழந்து மாத்திரைகளை நம்பியே வாழ்கின்றனர்.

'நம்பிக்கை உள்ளவனுக்கு ஆரோக்கியம் இருக்கும் ஆரோக்கியம் உள்ளவனுக்கு நம்பிக்கை இருக்கும்.'

மேற்கூறப்பட்ட ஆசனங்களை ஒரு யோகாசன நிபுணரின் உதவியுடன் பழகி வந்தால் ஆறு மாதங்களில் இருதய நோய்கள் மறைந்து ஆரோக்கியத்துடன் வாழலாம். வாழ்த்துக்கள்.







**416.289.2033** *after 7:00pm*
**416.617.5721**



**YOGA - MEDITATION CLASSESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிக்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**



கனடா மாதகல் நலன்புரிப சங்கம்

**பொதுக்கூட்டம்**

கனடா மாதகல் நலன்புரி சங்கத்தின் நடப்பாண்டு செயலவை உறுப்பினர் தெரிவுக்கான பொதுக்கூட்ட அறிவித்தல்.

**இடம்:** நரேஷ் களஞ்சிய அறை, 99, Select Avenue.
Passmore & State Crown Blvd.) Scarborough.
**காலம்:** 22-12-2013 (ஞாயிறு) பிற்பகல் 3.00 மணி

கனடாவாழ் அனைத்து மாதகல் மக்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு: **416.953.8044 / 905.479.5375**
**905.472.7698 / 416.816.0956**

# இன்னொரு காலையில் சல்மாவுடன் சந்திப்பு - ரதன்

சல்மா கவிஞை, நாவலாசிரியர், எழுத்தாளர் என்ற பல பரிமாணங்களைக் கொண்டவர். கார்த்திகை 23ம் நாள் ரொரண்ரோவிற்கு வருகைதந்திருந்தார். Kim Longinotto நெறியாள்கையில் சல்மா என்ற பெயரில் கவிஞையைப் பற்றி விவரணத் திரைப்படம் ஒன்றை இயக்கியிருந்தார். இதனை கார்த்திகை 23ம் நாள் மாலை 3:20 மணியளவில் ஸ்காபரோ சிவிக் அரங்கத்தில் திரையிட்டனர். அதன் பின்னர் சுமார் 60 நிமிடங்கள் கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெற்றது. இதில் கீதா சுகுமார், சுல்பிகா ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர். இதன் பின்னர் கார்த்திகை 25ம் நாள் திங்களன்று காலை 9 மணிக்கு சுல்பிகாவின் வாசஸ்தலத்தில் சல்மாவை 'விளம்பரம்' பத்திரிகைக்காக பிரத்தியேகமாக சந்தித்தோம். என்னுடன் 'விளம்பரம்' பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் அதிபருமான ராஜா மகேந்திரனும் உடனிருந்தார். சல்மாவுடனான எங்களது உரையாடல் இது. ஒரு மாலையில் திரைப்படமும் இன்னொரு காலையில் அவருடனான சந்திப்பும் இடம் பெற்றது. (இதுவும் அவரது ஒரு கவிதைத் தலைப்பே)

ரதன்: பெண்கள் ஒடுக்கப்படுவதற்கான பிரதான காரணங்களுள் ஒன்றாக திருமணத்தைக் கூறுவார்கள். நீங்கள் இந்த பந்தத்தை உடைக்காமல் வாழ்ந்து வருகின்றீர்கள். நீங்கள் திருமணத்தை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

சல்மா: அடிப்படையில் எனக்கு திருமணத்தில் நம்பிக்கை இல்லை. ஆணாதிக்க சமூகம் பெண்களை அடிமைப்படுத்தித்தான் பார்க்கின்றது. கூடியளவு பொறுப்புக்களை பகிர்ந்து செய்யப்பட வேண்டும். இது ஆணாதிக்க சமூகத்தில் சாத்தியமற்றுள்ளது. எந்தவித மதிப்பும் அற்றது தான் திருமணம். ஆனாலும் இது ஒவ்வொருவரது விருப்பம் சார்ந்தது.

ரதன்: உங்களைப் பற்றிய விவரணத் திரைப்படத்தில் திருமணத்தின் பின் நீங்கள் பல இன்னல்களை அனுபவித்ததாக தெரிவித்துள்ளீர்கள். நடு இரவில் மலசல கூடத்தில் நின்றுகொண்டு நாற்காட்டி துண்டுகளில் கவிதை எழுதியதாக கூறியுள்ளீர்கள். நீங்கள் ஏன் திருமண பந்தத்தில் இருந்து வெளியே வரவில்லை?



உடைச்சுக் கொண்டு என்ன செய்யப் போகின்றேன்!!!...... உடைக்க வேண்டிய நேரத்தில் உடைக்கவில்லை. இப்பொழுது சுதந்திரமாக உள்ளேன்.

ரதன்: விவரணத்திரைப்படத்தில் உங்களது மகன்களும் பெண் உரிமையை ஏற்றுக் கொள்பவர்களாக நீங்கள் கூறவில்லை. உங்களது சகோதரியின் மகன் உங்களது சகோதரி திரைப்படம் பார்ப்பதைக் கூட விரும்பவில்லை. இதனை நான் இங்குள்ள இளம் பருவத்து இளைஞர்களிடமும் காண்கின்றேன். இது ஏன்?

சல்மா: ஆணாதிக் சமூகத்தில் ஆணாதிக் சிந்தனையை உள்வாங்கி இவர்கள் சிந்தனை உருவாக்கப்படுகின்றது. அப்பா அல்லது கணவன் ஆதிக்க சக்தியாக உருவாக்கப்படுகின்றார்கள். பாடசாலைச் சமூகமும் பாடத்திட்டமும் அவ்வாறே உள்ளது. பொது வெளியில் பெண்களுக்கு எதிரான கருத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மதத்தை தாண்டி சமூகம் இதனை உருவாக்கியுள்ளது.

ரதன்: சோபா டி, கமலதாஸ் போன்ற படைப்பாளிகள் தங்களது கணவன்களைப் பற்றி வெளிப்படையாக விமர்சித்துள்ளார்கள். உங்கள் கணவரைப் பற்றி நீங்கள் கூற விரும்புவது என்ன?

சல்மா: சமூகத்தின் ஒரு சாதாரண பிரதிநிதி. அவருக்கு எது நியாயம் எனப்படுகின்றதோ அதனை அவர் செய்கின்றார்.

ரதன்: ஒரு பாலியலாளர்கள் மத்தியில் கூட இன்று திருமணங்கள் நடைபெறுகின்றன. இன்று பல நாடுகள் ஒரு பாலியல் திருமணத்தை சட்டரீதியாக அங்கீகரிக்கின்றன. இங்கும் மீண்டும் திருமணம் ஒரு ஒடுக்கு முறையின் காரணியாக உள்ளதே?

சல்மா: இயற்கை ஆணுக்கும் பெண்ணுக்கும் தான் ஈர்ப்பை

தொடர்ச்சி 39ஆம் பக்கம்


Train to be a ...
Community Service Worker With CO-OP



Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant
EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome

Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA

OACC PROUD MEMBER

You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179

Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005

citi COLLEGE
www.CitiCollege.ca
Financial Assistance may be available to those who qualify

# BASEMENT RENT

**JANE & TESTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.317.0865

**EGLINTON & MARKHAM**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. January 01, 2014
தொடர்புகளுக்கு: 416.274.3327

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.836.3279

**MARKHAM & PAINTED POST**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
416.431.4730 / 647.771.3801

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, bank. Avail. January 01, 2014.
647.349.0136 / 647.857.4460

**BIRCHMOUNT & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.240.6758

**STEELES & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.937.1352

**MARKHAM & DENISON**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.861.2293 / 905.209.7665

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, internet, cable. Close to TTC, school, mall, library. Avail. immediately.
416.438.7119 / 647.857.2065

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, Scarborough Town Center. Avail. January 01, 2014.
416.939.5752 / 647.530.4548

**KIPLING & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.786.5839

**ELLESMERE & MEADOWVALE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, hwy 401. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **416.727.6525**

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.836.0800

**MORNINGSIDE & STAINES**
Newly renovated 2 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, washroom. Close to TTC, school, parks, places of worship and more.
தொடர்புகளுக்கு: 416.726.3940

**LAWRENCE & MARKHAM**
1 Big bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Single person or couples preferred. Avail. January 01, 2014.
416.438.2552 / 647.853.5524

**NEILSON & MORNINGSIDE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, Wi-fi. Close to TTC, mall, school, centennial college. Avail. January 01, 2014.
தொடர்புகளுக்கு: 416.414.6094

**FINCH & STAINS**
1 Bedroom bsmt. for rent. Parking, cable, laundry. Close to TTC & etc. Avail. December 01, 2013. Single family preferred.
416.284. 0712 / 416.906.5353

**BELLAMY & PAINTED POST**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. January 01, 2014.
**NEILSON & FINCH**
2 Rooms available in main floor. Ladies preferred.
416.438.6019 / 416.779.8395

**NEILSON & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.717.0657 / 647.717.1657

**9TH LINE & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, school, bank, mall. Avail. December 01, 2013.
416.875.3611 / 905.554.9353

**BELLAMY & EGLINTON**
1 spacious Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, free internet, cable. 2 people preferred. Close to TTC, mall, GO Station. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.877.1719

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. December 01, 2013.
416.417.6725 / 416.284.9399

**BRIMLEY & LAWRENCE**
Large One Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Rent $800. Bills inclusive.
416.509.7463 / 416.551.7104

**MCCOWAN & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.271.6652 / 416.836.5284**

**SCAR. GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.966.3786 / 647.621.3694

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, living Room, Kitchen, Full washroom, Close to TTC (McCowan Subway), School, Scarborough Town Center and all Amendment. Quiet place. Avail. immediately.
416 265 9138 / 416 271 8467

**NEILSON & MORNINGSIDE**
2 அறைகள் கொண்ட Bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, laundry. Close to all facilities. விரும்பினால் உணவும் கொடுக்கப்படும். Boys preferred. Avail. immediately.
தொடர்புக க்கு: 416.298.9913

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.856.7724

**MIDLAND & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, subway. Couple or small family preferred. Avail. January 01, 2014.
தொடர்புகளுக்கு: 416.817.6575

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Couple preferred. 1 Master bedroom also avail.
தொடர்புகளுக்கு: 416.267.0027

**MORNINGSIDE & ELLESMERE**
Finished bsmt for rent. Parking. Close to TTC, University, Scarborough Campus, etc.
தொடர்புகளுக்கு: 647.281.3806

**EGLINTON & BRIMLEY**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, bank. Avail. January 01, 2014.
தொடர்புகளுக்கு: 905.428.7887

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to bus 2 mints., shopping, school, etc. Furniture included. Avail. December 01, 2013.
905.472.8528 / 647.524.5062

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to bus 2 mints., shopping, school, etc. Avail. December 01, 2013.
தொடர்புகளுக்கு: 905.472.6866

**BRIMORTON & SCAR. GOLF CLUB**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. No Smoking. Avail. January 01, 2014.
647.628.7879 / 647.748.7879

**STEELES & STAINES**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Small family preferred.
647.831.5672 / 417.297.8883

**MCCOWAN & FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. 2 Washrooms, living room. Avail. immediately. Rent $925. தொடர்புகளுக்கு: 416.451.0271

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.292.3900

**MEDOWVALE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime. No Smoking.
தொடர்புகளுக்கு: 416.509.5750

**SCAR. GOLF CLUB & LAWRENCE**
Bachelor room for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. December 01, 2013. No smoking & No pets.
தொடர்புகளுக்கு: 647.889.5741

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.576.3778**

**DONMILLS & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. No smoking & No pets. Avail. immediately. Rent $450.
**FINCH & MARKHAM**
2 Bedroom bsmt. Rent $750 + 40% utilities.
தொடர்புகளுக்கு: **647.855.2148**

**MIDDLEFIELD & STEELES**
2 Bedroom bsmt for rent. Parking, washroom, livingroom. All utilities included. Close to Shopping plaza, TTC, schools. No pets & No smoking.
தொடர்புகளுக்கு: **416.953.0309**

**KEELE & MAJOR MACKENZIE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.204.4970**

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 washrooms, parking, laundry. Close to TTC, school, HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.305.7317**

**14TH AVE. & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**905.554.4783 / 416.918.1025**

**MORNINGSIDE & FINCH**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.855.0339**

**MARKHAM & STEELES**
Brand new 2 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. 2 People preferred.
**416.822.4272 / 416.434.7455**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities.
**KEELE & FINCH**
Furnished rooms for rent. Close to all facilities. Avail. immediately.
**905.209.9212 / 416.562.5113**

மேலும் பக்கங்கள் 27, 28

## BASEMENT RENT

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, laundry. Close to school, mall & bus. Couple or Ladies preferred. Avail. immediately.
416.562.4238 / 647.760.6007
647.498.8281

---

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom walk-out bsmt Apt. for rent. Parking, laundry. Avail. immediately. Close to all facilities. Couple preferred.
தொடர்புகளுக்கு: **416.289.9744**

---

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Cloe to TTC, school, mall. Avail. immediately.
**416.289.3685 / 647.780.6500**

---

**MCCOWAN & DENISON**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
**905.554.3595 / 647.532.1233**

---

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately. No smoking & No pets.
**416.757.5202 / 416.272.8754 / 647.990.5202 / 647.920.9466**

---

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 1 Bedroom also avail. Avail. immediately. Close to all facilities.
**416.283.3920 / 647.966.0948**

---

**WARDEN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.869.2675

---

**MARKHAM & BRIMORTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.400.3559**

---

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.587.2704 / 905. 472.0179**

---

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Rent $850. 1 Bedroom also avail. Ladies preferred.
தொடர்புகளுக்கு: **416.575.5055**

---

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **905.910.9972**

---

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt or rooms for rent. Sep. entrance. Car parking, cable, washer & dryer. Close to stores, school, TTC, 24 hrs. bus service & bus routes (129,130, 53).
**647.931.1443 / 647.704.9967**

---

## BASEMENT RENT

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **416.804.5002**

---

**14TH Ave. & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities.

**MIDLAND & ELLESMERE**
3 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.648.6561**

---

**19th AVE. & BAYVIEW**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to Richmound Hill high school. Avail. Anytime.
**416.739.1260 / 647.244.4752 / 416.625.6054**

---

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. **416.919.9964 / 905.683.5105 / 416.301.7546**

---

**MCCOWAN & HIGH GLEN**
2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance. Parking, laundry, cable. Small family preferred. Close to Bus, stores, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.409.5352**

---

**FINCH & PHARMACY**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.759.2030**

---

**DENISON & MARKHAM**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Immediately. Couple preferred.
**905.209.9809 / 416.706.5914**

---

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, temple. Couples or working ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.895.6113**

---

**NEILSON & MCLEVIN**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately. Pentecost Christian preferred.
தொடர்புகளுக்கு: **416.831.8549**

---

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, internet, parking, cable. Single ladies or young couple preferred. தொடர்புகளுக்கு:
**416.286.1755 / 647.852.3804**

---

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: **416.551.8379**

மேலும் பக்கங்கள் 26, 29

## ROOM FOR RENT

**WARDEN & FINCH**
ஒரு அறை வாடகைக்கு உண்டு. Washroom, laundry, cable, parking. Close to TTC, shopping, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.495.9775

---

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent in a mainfloor. Parking, laundry, free internet, washroom. Avail. immediately. Close to all facilities
தொடர்புகளுக்கு: 416.502.3048

---

**AJAX**
4 Bedroom for rent. Parking, laundry. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Close to all facilities. Avail. immediately.
416.671.6377 / 416.845.1377

---

**BELLAMY & LAWRENCE**
2 Bedroom for rent. laundry. Close to all facilities. Avail. Anytime. Ladies or couple preferred.
தொடர்புகளுக்கு: 416.258.2074

---

**EGLINTON & BRIMLEY**
1 Bedroom for rent. Laundry. Close to TTC, mall, school, bank.
தொடர்புகளுக்கு: 647.869.9733

---

**MARKHAM & ELLESMERE**
One Bedroom for rent in apartment. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.231.6591

---

**BIRCHMOUNT & ELLESMERE**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.403.0893**

---

**WARDEN & ELLESMERE**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.294.4631

---

**KEELE & EGLINTON**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, York University, no frills. 1 bedroom bsmt with sep. entrance also available. Avail. immediately.
416.658.1144 / 416.302.3070

---

**MORNINGSIDE & MCLEVIN**
1 Room for rent. Parking, laundry. Close to TTC, mall, school, bank. Avail. immediately. வயதானவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.891.5515

---

**BELLAMY & EGLINTON**
1 Bedroom for rent in a main floor. Parking, laundry, internet, cable. Close to all facilities. Avail. Anytime. 1 Bedroom bsmt also avail.
தொடர்புகளுக்கு: 647.588.7829

---

**DANFORTH & EGLINTON**
Room for rent in apartment. Fully furnished. laundry, cable, internet. Close to TTC, mall, school. Rent $400. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.637.1303

---

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: **416.335.5242**

---

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedrooms for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime. Ladies preferred.
**416.208.7499 / 647.808.4353**

---

**SHEPPARD & MIDLAND**
1 Bedroom for rent. Laundry. Close all facilities. Avail. immediately.
**416.266.4789 / 416.980.5697**

---

**NEILSON & SHEPPARD**
1 Bedroom for rent in main floor. Close to all facilities. Girls preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.879.1648**

---

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் ***(Husband & Wife)*** வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry. Close to Highland Farm, TTC, school, Hopper hut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
**416.291.6667 / 416.895.8111**

---

**MCCOWAN & DENISON**
**1** Bedroom for rent in a main floor. Laundry. Close to all facilities. Avail. immediately.
**905.554.3595 / 647.532.1233**

---

**FINCH & BIRCHMOUNT**
1 Bedroom for rent in a bsmt. All inclusive. Close to all facilities. Rent $350. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.890.5267**

---

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom for rent. Parking. Close to TTC, mall. Avail. immediately.
**647.346.0930 / 647.862.6590**

---

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt சகல வசதிகளுடன் உண்டு. மற்றும் மேல் தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். ஆண்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:
**647.388.1481 /416. 759.7016**

## CONDO FOR RENT

**NEILSON & SHEPPARD**
2 Bedroom + Den condo for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. December 01, 2013.
**416.830.8513 / 416.835.3665**

## CONDO FOR SALE

**DONMILLS & SHEPPARD**
1 Bedroom + den condo. for sale. Close to mall, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.725.2041**

## CONDO. FOR RENT OR SALE

**MARKHAM & DENISON**
2 + Den condo. for sale. 1 Parking, 2 full washroom, Locker, laundry. Close to Elementary school, school, TTC.
தொடர்புகளுக்கு: 416.561.0831

# திருவெம்பாவை

அழுகையில் அரும்பிய அருள் ஞானப்
பநுவல் திருவாசகம்

"அழுது, அழுது அரனடி அடைந்த அன்பர்" என்னும் அடைமொழியை அணியாகக் கொண்டவர் அருள்வாதவூரர். அழுதால் உன்னைப் பெறலாமே என்பது அவர் திருவாக்கு. குழந்தை அழுதால் பால் கிடைக்கின்றது. மனைவி அழுதால் பட்டுப்புடவை கிடைகின்றது. பக்தன் அழுதால் பரமன் அருள் கிடைக்கின்றது. எனவே அழுபவர் தரத்திற்கேற்ப ஏதாவது ஒன்று கிடைக்கவே செய்கின்றது. திருவாதவூரில் திரு அவதாரம் செய்தமையால் வாதவூரர் என்று வழங்கப்பட்டார். அமாத்தியர் என்ற அந்தணர் குலத்தில் அவதரித்த இவர் பதினாறாவது ஆண்டில் பல்கலை பயின்று பாராட்டுப் பெற்றமையால் பாண்டியன் பாராளும் பதவியை பரிசாய் வழங்கினான். முதன் மந்திரிப் பதவியை முழுமனதுடனே வழங்கினான் அரிமர்த்தன பாண்டியன். இதனால் 'தென்னவன் பிரமராயன்' எனச் சிறப்புற்றார். முதன் மந்திரிப் பதவியை முழுமனதுடன் அவர் ஏற்கவில்லை. முதன் மந்திரிப் பதவி முள்ளாசனத்தின் மேல் இருப்பதைப் போன்று அவர் உள்ளத்தில் முனகலை ஏற்படுத்தியது. உலகாழும் உயர் பதவியில் இருந்த போதிலும் உலகவாழ்வில் வாழத்தோன்றியமையால் உயிர்க்கு உறுதுணையாவது யாதெனக் கண்டறிவதில் உள்ளம் ஊன்றி இருந்தார். பாண்டியனுக்காக உயர் புரவிகளை வாங்குவதற்கு திருப்பெருந்துறைக்குச் சென்ற பயணம் திருவாதவூர் வாழ்வில் திருப்புமுனையாக அமைந்தது. ஆங்காங்கே குருந்தமர நிழலில் குருவைக் கண்டதும் காந்தத்தால் கவரப்பட்ட கறை இரும்பு போல ஈர்க்கப்பட்டு கோலம் வேறானார். கொள்கை வேறானார். கோவணாண்டியானார். தான் கொண்டு சென்ற அளவுக்கதிகமான பொருள் அரசனுடையது என்றும் கருதாமல் அடியார்களுக்கும் ஆலயத் திருப்பணிகளுக்கும் அள்ளி அள்ளி வழங்கினார்.

அருள் பழுத்த நெஞ்சினர் ஆயினர். இதனால் அரசனின் ஆத்திரத்திற்கும் அதிரடி நடவடிக்கைக்கும் ஆளாயினார். சுடுமணலிலே நிறுத்தி நெற்றியிலே கல்லை வைத்து கொடுமைகள் பல செய்வித்தான் அரசன். பழனி அருள் பக்க பலமாக இருந்தமையால் அவர் புகழ் பாரெங்கும் பரவியது. பரமனது பெருங் கருணையை நினைந்து பின்வருமாறு பாடினார்.

முத்தி நெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனை
பக்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்த மலம் அறுவித்து சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக் கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே



தன்னுட் கலந்து தானே யாக்கிய தயாநிதியாகிய தனிப் பெரும் சுடரை இவ்வாறு பாடியுள்ளார் மணிவாசகர்.

சிந்தனை நின்தனதாக்கி நாயினேன்றன்
கண்ணினை நின்திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கேயாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்களாரை
வந்தனை யாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனையே மேனித்
தனிச்சுடரே இரண்டு மிலித் தனியனேற்கே.


இம்மையில் செய்த எத்தனையோ நன்மைகளுக்கு அம்மை அப்பனான இறைவனை செம்மையான பாடல்களைத் தொகுத்து பாமாலையாக்கி எம்மை ஈடேற்ற அருளியுள்ளார். அவரது பாடல்கள் நாயக, நாயகி பாவம் எனப்படும். தன்னை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் கொண்டு இப்பாடல்கள் அமைந்துள்ளன. இதில் நாயகனது உடமைகளை அனுபவிப்பதுடன் நாயகனையும் அனுபவிப்பதாகும். இதுவே இன்ப அன்பு நிலையாம். இவர் பாடிய பாடல்கள் திருவாசகமும் திருக்கோவையாருமாகும். திருவாசகம் நெஞ்சக்கனக்கல்லை நெகிழச் செய்து நெக்குருக வைப்பது. இது தேனினும் இனியது. பக்திச் சுவை சொட்டுவது. பாமரனையும் பரமன் பால் ஈர்ப்பது. இதனை வள்ளுவர் இவ்வாறு பாடியுள்ளார்.

வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித்தீஞ்சுவை
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

உடலிடங்கொண்டு உயர் நிலையளித்த உம்பர் கட் கரசை சதுரர் யார் என்று கேட்டு அதற்கு விடைதான் தான் என்கின்றார். அந்தமில் ஆனந்தத்தில் அழுத்தியதால் ஏற்பட்ட இன்பமழை நிலை நாயிற் கடைப்பட்ட தன்னை தாய் போல் அரவணைத்து உலக பந்தத்தில் மாய்தலை ஒழித்து இவன் என் சேய் என்று ஆட்கொண்ட திறனை வியக்கின்றார்.

தந்துன் தன்னைக் கொண்ட தென் தன்னை
சங்கார ஆர்கொலோ சதுரர்
அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்ற தொன்றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறை யுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டிர்
யானிதற் கிலனோர் கைமாறே

இறைவனே தனது கைப்பட எழுதிய திருவாசகப் பாடல்களை விருப்புடன் நாள்தோறும் உருக்கமுடன் பாடி திருப்பொலிவு பெறுக.



நா. க. சிவராமலிங்கம்

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969


CARS, VANS & TRUCKS WANTED
Any make, Any condition.
Pay top dollars.
Contact: 416.835.3475



அனைத்துலக தமிழ் வானொலி
GLOBAL TAMIL RADIO
* செய்திகள்
* போட்டிகள்
* பாடல்கள்
* தகவல்கள்
24 மணி நேர தமிழ் ஒலிபரப்பு
416-264-4283 / 416-264-3666
"மண்ணையும் மனங்களையும் நேசிக்கலாம்"
www.gtr24.com

SPACE AVAILABLE FREE*
KENNEDY & EGLINTON பகுதியில் சிறப்பாக இயங்கி வரும் புதிதாக அமைக்கப்பெற்ற Coin Laundry யினுள் Tailoring (free*) செய்வதற்கான இடம் உண்டு. அனுபவமிக்கவர்கள் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு:416.856.0408

MATH, SCIENCE & ENGLISH TUITION
Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at Scarborough & Stouffville Contact: 647.340.9490 / 416.732.2228


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

## APARTMENT FOR RENT

**1 MONTH FREE RENT**
**3 BEDROOM APARTMENT**
***In a newly renovated high-rise apartment building. Utilities included. Clean, free parking. Close to TTC, Tamil stores, schools, etc.***
***Call: 416.264.2818***

## CLASSES

***ELLESMERE & MEADOWVALE***
Kindergarten - Gr. 6,
English, Math & Tamil. Reading & Writing.
Prepare for tests, EQAO
***Contact: 416.282.5829***

## TUITION CLASSES

Gr. 3 - Gr.12, College & University Math, Science, English, Functions Calculus & Vectors, Data, physics, Chemistry 7 Biology.
University Preparation Class.
Calculus I & II, Linear Algebra, Linear Statics, Dynamics, Mechanics, Physics & Chemistry.
***Ruban Master: 416.817.8226***

## TUITION

An experienced Graduate tutor for Grade 5 to Grade 10. Math & Science. Tuition Center இலும், வீட்டிற்கு வந்தும் குறைந்த கட்டணத்தில் கற்பிக்கப்படும். Guna Master: 647.834.7358
atgunam@yahoo.ca

## TUTORING

***By Experienced Graduates.***
- Math • Adv. Function, Calculus & Vectors
- Physics, Data managt, Java
- Computer Training
- CCNA / CCNP Preparation Help

***Contact: 416.706.1654***

## TUITION
## KEY BOARD CLASSES

***MARKHAM & LAWRENCE***
ஆரம்ப, நடுத்தர மற்றும் உயர்தர சகல வகுப்பினர்களுக்குமான key board வகுப்புக்கள் Weekdays & Week ends இல் 3 மாத காலத்தில் தமிழ் மற்றும் ஆங்கில பாடல்கள் வாசிப்பதற்கு கற்றுக்கொடுக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## GRACE HOPPERS

***YOUR HOME HOPPER'S PARTY***
We will come and do fresh tasty hoppers, dosa, rottie with 4 kind sambol, chicken and mutton curries, chilly chicken, noodles, Pittu, biryani. Appetizer - Rolls, Vada, cake.
***Maria: 647.522.7599***

## HOUSE FOR SALE

**வீடு விற்பனை**
யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் கொழும்புத்துறை, 36 சுவாமியார் வீதியில் அமைந்துள்ள 2 பரப்பு காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு. பள்ளிக்கூடம், கோவில் அண்மையில் உள்ளது.
தொடர்புகளுக்கு: ***039.404.1521***

## HOUSE FOR SALE

***NEILSON & FINCH***
4 Bedroom house for sale. 1 Bedroom finished bsmt. Hardwood floor. Single garage. Close to TTC, mall, school.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.294.9851

**காணி விற்பனைக்கு**
வெள்ளவத்தையில் 13½ perchase காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
416.716.6422 / 647.427.5469

## PRIVATE SALE

***SALEM & HWY 401***
Brand new 3 bedroom house for sale. Parking, laundry. Close to all facilities.
Avail. January 01, 2014.
தொடர்புகளுக்கு: 647.402.8384

## மணமகன் தேவை

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த பட்டதாரியான மணமகளுக்கு (கிரக பாவங்கள் கொண்ட) ரொரன்றோவில் வேலை பார்க்கும் பட்டதாரி மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 647.926.0967

## மணமகன் தேவை

University முடித்து அரச வேலை பார்க்கும், 5 வருடம் திருமணபதிவு செய்து விலகியுள்ள பெண்ணுக்கு மணமகன் தேடுகின்றோம். University, College முடித்து தொழில் புரிபவர்கள், Canada, USA இல் இருப்பவர்கள், 1974 ஆம் ஆண்டு தொடக்கம் 1989 ஆம் ஆண்டுவரை பிறந்தவர்களின் ஜாதகம் எம்மிடம் உள்ளன. இது ஒரு தமிழர் சமூகசேவை.
தொடர்புகளுக்கு: 647.705.9494

## ஜோதிடம்

எண்கணிதம், கைரேகை பார்த்தல், ஜாதகம் பார்த்தல் போன்றவை இந்து மதமல்லாத கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவரால் மிகவும் துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை என்பன கூறப்படும்.
தொடர்புகள்: 416.502.3033

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:905.492.0259

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com / www.tamilvanakkam.com***

## HOUSE FOR RENT

***KENNEDY & FINCH***
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.568.6407

***TOWNLING & TAUNTON***
4 Bedroom house for rent. 31/2 Washroom, parking, laundry. Close to TTC, mall, school.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.587.0408

***KENNEDY & BUR OAK***
4 bedroom house for rent. Parking, laundry. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.858.3647

***MORNINGSIDE & ELLESMERE***
3 Bedroom house for rent. 1½ Washroom, parking, laundry. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.609.1309

***MCCOWAN & FINCH***
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities.
Avail. December 01, 2013.
தொடர்புகளுக்கு: 647.271.2654

***BRIMORTON & MCCOWAN***
3 Bedroom house for rent. Parking, laundry. Close to TTC, mall, bank, school, Hospital, subway. Avail. December 01, 2013.
2 Bedroom bsmt also avail.
வீடு முழுமையாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: ***416.271.6573***

***BRIMORTON & MCCOWAN***
3 Bedroom house for rent. Parking, laundry. Close to TTC, mall, bank, school, Hospital, subway. Avail. December 01, 2013.
2 Bedroom bsmt also avail.
தொடர்புகளுக்கு: ***416.271.6573***

***MORNINGSIDE & MCNICOLL***
4 Bedroom house for rent. 2 Parking, laundry. Close to all facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: ***416.704.8513***

***SCAR.GOLF CLUB & LAWRENCE***
3 Bedrooms main floor + 3 bedrooms bsmt house for rent. Parking, laundry. Close to TTC, mall, bank, school. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately.
***416.454.9986 / 416.219.4936***

***MCCOWAN & LAWRENCE***
3 Bedrooms apartment house for rent. Close to TTC, Hospital, bank, tamil stores.
Avail. immediately.
***416.697.2370 / 416.754.4954***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## JOB JOB JOB

***VICTORI APARK & ST.CLAIR***
***VICTORIA PARK & KINGSTONE***
Pizza கடை ஒன்றிற்கு ஆண், பெண் இருபாலாரும் வேலைக்கு தேவை.
Full-time or part-time.
தொடர்புகளுக்கு: 647.449.5315

***FINCH & MIDDLEFIELD***
GTA Square இல் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு Cashier, cleaner, cook ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.318.9866

***YOUNG & STEELES***
Pizza Pizza நிறுவனத்திற்கு Delivery driver, Cook, Counter helper ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.457.8263

***MORNINGSIDE & FINCH***
தமிழ் Restaurant ஒன்றிற்கு வேலைக்கு ஆள் தேவை. இருபாலாரும் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.278.4133

***PIZZA MAKER WANTED***
Scarborough வில் அமைந்துள்ள Pizza Nova ஒன்றிற்கு ஆண் ஒருவர் வேலைக்கு தேவை.
Night time. Full-time.
தொடர்புகளுக்கு: 647.505.4224

***CARGO VAN DRIVER WANTED.***
Full-time. USA & Ontario.
647.262.5544 / 416.836.2445.
Fax: 905.507.9343

***KEELE & STEELES***
UK Auto Body Work.
651 Petrolia Road, Toronto, ON M3J 2X8
தொடர்புகளுக்கு: 647.831.9005

## DAY CARE

***MIDLAND & EGLINTON***
உங்கள் பிள்ளைகளை மிகக்கவனமாகவும் அன்பாகவும் பராமரிக்கப்பட வேண்டுமா?
அழையுங்கள்: ***647.402.5253***

## தையல் வகுப்புக்கள்
## தையல் *Orders*

***MARKHAM & LAWRENCE***
Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண்ணுக்கும் Saree blouse தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## FOR SALE

Sofa, TV, bed, Freezer, etc. போன்ற வீட்டிற்கு தேவையான பொருட்கள் மலிவு விற்பனையில்
தொடர்புகளுக்கு: 416.831.8549

மேலும் பக்கங்கள் 26, 27

## ROOM FOR RENT

***KENNEDY & ELLESMERE***
***Rooms available. Close to Kennedy Station, TTC, school, mall. Avail. immediately.***
***3 Bedroom house also avail.***
***Contact: 416.830.5560***

## வேலை வாய்ப்பு - *AZ Drivers wanted*



***Drive X Press***
***USA, Canada truck*** வாகன ஓட்டங்களுக்கு வேலைக்கு ஆட்கள் தேவை. இரு வாரத்திற்கு ஒருமுறை சம்பளம். வருட இறுதியில் உபரிச்சம்பளம். சம்பளத்துடன் விடுமுறை. நல்ல சம்பளம், அதிக மைல்.
***Pl. Call: 905.507.1800 / 647.688.9120***
***Fax: 905.507.9343***

# இரண்டாம் உலகம் - திரைவிமர்சனம்

செல்வராகவன், ஆர்யா, அனுஷ்கா, ஹாரிஷ் ஜெயராஜ்… என முன்னணி திரை நட்சத்திரங்கள் கூட்டணியில் உருவாகி யிருக்கும் படம். எனவே, அதிக நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்ட படம். அந்த எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்திருக்கிறார்களா? பார்ப்போம். இரண்டு உலகங்கள் இருக்கின்றன. ஒரு உலகம், பூலோகம். இரண்டாம் உலகம், மாய உலகம். இரண்டு உலகங்களிலும் நடப்பவைகள் மாறி மாறி வந்து, ஒரு கட்டத்தில் ஒன்றாக சேர்கின்றன.

முதலில் பூலோகம்… இந்த உலகத்தில் வாழும் ரம்யா (அனுஷ்கா) டாக்டர். ஏழை குழந்தைகளின் மீதும் வயதான பெரியவர்கள் மீதும் அன்பு செலுத்துகிற மதுவை (ஆர்யா) அவள் பார்க்கிறாள். மதுவும் டாக்டர். இப்படிப்பட்ட ஒரு நல்லவன் மேல், அதுவும் டாக்டர் வேறு, எப்படி ஒரு இளம் பெண்ணுக்கு காதல் வராமல் இருக்கும். பார்த்தவுடன் காதல்கொள்கிறாள். அதை வெட்கத்தை விட்டு ஆர்யாவிடம் சொல்ல, 'எனக்கு கல்யாணத்தில் விருப்பமில்லீங்க' என்று கூறி மறுத்துவிடுகிறான் மது. எனவே, வீட்டில் பார்க்கும் மாப்பிள்ளையைக் கட்டிக்கொள்ள சம்மதிக்கிறாள் ரம்யா. அது தெரியாமல் அவள் மீது காதல்கொள்கிறான் மது. காதலோடு ரம்யாவை அணுக, அவள் தனக்கு கல்யாணம் நிச்சயமாகிவிட்டதைச் சொல்லி மறுக்கிறாள். ஆனால், மது அதை ஏற்றுக்கொள்ளாமல் மீண்டும் விரட்டி விரட்டி காதலிக்கிறார். (தமிழ் சினிமா கதாநாயகன் இல்லையா?)

கட், மாய உலகம்… இந்த உலகில் வாழும் மனிதர்களிடையே காதல் இல்லை, மாறாகக் காமம் மட்டுமே நிலவுகிறது. மரபுப்படி பெண் என்பவள் ஆண் மகனால் 'எடுத்துக் கொள்ளப்படுபவள்' மட்டுமே. இந்த உலகில் நல்லவர்களுக்கு ஒரு நாடு கெட்டவர்களுக்கு ஒரு நாடு என தனித்தனியாக வாழ்கின்றனர். கெட்டவர்கள், நல்லவர்களின் தெய்வத்தைத் திருடி தங்களது அதிகாரத்தை இன்னும் அதிகமாக்க முயற்சிக்கிறார்கள். அவர்களின் கொட்டத்தை அடக்கும் ஆண் மகன் ஒருவனை உருவாக்க வேண்டியிருக்கிறது. தீரமிக்க அந்த ஆண் மகனை ஒரு பெண்ணால்தான் உருவாக்க முடியும் என்பது நல்லவர்கள் நாட்டின் தெய்வத்திற்கு தெரிகிறது. எனவே, அதற்காக தெய்வம் திட்டமிடுகிறது. ஒரு இளம்பெண்ணின் வடிவில் நல்லவர்களிடையே வாழும் இந்தத் தெய்வம் 'அம்மா' என அழைக்கப்படுகிறது.



நல்லவர்கள் நாட்டின் தளபதியின் மகன் மருவன் (ஆர்யா). அவன் பயந்தாங் கொள்ளியும் கோழையுமாய் இருக்கிறான். இந்த நாட்டில், யாருக்கும் தான் அடிமை இல்லை என்று சொல்லிகொள்ளும் வீரப் பெண் வர்ணா (அனுஷ்கா)வும் வாழ்கிறாள். 'விண்ணதிரப் பாயும் மிருகத்தையே பந்தாடும் தீரம்மிக்கவள்' இவள். வர்ணா மீது மோகம் கொள்கிறான் மருவன். கவனிக்கவும் மோகம் தான், காதல் அல்ல. அதாவது, யாருமின்றி அனாதையாக வாழும் வர்ணாவை 'எடுத்துக் கொள்ள' ஆசைப்படுகிறான். மருவனுக்கு உதவ வரும் நண்பர்களும் அவனுடன் சேர்ந்து அவளிடம் அடி வாங்குகிறார்களே தவிர அவளை எடுத்துக்கொள்ள முடிவதில்லை. இந்த நிலை தொடர விவகாரம் ராஜா வரை போய்விடுகிறது.

ராஜா, வர்ணாவைப் பார்த்ததும் தானே அவளை எடுத்துக்கொள்ளப் போவதாக சொல்லி அவளை அரண்மனைக்கு கூட்டிச் சென்று அந்தபுரத்தில் வைக்கிறார். மருவன் இதை எதிர்க்கிறான். அவனது கோழைத்தனத்தை அறிந்த ராஜா, அவனது தைரியத்தை மெச்சுவதுபோல், 'சிங்கத்தின் தோலை ரத்தம் சொட்டக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு அவளைக் கூட்டிச் செல், அதுவரை அவளைத் தொட மாட்டேன்' என உறுதியளித்து அனுப்புகிறார். தெய்வத்தின் திட்டப்படி, வருணா மீதான ஆசையில் தீரமாகப் போரிட்டு வெற்றியுடன் திரும்புகிறான் மருவன். வருணாவை மணந்துகொள்கிறான். ஆனால், மணநாள் அன்று, 'நான் யாருக்கும் அடிபணிய மாட்டேன்' எனக்கூறி தன்னை மாய்த்துக்கொள்ள முயல்கிறாள், வர்ணா. எனவே, மீண்டும் விவகாரம் ராஜாவிடம் செல்ல அவளுக்கு ராஜா தண்டனை வழங்குகிறார். அவள் காட்டுக்குள் அனுப்பப்படுகிறாள்.

கட், பூலோகம்… இங்கே ரம்யா (அனுஷ்கா) திடீரென இறக்கிறாள். ரம்யாவை இழந்து வாடும் மது (ஆர்யா), மீளாத் துயரில் ஆழ்ந்துவிடுகிறான். நிலைகுலைந்து இருக்கும் அவனை நோக்கி ஸ்கூட்டர் ஒன்றில் வருகிறார் அவனது அப்பா. முடமாய் இருந்தவர் ஸ்கூட்டர் ஓட்டிக்கொண்டு வருவது கண்டு திகைத்து, ஆச்சரியமாகப் பார்க்கும் அவனுக்கு ஆறுதல் சொல்கிறார். தீவிரமான அன்பு செலுத்தினால் மாண்டவர்களையும் மீளக் காண முடியும் எனக்கூறி மறைகிறார். அப்போது, மதுவின் சித்தப்பா கைபேசியில் அழைத்து, அவனது அப்பா இறந்து மூன்று நாட்களாகிவிட்ட செய்தியைச் சொல்கிறார். செய்வதறியாது அமர்ந்திருக்கும் அவனை வெள்ளை நாயொன்று ரம்யா இறந்த இடத்திற்கு அழைத்துச் செல்கிறது. அவளது உறைந்த ரத்தத்தில் மொட்டவிழத் துவங்குகிறது. தானாக நகர்ந்துவரும் காரொன்றில் அவன் ஏற, அது அவனை மாய உலகிற்கு அழைத்துச்செல்கிறது.

கட், மாய உலகம்… இங்கு வரும் - தன்னைப் போலவே இருக்கும் மதுவை - மருவன் மீட்கிறான். மருவனோடு தங்கிவிடும் அவனுக்கு, காட்டில் வாழும் வர்ணாவைப் பார்த்ததும் - அவள் ரம்யா போலவே இருப்பது கண்டு பெரும் - மகிழ்ச்சியும் ஆச்சரியமும் எழுகிறது. மருவனைப் போலவே இருக்கும் மதுவிடம் பரிவாக நடக்கிறாள் வர்ணா. பனிக்காலத்தில் காட்டில் வாழ முடியாமல் வீடு திரும்புகிறாள்.

அவர்களை 'மகிழ்ச்சியாக' இருக்கச் சொல்கிறான் மது. ராஜாவின் கட்டளையை மீறி வர்ணாவை வீட்டிற்குள் சேர்த்துக்கொண்டதற்காக மருவனைச் சிரச்சேதம் செய்ய ஆணையிடுகிறார் ராஜா. தண்டனை நிறைவேறுவதற்குள் 'கெட்டவர்கள்' நாட்டினர் உள்ளே புகுந்து தெய்வத்தை (அம்மா) கடத்திக்கொண்டு போய்விடுகிறார்கள். அம்மாவை மீட்க அவர்களைத் தொடரும் மருவனும் சிறை பிடிக்கப்படுகிறான். அவனை மீட்கப் புறப்படும் வர்ணாவுக்கு உதவ முன்வருகிறான் மது. பகைவர்களை அழித்து அம்மாவை மீட்டுவரும் போது மருவன் மீது வர்ணாவுக்கு காதல் மலர்ந்து விடுகிறது. வர்ணா, மருவனைப் பார்த்து 'வெட்கம்' கொள்கிறாள். அவ்வுலகெங்கும் பூக்கள் மலர்ந்து துளிர்க்கின்றன. நதியில் விழும் மதுவை இன்னொரு உலகிற்கு (மூன்றாம் உலகம்?) அழைத்துச் செல்கிறது 'ஊழ்'. அவ்வுலகில் பென்குவின்கள் சுற்றியலையும் பனிப்படலத்தில் ஒரு வீட்டில் 'ரம்யாவைப்' போலவே இருக்கும் பெண்ணொருத்தியைச் சந்திக்கிறான் அவன்.

**- ஃபிலிம்நியூஸ் கிருஸ்ணன் -**

வித்தியாசமாக இருக்கிறதே என புறப்பட்டுவிடாதீர்கள். அப்புறம் பாடம் பார்த்துவிட்டு வந்து 'விளம்பரம்' விமர்சனக் குழுவை திட்டுவீர்கள். அவ்வளவு குழப்பமாக இந்தக் கதைக்கு திரைக்கதை அமைத்திருக்கிறார்கள்.

படத்தில் ஆறுதலான விஷயம் என்றால் அது அனுஷ்காதான். படம் நெடுகிலும் வெவ்வேறு மாதிரி தோற்றங்களில் வருகிறார். கொழுக் மொழுக் பொம்மை போல பம்மி பம்மி சென்று, ஆர்யாவின் அருகில் அமர்ந்து, காதலை சொல்ல தடுமாறுகிறாரே, அந்த காட்சி பிரமாதம்!

ஆர்யாவும் கச்சிதம்தான்! ஆனால், இறுகிப் போன முகத்தில் எவ்வித தசை நகர்வும் நடிப்பசைவும் இல்லை. அனுஷ்காவின் கல்லூரி வாகனத்தில் தொற்றிக்கொண்டு கிளம்புகிற அவர், அங்கு தன் சாயம் வெளுத்ததும், நாற்பதை தாண்டிய பேராசிரியையைப் பார்த்து, 'நான் உங்களைதான் நேசிக்கிறேன்' என்று திருப்பிப் போடும்போது பரவாயில்லை. ஓரளவுக்கு டாக்டர் ஆர்யாவை விடவும் வேற்று கிரக ஆர்யா ரசிக்க வைக்கிறார்.

எடிடிங்: கோலா பாஸ்கர், இசை: ஹாரிஸ் ஜெயராஜ், பின்னணி இசை: அனிருத். பின்னணி இசை முதல்பாதியில் அதிகம் இல்லை. அது எவ்வளவு பெரிய ஆறுதல் என்பதை இரண்டாம் பாதியில்தான் உணர முடிகிறது. இரண்டாம் பாதி யில் அவ்வளவு கரைச்சல்! 'கனிமொழியே' பாடலுக்கும், 'என் காதல் தீ' பாடலுக்கும் அரங்கத்தில் கை தட்டுகிறார்கள். ஒளிப்பதிவு சிறப்பு. கிராபிக்ஸ் காட்சிகளுக்கு நிறைய உழைத்து இருக்கிறார்கள். பிரமாண்டம் தெரிகிறது. குறிப்பாக மிருகத்துடன் ஆர்யா கட்டிப்புரளும் காட்சிகளை குழந்தைகள் விரும்பக்கூடும். இயக்கம்: செல்வராகவன். ஆர்யா, அனுஷ்கா தவிர்த்து மற்ற நடிகர்களின் தேர்வில் கோட்டை விட்டுள்ளார். மாய உலகில் வாழும் கதாபாத்திரங்கள் அனைவருமே 'இந்தி' மொழி மாற்று நாடகங்களில் வருவது போல் இருக்கிறார்கள். காட்சியமைப்பை பற்றி சொல்லவே வேண்டாம், படுமோசம். வசனங்கள்: பள்ளிக்கூட நாடகங்களில் கூட இதைவிட சிறப்பாய் எழுதி இருப்பார்கள்.

மொத்தத்தில் இரண்டாம் உலகம் - ஆபத்து!

# ஒப்பந்தம்

ஒவ்வொரு முறையும்
அம்மா நாசூக்காய்ச் சொல்வதை
அக்கா கோபமாய்ச் சொல்வாள்
படுக்கையறையின்
தவறுகளெல்லாம்
என்னுடையதென
தினமும் படுக்கையறையில்
எதிர்கொள்ளும் முதல் பேச்சு
'இன்றைக்கு என்ன?'
அநேகமாக
இறுதிப்பேச்சும்
இதுவாகவே இருக்கும்
வேசைத்தனத்தினைச் சுட்டும் விரல்
ஒளிரும் கோடி நட்சத்திரங்களிலிருந்து நீள
நடுங்கும் இரவுகளில்
மிதக்கும் அறிவுரைகள்
குட்டிக்கு உணவூட்ட
இயலாப் பூனையின்
தேம்பியழும் குழந்தைக்குரல்
கவ்விப்பிடிக்கிறது ஈரலை
உனக்கும் கூட
புகார்கள் இருக்கலாம்
என் நிலைப்பாடு
காலத்தாலும்
வரலாற்றாலும்
தெளிவாக்கப்பட்டிருக்கிறது
உன்னிடமிருந்து
கலங்கானதே எனினும்
சிறிது அன்பைப்பெற
வெளியுலகில் இருந்து
சானிட்டரி நாப்கின்களையும்
கருத்தடை சாதனங்களையும் பெற
இன்னும் சிறு சிறு உதவிகள் வேண்டி
முடியுமானால்
உன்னைச் சிறிதளவு அதிகாரம் செய்ய
நான் சிறிதளவு அதிகாரத்தை
ஸ்திரப்படுத்திக்கொள்ள
எல்லா அறிதல்களுடன்
விரிகிறதென் யோனி. - சல்மா

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

### இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

'வேணுமெண்டா நான் கேட்டு வாங்கித் தாறேன்.' மாமி கூறினா.

நீலவேணி மாமியைப் பார்க்க, 'உங்களுக்கு எண்டபடியாலை நான் செய்யிறேன். சாதி சனத்துக்குச் செய்யாமல் வேறை ஆருக்குச் செய்யிறது. மற்றது உங்களைப் பற்றி எனக்குத் தெரியும் தானே. குடுக்கல் வாங்கலிலை பிரச்சனை ஒண்டும் வராது.'

நீலவேணியின் கண்கள் மெதுவாய் பனித்தன. 'மாமி' என்றவள், மாமியின் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டாள். அவளால் பேச முடியவில்லை. மெதுவான விம்மல் வெளிவந்தது.

'என்னடி பிள்ளை. குழந்தைப் பிள்ளையாட்டம். நீ ஒண்டுக்கும் யோசிக்காதை. தைரியமாய் இரு. ஒண்டுக்கும் யோசிக்காதை. நானிருக்கிறேன்தானே.' என்று கூறிய மாமி நீலவேணியின் கைகளுக்குள் இருந்த தனது கையை மெதுவாக விடுவித்துக் கொண்டு நீலவேணியை ஆதரவாக முதுகில் தடவிக் கொடுத்தா.

சிறிது நேரத்தில் நீலவேணி வழமைக்கு வந்து விட, அன்னப்பிள்ளை மாமி மீண்டும் விடயத்திற்கு விட்ட இடத்தில் இருந்து வந்தாள்.
'பிள்ளை! துணைக்குப் போனாலும் பிணைக்குப் போகாதை எண்டு சொல்லுவினம். ஆனால் நானப்பிடி இல்லை. சிவா ஆர். ஏன்ரை சொந்த ரத்தம். இந்த நேரத்திலை உதவாட்டி பிறகு இருந்தென்ன இல்லாட்டி என்ன? கனகம் எனக்கெண்டால் எவ்வளவும் தருவாள். எனக்கெண்டு கேட்டு வாங்கித் தாறேன். நீங்கள் ஆகவேண்டியதை பாருங்கோ' என மாமி கூறிவிட்டு,

'நல்லாய் யோசிச்சு, சிவாவோடை கதைச்சிட்டு எனக்குச் சொல்லு, காசலுவலை நான் பாக்கிறேன் என்ன?' மாமி கூறினாள்.

'மாமி நான் இவரோடையும் கதைச்சுப் போட்டு உங்களுக்குச் சொல்லுறோன்'

'ஓமோம். பின்னை உன்ரை பாட்டுக்கு எடுபடுறதே!. சிவாவுக்கு வடிவா விளங்கப்படுத்து' என்ற மாமி,

'நானும் போகவேணும். நேரமுமாகுது.' ஏனக் கூறிவிட்டு எழுந்தாள். நீலவேணியும் மாமியுடன் எழுந்து வந்தாள்.

வீட்டு வாசல்வரையிலும் நீலவேணிக்கு ஆறுதலான வார்த்தைகளைக் கூறிக்கொண்டு வந்த மாமி வாசலடியில் நின்று விட்டாள்.

'பிள்ளை உந்த விசயம் கட்டாயமாய் செய்ய வேணும். ஏனென்டால், சிவாவின்ரை தகப்பன், உன்ரை மாமனார் பேயடிச்சுத்தான் செத்தவர் எண்டு ஊரிலை கதைக்கிறவை. இப்பதான் எனக்கு நினைவுக்கு வருகுது'

**◊ கனி ◊**

நீலவேணிக்குத் திக் கெண்டது.

'என்னமாமி சொல்லுறியள்?'

'அது ஊர் முழுக்கத் தெரிஞ்ச கதைதானே' எனக் கூறிய மாமி அப்பிடியே நின்று விட்டா. 'உங்கடை ஆக்கள் சிவாவை மாப்பிளை கேட்டு வரேக்கையும் அதைப் பற்றி என்ரை மனுசனும் சொன்னவராம். நீங்கள் கேக்கேலை. நீயும் ஆள் நல்ல வாட்டசாட்டமாய், சிவப்பாய் இருக்க மயங்கிட்டாய்' என்றவ 'உதாலை நானும் கெட்ட பேர் வாங்கினனான்தானே' குத்திக் காட்டுவது போல மாமி கூற,

நீலவேணி ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

'எனக்கு இண்டைக்கு வரையிலும் உது தெரியாது, மாமி. நீங்கள் இப்ப சொல்லத்தான் புதுசாய் கேட்கிறேன்.'

'அது பெரிய கதை பிள்ளை. இன்னொரு நாளைக்கு வந்து வடிவாய்ச் சொல்லுறேன். நீ இப்ப சிவாவிட்டை விசயத்தைச் சொல்லி எல்லாத்தையும் பார்.'
நீலவேணி விடவில்லை. மாமியை வற்புறுத்தலாய் கேட்க,

மாமியும் முதலில் அவ்வளவு ஈடுபாடில்லாதமாதிரிக் காட்டிக் கொண்டு இறுதியில் ஒத்துக் கொண்டாள். இருவரும் மீண்டும் வீட்டுக்குள்ளே சென்றார்கள்.

'மாமி ஒரு தேத்தண்ணி போடட்டே'

'ஓம் பிள்ளை. இனி பாக்குக்கும் போகேலாது, தேத்தண்ணியைச் குடிச்சுக் கொண்டே எல்லாத்தையும் சொல்லுறேன்.'

(இன்னமும் இருக்கிறது.)


# மகா சிவன் ஆலயம் (பிக்கரிங்)

# மகா கும்பாபிஷேகம்

பிக்கரிங் மாநகரில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும்
மகா சிவன் ஆலயத்தில்

**நூதன ஆலய பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம்**

**04.12.2013 - 05.12.2013: மாலை 4:00 - 10:00 மணி வரை எண்ணெய் காப்பு**

06.12.2013 - வெள்ளி காலை (7:00 மணி முதல் 10:00மணி வரை)
04.12.2013 - புதன்கிழமை காலை கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பம்
05.12.2013 - வியாழன் மாலை ருத்திரகோமம்

E-mail: Lordsiva2013@gmail.com

அடியார்கள், குருமார்கள், ஆலயதர்மகத்தாவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**Maha Sivan Temple – 940 Brock Rd. Pickering**
**905.492.4540 / 416.305.7173**

# ஆத்மா/ஆன்மா - தொடரும் ஆய்வுகள்

மகாபாரதத்தில் இடம்பெறும் நிகழ்வு ஒன்று ஆத்மா பற்றிய தேடலை செய்வதற்கு தூண்டுதல் செய்வது. போர்க்களத்தில் தன்னை எதிர்த்து நிற்பவர்களை அருச்சுனன் நோக்குகிறான். தனக்கு பல்வேறு வில் பயிற்சி கொடுத்த ஆசான்களையும், பீஸ்மர், துரோணர், கிருபர் போன்றவர்களையும் கொல்ல அஞ்சுகிறான். அவனது தேரினை ஓட்டும் பகவான் கண்ணன், அருச்சுனன் தயங்குவதனைக் கண்டு, "ஏன் அருச்சுனா அஞ்சுகிறாய்? வில்லை எடு நாண் ஏற்று, அவர்களை குறிவைத்து அம்பைத் தொடு, கடமையை செய், பந்த பாசத்தைப் பார்க்காதே, நீ அவர்களை கொல்வதாக நினைத்து பயப்படுகிறாய். நீ அவர்களைக் கொல்ல முடியாது. ஆன்மா அழிவற்றது, அவர்களது உடலைத்தான் வீழ்த்த முடியும், வீழ்த்தப்பட்ட உடலிலிருந்து 'ஆன்மா' மற்றொரு உடலில் புகுந்து வேறொரு வாழ்க்கையை மேற்கொள்ளும். நீ அவர்களைக்கொல்வது உடலைத் தான், ஆன்மாவை அல்ல. நீ, நான் சொல்கிறபடி செய்" என்று பகவான் கண்ணன் கூற, அருச்சுனன் செய்து முடித்தான். பாரதப் போரும் முடிவுற்றது.

ஆத்மாவைப்பற்றி அதிகமாக வலியுறுத்தும் இந்துமத வேத நூலின் ஆணிவேரான கருத்து இது. இந்த தத்துவத்திலிருந்து ஆத்மாவுக்கு அழிவில்லை, மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கிறது. கர்மபலன் களுக்கேற்ப பிறவியும் எடுக்கிறது. இப்படி ஒரு தொடர் நிகழ்வு நடைபெறுகிறது எனலாம். இந்துமதத்தில் உடல் வேறு ஆத்மா வேறு என்பதே முக்கியமாகிறது. பல்வேறு அகராதிகளிலும் இது பற்றிய விளக்கங்கள், சிக்கல்கள், பலவற்றினை ஏற்படுத்துகின்றது. ஆத்மா என்பது உயிர்நிலை. உயிர், ஆவி, உயிர்க்கூறு, உள்ளம் என்றெல்லாம் விளக்கங்கள் கூட உள்ளன. இவ்வாறான சிக்கல்களிலிருந்து சமய உலகம் இன்னும் விடுபடவில்லை!

பல்வேறு சமயங்கள், தத்துவங்கள், உளவியல் கருத்துக்களையும் ஆத்மாவை பல்வேறு வடிவங்களில் பார்க்கின்றன. ஜீவாத்மா என்ற பெயரிலும் இது வழங்கி வருகிறது. உலகில் உள்ள மதங்கள் ஆத்மாவை நம்புவதாக இருந்தாலும் உடலில் உறையும் உயிரையே 'ஆத்மா' என்கின்றன. ஆனால் இந்து மதம் உடல் வேறு, உயிர் வேறு, ஆத்மா வேறு என்று கூறுகிறது. ஆத்மா என்பது மனிதனுக்கும் கடவுளுக்கும் தொடர்புடையது என்றும், அது கடவுளையும் மனிதனையும் ஒன்று சேர்ப்பது என்றும், ஆத்மா செய்த குற்றத்திற்கு ஏற்ப பிறப்பு நிகழும் எனவும், இறந்த பின்பு சரீரத்தை விட்டு ஆத்மா பிரிந்து மறுபடியும் ஒரு சரீரத்தைப் பெற்று தண்டனை அடைகிறது எனவும் கூறுகிறது. இதனால் ஆத்மா பல ஜென்மங்கள், பிறவிகளுக்கு பிறகு இறைவனுடன் கலந்து இறவாத பேரின்பத்தை அடைகிறது எனவும் கூறுகிறது. அதாவது ஜீவாத்மா பரமாத்தாவுடன் இரண்டறக்கலந்து பேரின்ப நிலையில் மோட்சம் பெறுகிறது என்பதே இதன் விளக்கமாகும்.

கிறிஸ்தவ மதத்தில் ஆன்மாவைப் பற்றி குறிப்பிடுகையில், புதைக்கப்படுவது மனிதனின் சரீரம். ஆனால் அதனிலிருந்து மீட்டு எடுக்கப்படுவது அழிவில்லாத ஆன்ம சரீரம் என்கிறது. அத்துடன் ஆன்மாக்கள் உள்ளதென ஒப்புக்கொள்வதுடன் முன்பும் பின்பும் மறுபிறப்பு இல்லை எனவும் கூறுகிறது. எனவே கிறிஸ்தவ மதம் மறுபிறப்பை (Reincarnation) ஏற்றுக் கொள்ளவில்லை. அதுமட்டுமன்றி ஆத்மா பல பிறப்புக்களை எடுத்து கர்மத்தை அனுபவிப்பதில்லை எனவும் கூறுகிறது. மனிதனை இறைவன் தற்செயலாகத்தான் படைத்தான் எனவும் களிமண்ணால் உடம்பை படைத்து அதற்குள் ஆவியை ஊதி உருவத்துக்கு உயிர் கொடுத்தான். இந்த சேர்க்கையால் உடலும் உயிரும் உண்டானது எனவும் இந்த 'உயிரே ஆத்மா' எனவும் கூறுகிறது. இறப்புக்கு பின்பு, ஆன்மா இறைவனால் மோட்சம் அல்லது நரகம் புகச் செய்யப்படுகிறது எனவும் கூறுகிறது. முற்பிறப்பு, மறுபிறப்பு பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.



இஸ்லாமிய மதம் உடலில் உறைந்திருக் கும் உயிரையே ஆன்மா என்கிறது. சடலத்துக்கு மீண்டும் உயிர்கொடுத்து மரணக் குழியில் இறை தூதர்களால் விசாரிக்கப்பட்டு யுகமுடிவுக்கு பிறகு இறைவனால் சரியான தீர்ப்பு வழங்கப்பட்டு மோட்சம் அல்லது நரகம் அடைகிறது. அதாவது புவியில் தான் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப நரகத்தையோ, மோட்சத்தையோ அடைகிறது ஆன்மா. ஆன்மாவை ஏற்றுக் கொள்ளும் இஸ்லாமிய மதம், முற்பிறப்பையும் பிற்பிறப்பு அது எடுக்கிறது என்பதனை மறுக்கிறது.

யூதமதம் (Judaism) ஆன்மாவை ஏற்றுக் கொள்கிறது. ஆனால் அது அழிவுடையது என்கிறது. அத்துடன் 'எல்லா ஆசைகளை யும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள். இயன்ற அளவு இன்பத்தை பெருக்குங்கள். இறந்த பிறகு உங்கள் உடலம் புதைக்கப்படலாம். மரணம் எல்லாவற்றையும் அழித்து விடும் என்கிறது. அதேவேளையில் யூதர்களின் கடவுளான யோவான் கட்டளைப்படி வாழ்ந்தால் பூமியில் புதைக்கப்பட்டவுடன் இறைவன் தனது ஆவியை பிணத்தில் ஊதி உயிர் கொடுத்து தனது பரிவாரங்களில் ஒருவனாக் குகின்றான். யோவான் கட்டளைப்படி நடவாதவர்கள் புதைக்கப்பட்டவுடன் உயிர்த் தெழ மாட்டார்கள் எனவும் கூறுகிறது.

ஆத்மாவைப் பற்றி புத்தமதம் குறிப்பிடுகை யில் ஆன்மாவை மறுத்து உயிரை ஆன்மா என்றால், அது அருவம் எனில் உருவமாகிய உடம்போடு அது பொருந்தி இருக்காது. உயிரை உருவம் என்றால், ஓர் உருவத்துள் வேறு உருவம் அடங்காது. உயிரை அணுவென்றால் அது உடம்பிலுள்ள துவாரங்கள் வழியாக வெளியேறி போக வேண்டும். எனவே உயிர் அணுவோ, அருவோ, உருவவோ, நிந்தமோ அல்ல. எனவே ஆத்மா இல்லை என்று புத்தம் கூறுகிறது. உடல்முழுவதும் ஆன்மா உள்ளதென்றால் உடல் அழியும் போது ஆத்மாவும் அழிந்து போகிறது எனவும் கூறுகிறது.

ஆன்மா உண்டு என ஜெயன மதம் (Jainism - சமணமதம்) கருதினாலும் அதனை கடவுள் படைத்தார் என கூறவில்லை. அதேவேளையில் பெண் களுக்கு 40 ஆன்மாக்களும் ஆண்களுக்கு ஒரு ஆன்மாவும் உள்ளதென்று கூறுகிறது. கர்மத்தை அனுபவிக்க பல பிறவிகளை எடுக்கின்றது எனவும் கருதவில்லை. எனவே இந்தியாவில் தோன்றிய மதங்களுள் புத்தமதம் தவிர ஏனையவை ஆன்மாவை வலியுறுத்துகின்றன.

திபெத்திய மக்களது சமயம் பௌத்தம் எனினும், அது ஆன்மா அழியாது என கூறுவதுடன் ஆன்மாக்கள் பல என்கிறது. அது செய்யும் பாவ புண்ணியத்திற்கு ஏற்ப சொர்க்கமோ நரகமோ அடைகிறது எனவும் சொல்கிறது. ஆனால் பல பிறவிகள் எடுப்பதனை மறுக்கிறது.

சீக்கிய மதம் ஆன்மா உண்டு எனவும் மனிதர்கள் செய்யும் செயல்களுக்கு ஏற்ப பலன் பெறுகிறது எனவும் கூறுகிறது. பரிசுத்தமான ஆத்மாக்கள் கடவுளின் ஒளிப்பிழம்பில் ஒன்றி விடுகின்றான என்கிறது.

சீனாவில் உள்ள Taoism மதம் ஆத்மாவை இரண்டு என கூறுகிறது. அதனை Yang, Yin என பிரிக்கின்றனர். அதேவேளையில் எகிப்தியர்கள் ஆத்மாவை 'கா' என அழைக்கின்றனர். பொதுவாக எல்லா மதங்களிலும் ஆத்மாவைப் பற்றிய தெளிவு முழுமையாகவில்லை என்றே தெரிகிறது.

ஆங்கிலமொழியில் Jiva, Atma, Prusha, Self, Paramatman, Mind, Breath, Concioms, Sprit போன்ற பல சொற்களையும், கருத்துக்களையும் ஆத்மா கொண்டுள்ளது. தமிழ் மொழியில் ஆத்மா, ஆன்மா, உயிர், இயக்குமுதல், உணர்வாற்றல், மனம், அழியாக்கூறு போன்ற பல சொற்கள் பாவனையில் உண்டு. அத்துடன் நல்ல சங்கீதம் (Soul music) தலைமை தாங்குபவர் (The life and soul) நல்லவர் (Man of great soul), சான்றாண்மையின் உயிர் (The soul of honor) உயிர்மேல் ஆணை (Upon ones soul) நல்ல உணவு (Soul food) நல்ல விருப்பத்திற்குரியவர் (Soul Mate) நன்றாக சோதனையிடல் (Soul Searching) என்றெல்லாம் ஆத்மாவுக்கான வார்த்தைகள் மிக அதிகம்.

8 ஆம் நூற்றாண்டில் பழைய ஆங்கிலக் கவிதைகளில் Awol என்ற சொல் பாவனையில் இருந்துள்ளது. அதற்கு முன்பே இந்துக்கள் ஆத்மா பற்றி நிறையவே சிந்தித்துள்ளனர். Francis M Conford என்பவர் 'ஒருவர் நித்திரை செய்யும்போது ஆத்மா செயல்படுகிறது' (When one is Sleeping soul is active) என்று கூறுகிறார். உலகிலுள்ள மதங்கள் அனைத்தும் ஆன்மாவைப் பற்றி பல்வேறு அர்த்தங்களையும், கருத்துக்களையும் கொண்டுள்ளன. எனினும், பொதுவாக பல மதங்கள் ஆன்மா எல்லா உயிர்களிலும் உறைகிறது என்றும், அது செய்யும் நன்மை தீமைக்கு ஏற்றபடி சுவர்க்கமும் நரகமும் எய்துகிறது என்பதனையும் ஏற்றுக்கொள் கின்றனர். இந்து மதத்தில் மட்டும் உயிர் வேறு, உடல் வேறு, ஆன்மா வேறு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவே இன்னும் ஆய்வுக்குரிய பொருளாகும்.

விஞ்ஞானமும், மதமும் வேறுபட்ட, சிக்கலான ஆத்மாக் கோட்பாடுகளை கொண்டுள்ளன. நியூ டெல்கியில் உள்ள Research Center போன்ற பல உலக நிறுவனங்கள் ஆத்மா என்பது எது, எப்படி உள்ளது, எங்கே உள்ளது என்றெல்லாம் புதிய புதிய கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. பல கேள்விகளை 'ஆத்மா எதிர்ப்பாளர்கள்' முன்வைத்துள்ளனர்.

உடலுக்குள் ஆத்மா எப்படி வந்தது? ஏன் வந்தது? உடலை விட்டு எப்படி வெளியேறுகிறது? மனிதனுக்கு மட்டும் ஆத்மாவா? விலங்கினங்களுக்கு ஆத்மா உண்டா? விலங்கினத்துக்கு ஆத்மா இல்லையென்றால் மனிதனுக்கு மட்டும் ஏன் வந்தது? அறிவியல் ரீதியில் மனிதனும் ஒரு விலங்கு என்றால் எப்படி ஆத்மா செயல்படு கிறது. மனிதன் ஏனைய பிராணிகள் போல பிறப்பானா? பிராணிகள் மனிதன் போல மறுபிறப்பு எடுக்குமா? உடலை விட்டு பிரிந்த உயிர் தான் ஆன்மாவா? அல்லது வேறொன்றா? ஆவி, உயிர், ஆன்மா, ஆத்மா, மனம் எல்லாம் ஒன்றா? அல்லது வேறு வேறு என வினவுகின்றனர்.

பொதுவாக இந்து சமயத்தவர்கள் ஒருவர் இறக்கும்போது அவர் கடவுளின் பாதார விந்தத்தில் சேர்ந்து விட்டார், கடவுளுடன் இரண்டறக் கலந்து விட்டார். மோட்சம் சென்று விட்டார். (மோசம் போய்விட்டார்) இறைபதமெய்தி விட்டார் என்றெல்லாம் கூறுவர். பொதுவாக பிரிந்த உயிர் ஆவியாகி அலைகிறது. சொர்க்கம் சென்றுள்ளது. இன்னோர் உடலில் புகுந்துள்ளது. இயற்கையுடன் கலந்து விட்டது என்றும் எண்ணுகின்றோம்.

உயிரையே ஆத்மாவாக கொண்டால் உடலைவிட்டு உயிர் ஒன்று தனியாக பிரிகிறது எனவும் மனிதன் இறந்தவுடன் உயிர் அல்லது ஆத்மா தனியாகி விடுகிறது எனவும் கொள்ள முடிகிறது. Thanatology



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**


தொடர்ச்சி 34ஆம் பக்கம்

# அணிலும் எலியும்

ஒரு நாள் இரு நல்ல நண்பர்களான அணிலுக்கும் எலிக்கும் இடையே ஒரு வாக்குவாதம் ஏற்பட்டது. ஒரு முறை அணில் வெளியே செல்ல வேண்டும் என்பதற்காக தன் நண்பரான எலியை தன் வீட்டை பார்க்கும்படி கேட்டது. எலியும் சரி என்று கூறியது.

அடுத்த நாள் அணில் வந்து பார்த்த போது, வீட்டில் சேர்த்துவைத்திருந்த உணவு எல்லாம் திருட்டுப் போனதைக் கண்டு கோபப்பட்டது. அணிலும் பாதுகாப்புக்காக ஒருவருக்கும் உணவு வைத்த இடத்தை சொல்லவில்லை. எனவே அணிலுக்கு எலி மேல் சந்தேகம் ஏற்பட்டது. எலியோ, தனக்கு உணவு எங்கே இருந்தது என்று தெரியாது எனவும் அதை, தான் எடுக்கவில்லை என்றும் கூறியது.

எனவே இப்பிரச்சினைக்கு தீர்வு கேட்க அவை பக்கத்து வீட்டு ஆமையிடம் சென்றன. 'வீடு எலியின் பாதுகாப்பில் தான் இருந்தது. எனவே அவர் தான் திருடினார்' என்றது அணில். எலி, 'எனக்கு உணவு இருந்ததே தெரியாது! எப்படி நான் திருட முடியும்?' என்று கேட்டது.



ஆமை இருவரின் பேச்சை கேட்டு விட்டு கொஞ்ச நேரம் யோசித்தது. பின்னர் அது அணிலிடம் 'நீங்கள் எப்போது உணவை வைத்தீர்கள்?' என்று கேட்டது. அணிலோ, 'போன கிழமை தான் வைத்தேன்' என்றது. ஆமை, 'இதை யாராவது கண்டார்களா?' என்று கேட்டதும், அணில் யோசித்தது. 'வீட்டு ஜன்னல் வழியாக பக்கத்து வீட்டு காகம் நின்றதை கண்டேன்' என்று கூறியது. ஆமை சற்று யோசித்து விட்டு, அவர்களுடன் அக்காட்டில் வசிக்கும் காட்டுப் பூனையிடம் சென்று இதை விசாரிக்கும்படி கேட்டது.

காட்டுப் பூனை அணிலுடனும், எலியுடனும் சேர்ந்து காகத்தின் வீட்டிற்கு சென்றது. காகம் பூனையைக் கண்டவுடன் தயக்கப்பட்டது. 'அணிலின் உணவை திருடினாயா?' என்று பூனை காக்கையை கேட்டபோது, அது இல்லை என்று சொல்ல ஆரம்பித்தது. பின்னர் பூனையின் கோபமான பார்வையை கண்டவுடன் 'நான் தான் எலி படுக்கச் சென்ற பிறகு, அணிலின் வீட்டினுள் புகுந்து உணவை திருடினேன்' என்று உண்மையை கூறி, உணவு இருந்த இடத்தையும் காட்டி அதை அணிலிடம் திரும்ப கொடுத்தது.

இதை அணிலும் வாங்கிக் கொண்டு பூனைக்கு நன்றி கூறி, எலியிடம் மன்னிப்பு கேட்டது. இருவருமாக ஆமையிடம் நன்றி தெரிவிக்க சென்றன. ஆமை நன்றியை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு இவ்வாறு கூறியது. 'நண்பர்களில் ஒருவர் மற்றவருக்கு எதிராக ஏதாவது செய்தாலும் அன்பின் அடிப்படையில், நட்பு கொண்டவர் அவர்களது நட்பை விலக்கிக் கொள்ளமாட்டார்கள்.'

**நீதி - அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்**
**வழிவந்த கேண்மை யவர் - திருக்குறள்**



**ஞா. ஆரணி**
அகவை 15

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

Mortgage solutions
to suit your needs.



Sri T. Sridharan, AMP
Mortgage Development Manager

I'll help you find the mortgage suited to your individual needs.
Call me today and let's get started.

Toronto East and Durham
416-953-3297
tharma.sridharan@
scotiabank.com

Scotiabank®

® Registered trademark of The Bank of Nova Scotia.

# Education

## Review Tutorials 13-22

### ➢ PHYSICS 12

A solid iron ball of mass 900 kg is used on a building site. The ball is suspended by a rope from a crane. The distance from the point of suspension to the centre of mass of the ball is 15 m.

(a) Calculate the tension in the rope when the ball hangs vertical and stationary.
(b) The ball is pulled back 20° from the vertical and then released.
Calculate the speed of the ball just before impact, and the tension in the rope just before impact

(c) If the ball is brought to rest in 0.2 s., determine the maximum force $F_{max}$ exerted by the ball on the wall.

### ➢ CHEMISTRY 11

A. Determine the mass of salt deposit when 500g of saturated solution of $NH_4Cl(aq)$ at 70°C cooled to 50°C.

B. Determine the number moles of $Na^+$ and $NO_3^-$ in 0.04 mol/L 25 ml solution.

C. Determine the $Na^+$ and $NO_3^-$ concentrations after adding 25 ml, 0.05 M $Ca(NO_3)_2$ and 25 ml 0.03 M $Al(NO_3)_3$ in to the above solution in part (B).

D. Predict the most likely geometry
(i) $NO_3^-$ (ii) $NO_2^-$ (iii) $SO_4^{2-}$ (iv) $CO_3^{2-}$
(v) $I_3^-$ (vi) $CH_3^+$

E. Calculate the molarity of the hydrochloric acid solution 12% by mass. (density = 1.05g/mL)

### ➢ CHEMISTRY 12 & IB

1. (i) Calculate the $K_b$ value $N_3^-$ at 25°C ($pK_a$=4.72 at 25°C for $HN_3$)
(ii) Write equation for the hydrolysis of $N_3^-$
(iii) What is the pH of a 0.2 mol/L solution of sodium azide, $NaN_3$, at 25°C?

2. How many moles of NaOH must be added to 0.50 L of 0.18 mol/L $HC_3H_5O_3(aq)$ to obtain a solution with pH=4.8? Assume the temperature is 25°C. (For $HC_3H_5O_3$, $pK_a$=3.86 at 25°C).

### ➢ CHEMISTRY 12

What is the activation energy , $E_a$ for the overall reaction, A → D

| Elementary step | ΔH kJ/mol | Ea KJ/mol |
|---|---|---|
| A → B | 20 | 40 |
| B → C | 10 | 30 |
| C → D | -30 | 10 |

## Answer Key : 13-21

### CHEMISTRY IB/12

(1) (a) Rate = k $[NO]^1$ $[Cl_2]^1$
(b) $3.8 \times 10^{-2}\ mol^{-1}Ls^{-1}$

(ii) ΔH= -77.1kJ
(ii) $\Delta S^{\Theta}$ = -121.3J
(iii) increasing temperature do not affect the spontaneity of the reaction.

### PHYSICS 12

x and y components of impulses are Jx and Jy
$J_x = P_{f(x)} - P_{i(x)} = m(v_{f(x)} - v_{i(x)})$

= 0.16 [(60 cos 25) – (40)] = 15.1 kg.m/s

$J_y = P_{f(y)} - P_{i(y)} = m(v_{f(y)} - v_{i(y)})$
= 0.16 [(60sin25) – 0] = 4.057 kg.m/s

Magnitude of impulse $J = \sqrt{J_{(x)}^2 + J_{(y)}^2}$ = 15.63kg/m/s

$F = \frac{J}{\Delta t} = \frac{15.63}{0.0012} = 1.3 \times 10^4$ N

angle of impulse , tan ß= 4.057/15.1 = 0.2687; ß= 15°

### FUNCTIONS (GR 11)

$P(t) = -25t^2 + 250t - 400$

Solve for t when P(t) = 0; -25 ( t- 8) ( t-2) =0

t = 8 or 2; least number of toy-cars that should be sold to breakeven is 20,000

### ADV. FUNCTIONS

Prove , $\frac{2\tan x}{1+\tan^2 x} = \sin 2x$

$2\tan x = \frac{2\sin x}{\cos x}$

$1 + \tan^2 x = 1 + \frac{\sin^2 x}{\cos^2 x}$

$= \frac{\cos^2 x + \sin^2 x}{\cos^2 x} = \frac{1}{\cos^2 x}$

Therefore,

$\frac{2\tan x}{1+\tan^2 x} = 2\sin x.\cos x = \sin 2x$

(ii) $\log_a x = 3$ and $\log_a y = -2$, determine $\log_a(\frac{x^2}{y^3})$

$\log_a x - (\log_a y^3) = \log_a x - 3(\log_a y) = 11$

*Answer key 13-21, - next issue*
Contact: 647 341 3975
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

# ஆத்மா...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

என்ற ஆய்வு மூலம் மரணம் எப்படி நடக்கிறது என ஆய்கின்றனர். உயிர் நீங்குவது, இன்றியமையாத இயக்கங்கள் நின்று போவது, வாழ்க்கை முடிந்து போவது என்போம். பிறந்த அனைவரும் இறப்போம் என்பது நியதி. ஆனால் இயற்கையால், முதுமையால் நாம் இறந்து விடுகிறோம். அகால மரணங்கள், விபத்தால், யுத்தத்தால், புவி நடுக்கம் போன்ற இயற்கை அனர்த்தங்களால் நிகழ்வன. மூளை, இதயம், நுரையீரல் போன்ற முக்கிய உறுப்புக்கள் இயங்கும் வரையும், பிராணவாயு செயல்படும் வரையும் உயிர் இருக்கும். எனவே மரணம் நிகழும் போது உடல் இயக்கம் நின்று விடுகிறது. அதாவது உடல் இயக்கம், நாடித்துடிப்பு, இதயத் துடிப்பு, வியர்வை சுரப்பி நின்று போகலாம் எனினும், சில உறுப்புகள் சிலமணிநேரம் வாழும். இதனையே வைத்தியர்கள் மற்ற நோயாளிக்கு பயன்படுத்துவர். அதாவது மரணம் சம்பவித்து (Clinical Death) விட்டாலும் உயிர் சில மணிநேரம் வாழ்கிறது. எனவேதான் மரணம் நேர்ந்த பிறகும் ஆன்மா உள்ளது என்றனர். இதனாலேயே ஆய்வுக்குட்ட விடயமாக உள்ளது.



மனித இனம் சிந்திப்பதாகவும், விழிப்புடனும், இருப்பதால் நம்பிக்கையை அசையாமல் பாதுகாத்து வருகிறது. சுதந்திரமாக சிந்திப்பவர்களுக்கும் வழி சமைத்துள்ளது. மிகப்பெரும் சிந்தனையாளரான யு.ஜி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அணுக்களின் மாற்றமைப்புத்தான் மரணம், மனம் இல்லை. வெறும் உடல் தான் எம்முடையது, மாயையின் முடிவு தான் மரணம் என்கிறார். அதேவேளை நரம்பியல் விஞ்ஞானம், தத்துவம், உளவியல் யாவும் மூளை யின் செயல்பாட்டினை உறுதியாக நம்புகின்றது. அவர்களுக்குள் இருமுனை கருத்துக்கள் தொடர்கின்றன.

நவீன விஞ்ஞானிகள் உடலில் முக்கிய உயிர்வாயு (Vital gases in the body) இருப்பதாக கூறுகின்றனர். இதனால்தான் எந்த மதத்தினரும் ஆன்மாவை மறுப்பவர்களாக இல்லை. மரணத்தின் பின்பு அதற்கு என்ன நிகழ்கிறது என்பதிலேயே பல முரண்பாடுகள் உள்ளன. இதற்காகவே பாவம்-புண்ணியம், முற்பிறப்பு-பிற்பிறப்பு, மோட்சம்-நரகம், உயிர்-ஆவி என்றெல்லாம் சர்ச்சைகள் எழுந்துள்ளன. எவ்வளவு தான் ஆய்வுகள் நடந்தாலும் மரணச் சடங்கின்போது இறந்தவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம், மலர் அஞ்சலி செய்கிறோம், நினைவஞ்சலி உரை நிகழ்த்துகிறோம், மரணத்திற்கு பின்பு அவர் உயிரோடு வாழ்ந்த காலத்தில் அவர் கொண்ட கருத்துத்துகள் என்பவற்றினை சொல்லிக் கொள்கிறோம். தொடர்ந்து அந்தியேட்டி, திவசம் என்றெல்லாம் செய்கிறோம். அதாவது இறந்தவரின் ஆத்மாவை நாம் நினைவு கூருகின்றோம். புத்தர், இயேசு, வள்ளுவர், காந்தி போன்ற மகான்கள், மேதைகள், தலைவர்கள் இன்னமும் நம்மிடையே வாழ்வதற்கு அவர்களது நல்ல ஆத்மாக்களே காரணமாகும். ஏனைய உலக சமயங்கள் இந்து சமயத்தின் உண்மைகளை அறிய முனைகின்றார் கள் என்றால் இதில் உள்ள சில அடிப்படை உண்மைகளே காரணமாகும். மதம் என்று ஒன்று உள்ளவரைக்கும் ஆத்மா / ஆன்மா வாழ்ந்து கொண்டேயிருக்கும்.





PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE

AVAILABLE
FOR RENT
Starting from $100.00

Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting, புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய 50 பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு. GTA Square Mall (FINCH & MIDDLEFIELD) தொடர்புகளுக்கு: 416.917.6883

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji



### 100% Guaranteed Result

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனா பண்டித் Thulsidhar Swamiji சாஸ்திரிகள் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

* கைரேகை
* கல்வி, உத்தியோகம்
* வதிவிடப் பிரச்சினைகள்
* குடும்ப பிரச்சினைகள்
* குழந்தை பாக்கியம்
* எதிரிகள் பிரச்சினைகள்
* கர்ப்ப தோஷம்
* நாம நட்சத்திரம்
* தொழில் வியாபாரம்
* நீதிமன்ற வழக்குகள்
* திருமண யோகம்
* கணவன் மனைவி ஒற்றுமையின்மை
* சர்ப்ப தோஷம்
* கஸ்ட நஷ்டங்கள்

பிளெக் மஜிக் 3 நாட்களுக்குள் அகற்றி பாதுகாப்பு கொடுக்கப்படும்.

**Tel.:647.856.0559**

GTA Square Mall (2nd Floor)
5215 Finch Ave. E., Unit #257
Scarborough ON M1S 0C2
(FINCH & MIDDLEFIELD)

**Open 7 Days A Week, 10:00 am - 8:00pm**

# Lunch Box

ஒஸ்காரின் சிறந்த வெளிநாட்டு திரைப்படத்துக்கான தேர்விற்கு ஒவ்வொரு நாட்டில் இருந்தும் ஒரு படமே அனுப்பப்படலாம். இதற்கான போட்டிகள் ஒவ்வொரு நாட்டிலும் அதிகமாக உள்ளது. இம்முறை கனடாவில் இருந்து Gabrielle திரைப்படம் அனுப்பப்பட்டுள்ளது. Golden Globe என்ற மற்றொரு விருது தேர்வு போட்டிக்கு கனடா இரு படங்களை அனுப்பியுள்ளது. ஒஸ்காருக்கு செல்லும் படத்துடன் Another House படமும் அனுப்பப்பட்டுள்ளது. இம்முறை ஒஸ்காரில் பலத்த போட்டி நிலவுகின்றது. கடந்த பல வருடங்களில் இப்பிரிவின் இறுதி ஐந்து English Vinglish படமும் போட்டியிட்டது.

The Lunch Box படம் TIFF ல் திரையிட்ட போது பலத்த வரவேற்பை பெற்ற படம். இதற்கான காரணங்களில் முக்கியமானது கதை நடைபெறும் களம். நடுத்தர மக்கள் நெருசலாக வாழும் பகுதியில் உள்ள வேலைத்தளங்களே களம். இக்களத்தை மையமாகக் கொண்டு பல படங்கள் வெளி வந்துள்ளன. இப்படம் வெளிப்படுத்தியுள்ள யதார்த்த சம்பவங்கள் மனதில் வலியை ஏற்படுத்துகின்றன. மனைவியை இழந்து வேலையில் இருந்து ஓய்வு பெறப்போகும் நிலையில் உள்ள ஆணுக்கும், கணவனின்




படங்களின் வரிசையில் கனடிய படங்கள் பல தடவைகள் இடம் பெற்றுள்ளன. இங்கு கவனிக்க வேண்டிய விடயம் இப்படங்கள் அனைத்தும் பிரென்ஞ் மொழிப்படங்கள். கனடிய, பிரித்தானிய, அவுஸ்திரெலிய நியுசிலாந்து ஆங்கிலப் படங்கள் பிரதான போட்டியிலேயே போட்டியிட்டுவருகின்றன. அவுஸ்திரெலியாவில் இருந்து Lao மொழிப் படமான The Rocket கலந்துகொள்கின்றது. ஈரானில் இருந்து Separation திரைப்பட இயக்குனர் Asghar Farhadi இன் The Past மற்றும் சவூதி அரேபியாவின் Wadjda போன்ற படங்கள் சர்வதேச விமர்சகர்களின் வரவேற்பை பெற்றுள்ள படங்கள். ஒஸ்காரின் விழாவிற்கு முன்பாக கலந்து கொள்ளும் அனைத்துப் படங்களைப் பற்றி விரிவாக பார்க்கலாம். இம்முறை இந்தியாவில் இருந்து The Good Road குஜாரத்தி மொழிப்படம் ஒஸ்காரில் கலந்து கொள்கின்றது. The Lunch Box திரைப்படம் Golden Globe விருதுப் போட்டியில் போட்டியிடுகின்றது. குஜராத்தின் கிராமியப் பகுதியில் உள்ள நெடுஞ்சாலையில் சந்திக்கும் லொறிச் சாரதி, மத்திய வர்க்க தம்பதி மற்றும் பதினொரு வயது நிரம்பிய சிறுமி ஆகியோரை மைய மாகக் கொண்டுள்ளது The Good Road திரைப் படம். பலரும் விரும்பியதும் எதிர் பார்த்ததுமான The Lunch Box திரைப்படம் ஒஸ்காருக்கு தேர்வு செய்யப்படவில்லை. பிரபல வங்காள இயக்குனரும் ஒளிப்பதி வாளருமான கவுதம் கோஸ் தலைமையிலான 19 பேர் அடங்கிய குழு ஏகமனதாக The Good Roadஐத் தேர்வு செய்துள்ளது. தமிழ்நாட்டிலிருந்து விஸ்வரூபம், மலையாளப் படமான செலுலொயிட், ஆனந் காந்தியின் Ship of Theseus தெலுங்குப் படமான மிதுனம், கன்னடப் படமான லுசியா போன்ற விமர்சகர்களின் வரவேற்பைப் பெற்ற படங்களும் போட்டியிட்டன. இவற்றுடன்

அன்புக்காக ஏங்கி தாம்பத்திய வாழ்வில் ஏமாற்றத்தை சந்தித்துக் கொண்டிருக்கும் பெண்ணிற்கும் இடையில் ஏற்படும் உறவே இப்படம். இவர்கள் இருவருக்கும் ஒருவரை யொருவருக்குத் தெரியாது. அப்படியெனில் எப்படி? கணவனுக்கு அனுப்பும் மதிய உணவுப் பெட்டி தவறுதலாக ஓய்வு பெறப் போகும் அதிகாரிக்கு கிடைத்துவிடுகின்றது. அதன் பின்னர் ஏற்படும் கடிதத் தொடர்பு இவர்களது வாழ்வில் சிறு சலசலப்பையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. இவர்கள் சந்தித்துக் கொண்டார்களா? ஒருவரை யொருவர் அறிந்தார்களா? என்பதே இறுதிப் பகுதி.

அவதானத்துடனும் இயல்பாக அமைக்கப் பட்டுள்ள திரைக்கதை இப்படத்தின் ஒரு பாத்திரமாகவே வெளிப்படுகின்றது. ஓய்வு பெறப்போகும் அதிகாரியாக தனிமையில் வாழும் மனிதராக இர்பன் கான் மிகச் சிறப்பாக நடித்துள்ளார். அன்பிற்கு ஏங்கும் மனைவியாக நிர்மற் கவுர் இயல்பாக நடித்துள்ளார். ரிட்டேஸ் பத்திராவிற்கு இது முதல் படம். ஏற்கனவே சில குறும் படங்களை இயக்கியுள்ளார். இப்படங்கள் சர்வதேச திரைப்படவிழாக்களில் விருதுகளை யும் பெற்றுள்ளன. நல்லதொரு கதைசொல்லியாக மிளிரும் இவர் டப்பாவால-ாக் களை (dabbawalas) ப் பற்றி ஆய்வுகள் செய்த பின்னரே திரைக்கதையை அமைத்துள்ளார். மும்பை போன்ற பெரு நகரங்களில் டப்பாவாலாக்கள் தொழிலை பலர் செய்து வருகின்றனர். இப்படம் இவர்களது தொழில் முறையையும் அவர்கள் சந்திக்கும் இன்னல்களையும் கூட வெளிப்படுத்தியுள்ளது. யதார்த்தமாகவும் இயல்பாகவும் திரைப்படத்தை நகர்த்தி யுள்ளார் இயக்குனர். Mr and Mrs Iyer படமும் இப்படத்தை போன்றுள்ள மற்றொரு படம். பேருந்துப் பயணத்தில் ஏற்படும் ஒரு நட்பு அடுத்த கட்டத்தை நோக்கி நகரும் முன் இறங்க வேண்டிய இடம் வந்து விடுகின்றது. இப்படம் அப்படம் போன்றுள்ளது.

சர்வதேசத் திரைப்படவிழாக்களுக்கு இப்படத்தின் களம் புதியது. சொல்லப்படும் விடயமும் புதிது. கூறப்படும் முறையும் வித்தியாசமானது. இதனால் இப்படம் இங்கு வரவேற்பைப் பெற்றுள்ளது. தென்கிழக்கு ஆசியாவைப் பொறுத்தவரை இதில் வரும் இரு பிரதான பாத்திரங்களையும் ஒவ்வொரு சமூகத்திலும் காணலாம். அவர்களுக்கு இப்படம் புதிதாக என்ன விடயத்தை கூறியுள்ளது என்ற கேள்வி எழுகின்றது. இயல்பாக படமாக்கப்பட்டுள்ள ஒரு படம். இவ்வருடம் வந்துள்ள மற்றொரு படம் B.A Pass. கவர்ச்சிப் படம் என்ற வகையில் இப்படம் கூறியுள்ள விடயம் மக்களை சென்றடையவில்லை. Delhi Noir சிறுகதைத் தொகுப்பில் உள்ள ஒரு சிறுகதையே இப்படம். சிறுகதைத் தொகுப்பு பல நூலகங்களில் உள்ளன. இப்படத்தின் கதையமைப்பு பாராட்டுக்குரியது. திரைக் கதையாசிரியரும் இயக்குனரும் கத்திமேல் நடப்பது போல் நடந்துள்ளார்கள்.

# B.A Pass

ஹொலிவூட்டில் சுயாதீன திரைப்படப் படைப்பாளிகள் என சிலரை குறிப்பிடுவர். இவர்களிடம் பல நல்ல திறமைகள் புதைந்து இருக்கும். இவர்கள் தங்களது படங்களை தாங்களே தயாரிப்பார்கள். சில சமயங்களில் இரண்டாவது அல்லது மூன்றாவது படத்தின் பின்னர் அவர்களை தேடி பிரபல அல்லது பெரிய தயாரிப்பாளர்கள் வருவார்கள். இவ்வாறானவர்கள் இந்தியாவிலும் உண்டு. தமிழில் கூட பல படங்கள் விநியோகிக்க முடியாமல் இருப்பதற்கு பெரிய பெயர்கள் இல்லை என்பதை காரணமாகக் கூறுவார்கள். அப்படியிருந்தும் சில படங்கள் "ஒரு தலை ராகம்" போன்றவை வர்த்தக ரீதியாக வெற்றி பெற்றுள்ளன. அவ்வாறான ஒரு சுயாதீன படைப்பாளியான அஜய் பாயின் (Ajay Bahi) படம் B.A Pass. அஜய் தானே சினிமாவைக் கற்றுக்கொண்டு திரைப்பட உலகத்திற்கு வந்துள்ளார். கல்கத்தாவில் பிறந்து சம்பியாவ-ில் வளர்ந்து இந்தியாலில் கல்வி கற்று தற்சமயம் நியுயோர்க் மாநகர புறுக்கிளினில் வசித்துவரும் மோகன் சிக்காவின் (Mohan Sikka) ஆங்கில சிறுகதையான The Railway Aunty சிறுகதையை மையமாகக் கொண்டு இப்படத்தை எடுத்துள்ளார் அஜய். இதில் இணைத் தயாரிப்பாளராகவும் இயக்குனராக வும் ஒளிப்பதிவாளராவும் அஜய் உள்ளார்.

ஒரு பஞ்சாபி குடும்பத்தில் பிறந்து வளரும் மோகனின் பெற்றோர் விபத்தொன்றில் உயிர் இழந்து விடுகின்றனர். வயோதிப தாத்தா பண உதவி செய்வதாக உறுதியளித்த பின்னர் உறவினர் ஒருவரின் டெல்லி வீட்டில் தங்கி பி.ஏ படிக்கின்றார். இவரது இரு சகோதரிகளும் ஊரில் தங்கிவிடுகின்றனர். டெல்லியில் பல்கலைக்கழகம் போகும் நேரம் தவிர்த்து வீட்டில் சித்திக்கு உதவியாக உள்ளார். சித்தி வீட்டில் நடைபெற்ற விருந்தொன்றில் சரிகா இவரைக் காண்கின்றார். சித்தியின் கணவர் சரிகாவின் கணவரின் கீழ் வேலை செய்கின்றார். சரிகா ஒரு கூடை அப்பிள் வீட்டில் உள்ளது மோகனை அனுப்பி பெறுமாறு அடிக்கடி வற்புறுத்துகின்றார். சித்தியின் தொல்லை தாங்காமல் அங்கு செல்லும் மோகனை தன்னுடன் உறுவு கொள்ளுமாறு சரிகா வற்புறுத்துகின்றார். இது தொடரும் போது ரியுசன் கொடுப்பதாக கூறி வீட்டில்

**வானரன்**

சமாளிக்கின்றார். மோகனின் தாத்தாவும் இறந்து விடுகின்றார். இப்பொழுது மோகனுக்கு பணம் தேவை. விடுதியில் விடப்படும் சகோதரிகளையும் டெல்லிக்கு அழைக்கவேண்டும். மத்திய மேல் தட்டு வர்க்கத்துக்கு பெண்கள் சரிகாவினால் மோகனுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றனர். மோகன் இவர்களின் பாலியல் தேவைகளை பூர்த்தி செய்கின்றார். ஒரு கட்டத்தில் சரிகாவ-ின் கணவனுக்கு இது தெரியும்போது மோகன் உறவினர் வீட்டில் இருந்தும் விரட்டப்படுகின்றான். மோகனுடன் சதுரங்கம் விளையாடும் நண்பனின் வீட்டில் தங்குகின்றான். சகோதரிகள் டெல்லிக்கு இவனிடம் வரவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள். இவனது நண்பன் சரிகாவிடம் இருந்த இவனது பணத்தைப் பெற்று மொரீசியஸ் சென்று விடுகின்றான். வீதியில் பாலியல் தொழில் செய்ய நின்ற போது பணக்கார இளைஞர்கள் சிலர் இவனை காரில் ஏற்றிச் சென்று வன் புணர்வு செய்கின்றனர். பணமும் கிடைக்காமல் காயத்துடன் வீடு திரும்புகின்றான் மோகன். கோபத்தில் சரிகாவின் வீடு சென்று தனது பணத்தை கேட்கும்போதுதான் தனது நண்பன் தன்னை ஏமாற்றியது தெரிகின்றது. சரிகா மோகனுடன் உறவு கொள்ளும் போது சரிகாவின் கணவன் வந்துவிடுகின்றார். இறுதியில் சரிகாவை கத்தியால் குத்திவிட்டு தப்பிவிடுகின்றான். இவனது சகோதரிகள் டெல்லி பேருந்து நிலையத்தில் காத்து நிற்கின்றனர். இவன் பொலிசிடமிருந்து தப்பி ஓட முயற்சிக்கின்றான். ஒரு உயர் கட்டிடத்தில் பொலிஸ் மோகனை சுற்றி வளைத்து விடுகின்றது. மோகன் அங்கிருந்து குதித்து இறந்து விடுகின்றான்.

இன்றைய பொருளாதாரச் சூழலில் பெரு நகரங்களில் உள்ள உறவுச் சிக்கல்கள் அடித்தட்டு வர்க்கத்தினரை பந்தாடுகின்றது. மோகனும் அவனது சகோதரிகளும் அவ்வாறு பந்தாடப்படுபவர்களே. நிராதரவாக பேருந்து நிலையத்தில் நிற்கும் சகோதரிகளும் மோகனைப் போல் பாலியல் தொழிலுக்கே தள்ளப்படுவார்கள். மேல் தட்டு வர்க்கத்தினர் தங்களது தனிமையைப் போக்கவும் மோகனைப் போன்றவர்களை நாடுகின்றனர். பெருகிவரும் மத்திய வர்க்கத்தினர் மத்தியில் உள்ள பாலியல் தேவைகள் கலாச்சார கூறுகளை மறு மதிப்பீடு செய்யும் அதே சமயம் இவ்வர்க்கம் செய்யும் பாலியல் கொடுமைகளை தோலுரித்து காட்டுகின்றார் இயக்குனர். எதற்கும் ஒரு விலை உண்டு. அதன் பின் உறவுகள் இல்லை. இவ் உலகில் மோகன் போன்றவர்கள் பலிக் கடாக்களே. படம் வயது வந்தவர்களுக்கு மட்டுமே. படத்தில் பல காட்சிகள் சிறுவர்களுக்கு உகந்ததல்ல. இவ்விடயத்தை மட்டும் சற்று கட்டுப்படுத்தியிருந்தால் படம் இந்தியாவில் பரவலாக மக்களை சென்றடைந்திருக்கும். இப்பொழுது இப்படம் பல சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்படுகின்றது. இதில் மோகனாக நடித்த Shadab Kamal ம் சரிகாவாக நடித்த சில்பா சுக்லாவும் சிறப்பாக நடித்துள்ளனர்.

# சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதிருங்கள்

**குவர்னிகா - யாழ். இலக்கியச் சந்திப்பு மலரில் வெளியானது**

இப்பொழுதும் எங்களின் பெரிய பிரச்சனை எதை மறப்பது, எதை நினைப்பது என்பதுவே. இறந்தவர்கள் யார், இருப்பவர்கள் யார் என்று இன்னும் கணக்கெடுத்தே முடியவில்லை. கணக்கெடுக்கப் போகின்றவர்களே காணாமற் போகும் காலம் தொடர்கின்றது.

ஒன்று, இரண்டு என்று தொடங்கி அது பத்து இருபதாகி இன்று லட்சங்களைத் தாண்டிய இழப்பு. இருக்கின்றார்களா? இல்லையா என்ற வலி எல்லா ஈழத்தமிழர்களையும் மனநோயாளிகளாக மாற்றியுள்ளது.

எனது மக்கள் எல்லாவற்றையும் மறந்து விட்டார்கள் என்று யார் சொன்னது? நான் இங்கு நினைவு கூரும் மனிதர் ஒரு கத்தோலிக்க மதகுரு. பலரால் அன்பு செய்யப்பட்ட மனிதராக மட்டுமல்லாமல் பலரை அன்பு செய்த மனிதராகவும் அவர் இருந்தார். மனித உரிமைப் பணிகளின் முன்னோடி அவர். நீதிக்காகத் தன் உயிரை தெரிந்தே பலியிட்டவரவர்.

**◊ செல்வம் அருளானந்தம் ◊**

யாழ்ப்பாண வெயில் கொடுமையாக எரிந்து கொண்டிருந்த ஒரு மத்தியான நேரத்தில் தன் தாயாரைப் பார்க்கப் போவதற்காய் யாழ். பஸ் நிலையத்தில் அந்தக் குரு மாணவன் காத்திருக்கின்றான். திடீரென இலங்கை இராணுவத்தின் சுற்றி வளைப்பு, கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம். கழுத்திலே குண்டடிபட்டு இவன் நிலத்திலே வீழ்ந்து கிடக்கின்றான். வழமைபோலவே இராணுவத்தினர் இறந்தவர்களைத் தூக்கி எறிந்து விட்டு, காயம்பட்ட இளைஞர்களை தங்களது வாகனங்களில் தூக்கி எறிகின்றார்கள்.

இலங்கை வானொலியின் இரவுச் செய்தியில் எட்டு புலிகளைக் கொன்றுவிட்டு இருபது புலிகளைப் பிடித்து விட்டோம் என்று சொல்ல வேண்டும் அல்லவா. குரு மாணவன் எறியப்பட்டது ஒரு பீரங்கி வண்டியில். முன்னால் பீரங்கி வண்டியை ஓட்டியபடி ஒரு இராணுவ வீரனும் பின்னால் இவனுக்குக் காவலாக இன்னொரு இராணுவ வீரனும் இருந்தார்கள். கழுத்தில் இரத்தம் வழிந்தபடி அரைமயக்கத்தில் இவன். யாழ். நகரில் இருந்து பலாலி இராணுவ முகாமை நோக்கி பீரங்கி வண்டி சென்றுகொண்டிருக்கின்றது.

பின்னால் இருந்த இராணுவ வீரன் இவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கின்றான். அவனை மட்டுமல்ல, அவனுடைய கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த சிலுவையையும் இராணுவ வீரன் பார்த்தான்.

இராணுவ முகாமுக்குப் போனவுடன் இவனுக்கு ஏதாவது மருத்துவ உதவி செய்வார்கள், புலி என்று சொல்வார்கள், அப்படியில்லையென்றால் சித்திரவதை



செய்து புலியென ஒத்துக்கொள்ளப் பண்ணுவார்கள் அல்லது கொன்று புதைப்பார்கள். அந்த இராணுவ வீரன் இதைப்போல் எத்தனையையோ பார்த்து விட்டான். இவனுக்கு சுயநினைவு திரும்புகின்றது. கழுத்துக் காயத்தால் அவனால் பேச முடியவில்லை. கழுத்தில் வடியும் இரத்தத்தைத் துடைக்கின்றான். பேச முடியவில்லை. சட்டைப்பையில் இருந்த செபமாலையை எடுத்துத் தனது நெஞ்சில் வைத்துக் கொள்கின்றான். மரணத்திற்கு மிக அண்மையில் தான் இருப்பதை உணர்ந்து கொண்டு "அருள் நிறைந்த மரியே... இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும்..." என அவனது வாய் முணு முணுக்கின்றது.

அப்போது இவனையே பார்த்துக் கொண்டிருந்த அந்த இராணுவ வீரன், இவனை நோக்கி "வாயைப் பொத்திக் கொண்டு செத்தவன் போல கிட" எனச் சைகை செய்கின்றான். அந்த இருவருக்குமே ஒருவருடைய மொழி இன்னொருவருக்கு தெரியாது. ஆனால் அற்புதம் என்னவென்றால் பேசாத, இல்லாத மொழியில் பேசிக் கொண்டார்கள். இராணுவ வீரன் இவன் இரத்தத்தைத் துடைத்துக் கொண்டே வாகனம் ஓட்டிக் கொண்டிருந்தவனிடம் சொல்கின்றான் "மாத்தயா இவன் இறந்துவிட்டான்".

"அப்போ என்ன செய்வது? செத்தவனைக் கொண்டு போய் மேலதிகாரியிடம் திட்டு வாங்க முடியாது."

"பிணத்தைத் தூக்கி எறிந்து விட்டுப் போய்விடுவோம்"

"நான் வாகனத்தை நிறுத்துகின்றேன், தூக்கி எறிந்து விட்டு வா!"

வாகனம் நிற்கின்றது. அந்த இராணுவ வீரன் இவனைத் தன்னோடு அணைத்துத் தூக்கிப் பாதையோரம் இருந்த ஒரு பற்றை அருகே கிடத்துகின்றான். பின் ஏதோ யோசனை வந்தவனாக, குரு மாணவன் காலில் அணிந்திருந்த சப்பாத்தைக் கழற்றியெடுத்து அதை அவனது தலைக்கு அணையாக வைத்துத் தலையை கோதி விடுகின்றான். அதன்பிறகு தயக்கத்துடன் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே அந்த இராணுவவீரன் வாகனத்தில் ஏறி மறைந்தான்.

யாழ். பஸ் நிலையத்தில் இவன் சூடுபட்டு விழுந்ததைக் கண்ட இவனது ஊரைச் சேர்ந்த ஒருவர் இவன் செத்துவிட்டான் என இவனது குடும்பத்திற்கு அறிவிக்க குடும்பத்தவர்கள் செத்தவீடு கொண்டாடுகிறார்கள்.

-

ஆனால் மறுபடியும் அவன் உயிர் மீண்டான். தாஸ்தயேவ்ஸ்கி மரண தண்டனையில் இருந்து தப்பியபோது நினைத்த மாதிரி, இது இன்னொரு பிறப்பு என உறுதியாக நம்புகின்றான்.

"என்னைப் பின் தொடர்ந்து வா" என இவனைத் தொடர்ந்த குரல் எப்போதும் இவனுடனேயே இருந்தது. இயேசுவுக்காகவும் மக்களிற்காகவும் தனது இரண்டாவது பிறப்பை முழுமையாக அர்ப்பணித்தான்.

***

யாழ்ப்பாணத்தின் கரவெட்டி கிராமத்தில் 1951ம் வருடம் ஏப்ரல் 12ம் தேதி வண. கருணாரத்தினம் அடிகள் பிறந்தார். பத்துப் பேர் கொண்ட குடும்பத்தில் அவர் நான்காவது குழந்தை. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற அடிகளார் ஆங்கில மொழியில் சிறப்பான தேர்ச்சி பெற்றவராக இருந்தார்.

ஆங்கிலத்தை மாணவர்களிற்குப் போதிப்பதையே முதன்மையான பணியாகச் செய்தார். ஆங்கிலம் என்ற ஜன்னல் இல்லாமல் வெளி உலகைப் பார்ப்பதற்குச் சிரமப்படுவீர்கள் எனத் தனது மாணவர்களுக்கு அடிக்கடி சொல்வார். சூழலியல் மீது மிகுந்த அக்கறையுடனிருந்த அடிகளார் தனது சொந்தச் செலவில் மாணவர்களைச் சுற்றுலாக்களுக்கு அழைத்துச் சென்று, "பறவைகள் மீதும் தாவரங்கள் மீதும் நாங்கள் அக்கறை கொள்ளவேண்டும். கடற்கரைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அது பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் முருகைக் கற்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு ஒரு இயக்கமே நாம் தொடங்க வேண்டும்" என அடிக்கடி சொல்வார்.

1978ம் வருடம் தனது தந்தையை இழந்த பின்பு, குடும்பச் சூழ்நிலை நிமித்தமாக "இலங்கை மக்கள் வங்கி"யில் பணியில் அமர்ந்தவர், 1983ல் தமிழர்களின் மீதான இன அழிப்பைக் கண்ணுற்று மனமுடைந்து தனது வேலையைத் துறந்தார்.

"என்னைப் பின்தொடர்ந்து வா" என்ற குரல் இப்போது அவரை முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்கிறது. மக்களுக்குச் சேவை செய்வதற்கான வழியை அவர் வரித்துக் கொள்கிறார்.

கொழும்புத்துறை புனித மார்ட்டின் குருத்துவக் கல்லூரியில் இவர் சேரும்போது இவரது இளைய சகோதரர் கலாநிதி வண. ஞானரத்தினம் அடிகள் குருநிலைப் பட்டத்தைப் பெற்றுவிட்டார். ஞானரத்தினம் அடிகள் இப்போது ரோமாபுரியில் பணியாற்றுகிறார்.

1989ல், தன்னுடைய 38வது வயதில் கருணாரத்தினம் அடிகள் குருவாக நிலை உயர்த்தப்பட்டார். இரணைதீவு, வலைப்பாடு, தாளையடி, மல்லாவி, பளை, வவுனிக்குளம் போன்ற பின்தங்கிய கிராமங்களில் பங்குக் குருவாகத் தனது பணியை கருணாரத்தினம் அடிகள் செய்தார்.

-


பின்பு வெரித்தாஸ் வானொலியின் செய்திப் பிரிவில் கடமையாற்றிய அடிகளார் இலங்கையில் இன ரீதியாகச் சிறுபான்மைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்துத் தொடர்ச்சியாக வானொலி மூலம் வெளியுலகிற்குத் தெரியப்படுத்திக் கொண்டேயிருந்தார். 2004ம் வருடம் மனித உரிமைக்கான North East Secretariat on Human Rights (NESOHR) என்ற அமைப்பை உருவாக்கியதன் மூலம் அடிகளார் இலங்கை அரசின் கடும் சினத்திற்கும் கண்காணிப்பிற்கும் ஆளானார்.

பனையால் விழுந்தவனை மாடு ஏறி

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

AMBIHA SILK (Fancy Jewellery)
FINCH & MIDDLEFIELD


இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம், மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
அழையுங்கள்: 416.297.5261

GO 4 PIZZA & WINGS

Medium 1 Topping pizza - $4.99
Walk-in Specials : Large 3 Topping Pizza - $8.99
Contact: 416.208.6115
Monday: Large Pizza - (3 Toppings, 1 Large Fries, 1 - 2L Pop, 1 Free Dipping Sauce) - $14.99
Tuesday: Wings & Pizza - (Large pizza, 3 Toppings, 12 Wings, Walk-in only) - $15.99
Wednesday: Family Special - (Large pizza 3 Toppings, 3 Cans of Pop, 15 wings, 2 free dipping sauce) - $21.99


நகைச்சுவைத் தொடர் 277


# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நிசன்




1. சர்வதேச எயிட்ஸ் தினம்
3. சர்வதேச ஊனமுற்றோர் தினம்
5. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (தமிழ் உரைநடையின் தந்தை)
9. திருவெம்பாவை
9. உலகின் (கனடாவில்) முதல் 24 மணிநேர வானொலி கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் பரீட்சாத்த ஒலிபரப்பு ஆரம்பம் (1995)
9. அனைத்துலக ஊழல் எதிர்ப்பு தினம் (2003)
10. மனித உரிமைகள் நாள்
11. சுப்பிரமணிய பாரதியார் ஜெயந்தி

















அறியாமையோடு நூறு ஆண்டுகள்
வாழ்வதைக்காட்டிலும் அறவுடன் ஒருநாள் வாழ்வது மேல் - புத்தர்


உலகர் அமைதியாக யோசித்துகொண்டிருந்தால் அதற்கு ஆயிரம் அர்த்தம் இருக்கும்.... விளக்கம் சொல்லத் தொடங்கினால் பழைய கதைகள் புராணங்களை இலக்கிய ஆசிரியர்கள் படிப்பிப்பது போலிருக்கும். ராமாயணம் பாரதம் கேட்டது போலிருக்கும். நீண்ட பெருமூச்சொன்றை விட்டபடி உலகர் சொன்னார்...



முன்னைய அரசர்கள் அரண்மனை வாசலில் ஆராய்ச்சி மணி வைப்பார்கள். மக்கள் தங்கள் குறைகளைச் சொன்னால் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள். அரசர்கள் குறைகளைத் தீர்த்து வைப்பார்கள். செக்கண்ட் புளோர் செல்லம்மாவும் பிராங்பேட் பேரம்பலமும் உலகர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.



ஆனால் செக்கண்ட்புளோர் செல்லம்மா ஆல் இன் அழகுராஜாவில் காஜல் அகர்வால் சிரிப்பது போல சிரித்துவிட்டு சொன்னா பேரம்பலன்னை உலகண்ணை நியூஸ் கேக்கிறேல்லைப்போல...



வடக்குக் கிழக்கிலை மாவீரர் தினத்துக்கு கோயில்களிலை அந்த நேரத்திற்கு மணியடிக்கக் கூடாதெண்டு சட்டம் போட்டிருக்கினம்....

இப்போ உலகர் நவரச நடிகர் வினுச்சர்க்கரவர்த்தி சிரிப்பதுபோல சிரித்துவிட்டு சொன்னார்,
இலங்கை அரசு உலகநாடுகளுக்குப் பயந்து ஒளிக்கின்றது.
உலக நாடெல்லாம் எங்கள் தமிழ் ஒலிக்கிறது..... அது கணோதோ என்று கேட்க பிராங்பேட் பேரம்பலம் தன்னை மறந்து கைதட்டிவிட்டார்.



"மலை சாய்ந்து போனால் சிலையாகலாம்"
மனிதன் வாழும்போதுதான் பல தடவை இடம்பெயர்கிறான் என்றால் வைத்த சிலைகளைக்கூட அரசியல் காரணத்துக்காக இடம்பெயரச்செய்கிறார்கள். நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் சிலையை இடம்மாற்றுவதற்கு நடவடிக்கைகளும் அதனால் சர்ச்சைகளும் உருவாகி லண்டன் பி.பி.சி வரை போய்விட்டது.

நினைவுச் சின்னங்களை உடைப்பது தகர்ப்பது
சீப்பை எடுத்து ஒளித்தால் திருமணம் நின்றுவிடும் என்பது போல மாவீரர் தினத்தன்று ஆலயமணிகளே ஒலிக்கக்கூடாதென்று ஒளித்திருந்து சட்டம் போட்டாலும்...
உலகம் முழுவதும் எழுச்சியாக மாவீரர் தினத்தை கொண்டாட வழி சமைத்துள்ளது.




ஆசையே துன்பத்துக்கு காரணம் இது புத்தர் சொன்னது. மாவீரர் தினத்துக்கு ஆலயமணிகள் ஒலிக்கக்கூடாதென்பது அரசின் ஆசை அந்த ஆசையே அவர்களின் துன்பத்துக்கு காரணமாக இருக்கலாம்.

ஆட்டிலறி அன்னம்மா அமைதியாக வந்து இருக்கும்போதே... உலகருக்கு தெரியும் சர்வதேசப் பிரச்சினையில்லை...ஆனால் ஆட்டிலறி அன்னம்மாவைப் பொறுத்தமட்டில் மேயர் றொப் போட்டின் பிரச்சினையைவிட பெரிய பிரச்சினையாகத்தான் நினைப்பா... நாளொரு பிரச்சினை பொழுதொரு கலாட்டாவாக.. றொப்போட்டின் பிரச்சினை ஓடிக்கொண்டிருக்கிறது. (சேலில் வாங்கிய) வெங்காய பாக்கினுள் நாயை எறிந்து கலைக்கக்கூடிய அளவு 2 கல்லு. நல்ல காலம் நான் கண்ணாடி போட்டபடியா கண்டன். இல்லாட்டி அதையும் வெட்டியிருப்பன் எண்டா ஆட்டிலறி அன்னம்மா. கலப்படம் என்பது காலம் காலமாக நடப்பது. பப்பா பழ விதை மிளகில், அரிசியில் கல்லு, கூடிய விலையுள்ள எண்ணையில் விலை குறைந்ததை கலப்பது இப்போ.. வெங்காயத்துக்குள் நிறைக்காக கல்லைக் கலக்கிறார்கள் என ஆட்டிலறி அன்னம்மா அமளிதுமளிப்பட்டா.



கோயில் யானை எல்லோராலும் பழகி மதிக்கப்பட்டு என் நேரமும் பழங்களும் வேறு உணவு வகைகளும் எப்போதும் கிடைக்கிறது. ஆனால் மதம் பிடித்ததும் ஒருவரும் கிட்டப்போகமாட்டார்கள். சங்கிலியால் கட்டி விடுவார்கள். அதேநிலை தான் றொப் போட்டின் நிலமை என சிரித்துக்கொண்டு சொன்னா ஆட்டிலறி அன்னம்மா.



நினைக்கமுடியாத குளிர் ஆரம்பித்துவிட்டது. ஏதோ உலகர் குழாம் ரூபன் ரூபி எல்லோரும் மாவீரர் தினத்திற்கு போய் வந்துவிட்டனர்.



மார்கழி மாதம் மதி நிறைந்த நன்னாளால் நீராடப்போதுவீர். போதுமினோ .....ஆம் திருவெம்பாவை. ஆண்டாளின் திருப்பாவை பாடத்... தொட்டும்போதே உடம்பு குளிர்கிறது. மார்கழி மாதம் பனி நிறைந்த நன்னாளில்...யார் வெளியில் செல்வது?

டிசம்பர் 1 - 15

# சீவியத்தில்...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

மிதித்தது போல் சுனாமிப் பேரழிவு தமிழ் மக்களைத் தாக்கியது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வவுனிக்குளத்தில் வீடுகள் கட்டிக் கொடுத்ததுடன் மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனது அரவணைப்பாலும் போதனையாலும் அடிகளார் ஆறுதலளித்து வந்தார். அநாதைக் குழந்தைகளுக்காக ஆசிரமம் அமைத்து அதன் பாதுகாவலராகவும் விளங்கினார்.

தமிழர்கள் மீது இலங்கை அரசு கடைப்பிடித்த இனவாதக் கொள்கைக்கு எதிராக அடிகளார் உறுதியுடன் போராடினார். மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் காலம் சென்ற யோசப் பரராசசிங்கத்துடன் ஜெனிவா வரை சென்று தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் பாடுகளையும் அனைத்துலக அரங்கில் அடிகளார் கவனப்படுத்தினார். இதன் காரணமாகவே யோசப் பரராசசிங்கம் இலங்கை அரசின் கூலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வன்னிக்கு வந்த வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டு அடிகளார் நிலமைகளின் கொடூரத்தை ஆதாரங்களுடன் விளக்கிக்கொண்டேயிருந்தார். 2006ல் வானொலி ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் இலங்கை அரசைக் கடுமையாக விமர்சித்த அடிகளார், ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக ஒரு குழுவை ஏற்படுத்தி, இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

அடிகளாரின் குரல் இலங்கை அரசுக்கு மேலும் மேலும் இடைஞ்சலாகவே இருந்தது. கனடாவில் இருக்கும் அடிகளாரின் சகோதரி அடிகளாரைத் தொடர்புகொண்டு இலங்கை அரசின் கொலைக்கரங்கள் குறித்துத் தனது அச்சத்தைத் தெரிவித்த போது "அது எப்போதோ முடிந்த முடிவு. அரசாங்கம் என்னைக் குறி வைத்துவிட்டது, கவனமாக இருப்பது என்பதை விட எனக்கிருக்கும் குறைந்த காலத்தைப் பயன்படுத்தி எம் மக்களுக்கு இழைக்கப்படும் துன்பங்களைக் குறைக்கப் பாடுபடுதலே எனக்கு முக்கியமானது" என்றார் அடிகளார்.

அடிகளாரை அவர்கள் அதிக காலம் விட்டு வைக்கவில்லை. 2008ம் வருடம் ஏப்ரல் 20ம் தேதி, ஞாயிறுப் பலியை ஒப்புக் கொடுத்த பின்பு, அரசாங்கத்தால் கொல்லப்பட்டிருந்த சிவநேசனினின் 45வது நினைவுநாளில் கலந்து கொள்வதற்காகச் சென்றபோது விளாங்குளம் என்னும் பகுதியில் குழந்தை இயேசு ஆலயத்துக்கு அருகே குறி வைக்கப்பட்டிருந்த கிளைமோரால் தாக்கப்பட்டு அடிகளார் கொல்லப்பட்டார். ஆலயத்தின் வாசலில் அடிகளாரின் பச்சை இரத்தம் ஓடியது.

"உயிரைக் கொடுக்கும் மட்டும் உங்களைச் நேசித்தேன்" என்ற வாக்கியம் அடிகளாரைப் பொறுத்தளவில் மகிழ்ச்சியுடன் நிறைவேறிற்று. வன்னியின் இதயப்பகுதியில் வந்து, ஆழ ஊடுருவி, ஒரு மக்கள் தொண்டனைக் கொல்லும் வல்லமை இலங்கை அரசாங்கத்திற்கு இருந்திருக்கின்றது. இதை அறியாமல் இருந்தார்களா, அறிந்தும் இயலாமல் இருந்தார்களா? இக்கேள்விகளை இப்போது கேட்டு என்ன பயன்?

அடிகளார் கொல்லப்பட்ட ஒரு வருட காலத்திற்குள்ளாகவே அவர் நேசித்த மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டு நந்திக் கடற்படுகையைச் சிவக்கச் செய்தார்கள். அடிகளாரின் மரணம் வரவிருந்த பேரழிவை முன்னறிவித்திருந்தது. குழந்தை இயேசுவின் ஆலய வாசலில் கருணாரத்தினம் அடிகளார் மரித்த தருணத்தில், தனது உயிரை முன்னொரு முறை காப்பாற்றிய அந்தச் சிங்கள இராணுவ வீரனின் முகம் அடிகளாரின் நினைவில் வந்து போயிருக்கக் கூடும்.



# இன்னொரு...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

ஏற்படுத்தவில்லை. ஆணுக்கு ஆணுடனும் பெண்ணுக்கு பெண்ணுடனும் ஈர்ப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு பாலியல் என்பது அவரவர் சுதந்திரம். ஆனால் திருமணம் அவசியமில்லை.

ரதன்: ஒரு பாலின தம்பதிகள் மத்தியில் கூட ஒருவர் ஆணாகவும் ஒருவர் பெண்ணாகவும் உள்ளார்கள். ஒருவர் ஆதிக்ககர்த்தாவாகவும் உள்ளார். இங்கும் சமநிலை பேணப்படவில்லை. நீங்கள் எவ்வாறு இதனைப் பார்க்கின்றீர்கள்?

சல்மா: ஒருத்தரையொருவர் சார்ந்து இருப்பது தேவையாக உள்ளது. அதனால் ஏற்பட்டது தான் இது.

ரதன்: விவாகரத்து கூட ஒருபாலின தம்பதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கனடாவில் திருமணம் செய்யாமல் குடும்பமாக ஒரே வீட்டில் இருப்பவர்களை Common Law என அழைப்பார்கள். இது சட்டரீதியாக இவர்களுக்கு பொருளாதார சமபங்கீட்டை வழங்குகின்றது. இதனை ஏன் மாற்றீடாக ஏற்கக்கூடாது

சல்மா: முதலில் சமூகம் இவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ரதன்: திருமண முறை உடைக்கப்படும் பொழுது ஆண்கள் குடும்பத்துக்கான பொருளாதார பங்களிப்பில் இருந்தும் பிள்ளை வளர்ப்பு போன்றவற்றில் இருந்தும் தப்பித்துக் கொள்கின்றார்கள். யமெய்க்கா போன்ற நாடுகளில் தாயும் பிள்ளைகளுமே குடும்பமாக கருதப்படுகின்றார்கள்.

சல்மா: ஆச்சரியமாக உள்ளது.

ரதன்: அரசு பிள்ளைகளை தனது பாதுகாப்பில் கொண்டுவரும் பொழுது பெண்கள் இதனிலிருந்து விடுவிக்கப்படுகின்றார்கள். இது சாத்தியமா?

சல்மா: பிள்ளை வளர்ப்பு என்பது தாய்மைக்குரியதாக பெண்கள் கருதுகின்றார்கள். இது உணர்வு சார்ந்தது.

ரதன்: கவிஞைகள் உடல் மொழிசார்ந்து கவிதையை படைக்கின்றார்கள். இதனை நான் வரவேற்கின்றேன். உங்களது கவிதைகள் கூட இதிலிருந்து மாறுபடவில்லை. ஆனாலும் பலத்த விமர்சனம் இருபாலினரிடமும் இருந்து வெளிப்படுகின்றது. உடல் மொழியின் முக்கியத்துவம் என்ன?

சல்மா: சங்க இலக்கியங்களிலும் உடல் மொழி சார்ந்து இலக்கியங்கள் படைப்புக்கள் உள்ளன. அவ்வையார் கூட பாடல்கள் பாடியுள்ளார். பெண்கள் உடல் பாரமாகவும் பாவமுமாக சமூகத்தில் பிரதிபலிக்கப்படுகின்றது. அப்படியில்லை. கவிஞைகள் தங்களது வலியை வெளிப்படுத்துவதற்கும் ஆத்திரத்தை வெளிப்படுத்துவதற்கும் உடல் மொழி அவசியமாகின்றது. மார்பு, முலை என்பன சாதாரண அங்கங்கள். இவற்றை கவர்ச்சியாக ஆணாதிக்க சமூகம் பார்க்கின்றது. பேசிப்பேசி உடைக்கப்பட வேண்டும் பெண் உடல் சார்ந்த வன்முறையை உடல் சார்ந்து தான் உடைக்க வேண்டும். எனது கவிதையொன்றில் "எல்லா அறிதல்களுடன் விரிகின்றது யோனி" என வருகின்றது.

ரதன்: பெண் போராளியாக ஒடுக்கு முறைகளுக்கு எதிராக போராடி வரும்



நீங்கள் திடீரென பெண் சமத்துவத்தை மேலோட்டமாகவே பார்க்கும் தி.மு.க வில் இணைந்து தேர்தலில் நின்றது ஏன்?

சல்மா: இது எனக்கு கிடைத்த சுதந்திரமாகவே பார்க்கின்றேன். என்னால் பல இடங்களுக்கு செல்லக் கூடியதாகவிருந்தது. பலரை சந்திக்கக் கூடியதாகவிருந்தது. எனது வெளியை இது அகலப்படுத்தியது. இதனை ஒரு செயல்பாட்டு களமாகவே பார்த்தேன். ஆனால் நிறைய வித்தியாசங்கள் தெரிகின்றது.

ரதன்: உங்களை கவிதைகள் கூட எழுத அனுமதிக்காத குடும்பம் எவ்வாறு தேர்தலில் நிற்க அனுமதித்தது?

சல்மா: கவிதை எழுதுதல் எனக்கு எனக்கேயானது. அதன் கருத்துக்கள் வலிமையானவை. தேர்தல் குடும்பத்துக் குரியது. குடும்பத்துக்கே வெளிச்சத்தை கொண்டு வரும். பொருளாதார ரீதியாகவும் குடும்பம் உயர்வடையும். எம்.எல்.ஏ தேர்தலில் வெகுகுறைவான வாக்குகளால் தோற்றேன். எனது கவிதைகள் மீது தேர்தல் காலங்களில் வைக்கப்பட்ட விமர்சனமும் எனது தோல்விக்கான ஒரு காரணம் என நினைக்கின்றேன்.

ரதன்: எங்களுடன் பொறுமையாக திறந்த மனதுடன் உரையாடியமைக்கு விளம்பரம் வாசகர்கள் சார்பாக நன்றி. மீண்டும் ஒரு முறை ரொரண்ரோ வரும் பொழுது விரிவாக உரையாடுவோம். நன்றி. சல்மா.

இயற்பெயர் ராசாத்தி ரொக்கையா. திருச்சியில் உள்ள துவாரஞ்குறுஞ்சி என்ற சிற்றூரில் பிறந்து 13 வயதில் திருமணமானார். 2001-2006 காலப்பகுதியில் துவாரஞ்குறுஞ்சி பஞ்சாயத்து தலைவராக இருந்தார். ஒரு மாலையும் இன்னொரு மாலையும் பச்சைத் தேவதை கவிதைத் தொகுப்புக்களையும் மற்றும் சிறுகதைகளையும் நாவல்களையும் எழுதியுள்ளார். இவரது கவிதைகளை உயிர்மை ஆசிரியர் மனுசிய புத்திரன் காலச்சுவடு பத்திரிகைக்கு அனுப்பிவைத்தார். அதன் மூலம் வெளி உலகிற்கு பரவலாக அறியப்பட்டார்.

இவரது நூல்கள் முருகன் புத்தகசாலை, வாழும் தமிழ் நூலகம் (416-731-1752) ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். ரொரன்ரோ நூலகங்களிலும் உள்ளன.




Higher Standards Agents.... Higher results!

Kumar Anandarajah

Sales Representative

Dir: 416.427.2521

E-mail: kumar175@hotmail.com



Listing Commission 1%

HomeLife/Future Realty Inc., Brokerage*

Bus: 905.201.9977 Fax: 905.201.9229

#205 - 7 Eastvale Dr., Markham ON, L3S 4N8

*Independently owned and operated

வீடு வாங்க விற்க

Assist you with defficult Mortgages approval, Home inspection & Lawyer Services Comptitive Ratest / Free

உங்கள் வீட்டை விற்க முன் என்னை அழையுங்கள் இலவச மதிப்பீட்டுக்கு!!!!

printhahomes@gmail.com

printhahomes.com

Cell: 416.836.3091

HomeLife / Future Realty Inc., Brokerage*

205-7 Eastvale Drive

Markham Ont, L3S 4N8

Bus: 905.201.9977

Fax: 905.201.9229



Printhini Nagaratnam

Sales Representative

*Independently owned & operated

$$$ Cash Back $$$

Rewards For Referrals

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்

SASI CHELVARATNAM

Sales Representative

Direct: 416.725.1125 / 416.858.4828

Bus : 416.321.6969

HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*

5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S OC2

*Independently Owned & Operated



"Let me help you make the right choice"

SchurenSriskandarajah B.A

Sales Representative

HomeLife/Future Realty Inc., Brokerage*

7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8



SCHUREN.CA • 416.333.9393



Low Mortgage Rates

Canada Trust

Supen Subramaniyam (Manager, Residential Mortgage)

416-844-8692 1-800-809-9154

supenthiran.subramaniam@td.com



ADVICE WHEREVER WHENEVER

Banking can be this comfortable



கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்

Buying Home Home Equity Line of Credit

Consolitation Existing Debts Refinancing

Switching your mortgage From another financial institute

Free Real Estate Class - Call: 416.321.6969

RealEstate / Mortgage / Commercial Investments

ROSSLAND




Bedrooms: 4
W/Rooms: 3

PICKERING




Bedrooms: 3
W/Rooms: 3

BRIMLEY & ELLESMERE




Bedrooms: 4
W/Rooms: 3

16 AVE & NINTH LINE




Bedrooms: 3
W/Rooms: 4

WARDEN & APPLE




Bedrooms: 4 + 2
W/Rooms: 4

KEELE & WILSON




Bedrooms: 4 + 2
W/Rooms: 3
Income Property
3 Units

Having difficulty of getting your Mortgage
Please Contact me

RE/MAX Dynasty Realty Inc.
Real Estate Brokerage



A. Anton Jeeva B.Eng

Hall Of Fame award Winner

Ranked among the top 1% of all Realtors in the GTA

Dir: 416.575.5055

Remax Dynasty Realty Inc., Brokerage
8 Shadlock St, Unit #7
Markham, ON L3S 3K9

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"

REAL ESTATE List Buy Sell

TOP 5%

SALES REPRESENTATIVES IN CANADA

CHAIRMAN'S CLUB AWARD WINNER 2012



HomeLife GTA Realty Inc., Brokerage

Raj Paramasamy Sales Representative

416-587-1619

raj.paramasamy@hotmail.com

Guaranteed Result


விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com


REALTY STUDIO
The Real People

சென்னை, கொடைக்கானல் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் நிலம், மனை, வீடு, விற்க, வாங்குவதற்கான தொடர்புகளுக்கு

416.315.9397 / realtystudio24@gmail.com

Every Story has a different Rate
What's Your's
Solution for every Mortgages

BonaFide

· New Mortagages · Refinance · First & Second Mortgages

New to Canada, Mortgage Switch, Self Employed
Pre-approvals, Residential & Commercial



Thayalan Gobalakrishnan

Mortgage Agent (GTA) Lic No:M12001612

Cell: 416.575.3211 / Fax:1.888.545.0462

E-Mail: thaya.gobal@gmail.com

தயாளன் கோபாலகிருஷ்ணன்

Call me for any Mortgage Financing Questions?